

கல்கி
KALKI
13.8.2000
ரூ. 5.00
"நான் அவதாரபுருஷனல்ல!"
— சிவசங்கர்பாபா

வீட்டின் பாதுகாப்பிற்கு



பாதுகாப்பான சமையலுக்கு



சமையல் கியாஸ் ஸ்டவ் (LPG கியாஸ் அடுப்பு) தரக் கட்டுப்பாட்டுக்கு உட்படவில்லை என்றால் அது மிகவும் ஆபத்தானது. தரக் கட்டுப்பாடுகளுக்காக முன்பு ISI என்ற பெயர் கொண்ட பியூரோ ஆப் இந்தியன் ஸ்டாண்டார்ட்ஸ் (BIS) அமைப்பானது, கியாஸ் ஸ்டவ் அடுப்புகளுக்காக மிகக் கடுமையான தர அளவுக் குறிப்புகளை நிர்ணயித்து, அதன் மூலம் கியாஸ் ஸ்டவ் அடுப்புகள் மிகவும் பாதுகாப்பாக இருக்க வழிவகை செய்துள்ளது.

அதனால்தான் கியாஸ் சிலிண்டர்களை விநியோகம் செய்யும் IOC, BP மற்றும் பல சிறந்த நிறுவனங்கள், பாதுகாப்பு நலன் கருதி ISI முத்திரை உள்ள கியாஸ் ஸ்டவ் அடுப்புகளையே அங்கீகரித்து அவற்றையே சிபாரிசும் செய்கின்றன.

SS பிரிமியர் கியாஸ் ஸ்டவ் அடுப்புகள் ISI அமைப்பின் மிகக் கடுமையான தரக் கட்டுப்பாட்டு சோதனைகளை வெற்றிகரமாகக் கடந்து ISI முத்திரையைப் பெற்ற பிறகே விற்பனைக்கு வருகின்றன.

ஏனென்றால் உங்கள் பாதுகாப்பில் எங்களுக்கு அக்கறை உண்டு.

SS பிரிமியர் கியாஸ் ஸ்டவ் சிறப்பு அம்சங்களைப் பாருங்கள்.

- துருப்பிடிக்காத பித்தளை பர்னர்கள் மூலம் பாத்திரத்தைச் சுற்றிலும் தீ ஜுவாலைகள் ஒரே சீராகப் பரவுகின்றன.
- மிகத் துல்லியமாக மோல்டு செய்யப்பட்ட நாபுகள் (குமிழ்) தீயை முற்றிலுமாக அணைத்துவிடுகின்றன.
- ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சுபிரேம் கீழே மறைவாக உள்ள கனெக்டர் பைப்புகள், குறிப்பிட்ட சிறந்த தரமான உலோகங்களால் தயாரிக்கப்பட்டவை.
- வழிவதைத் தாங்கும் தட்டுகள் (spill trays).
- ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சுபிரேம், மிக உயர்ந்த தரமான ஸ்டீல் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்டதாகும்.

விற்பனைக்குப் பிந்தைய எங்களுடைய சேவை, உடனடியாகச் செயல்படுவதற்கும், தரமான சேவைக்கும், குறித்த காலத்தில் தேவைகளை நிறைவேற்றுவதற்கும் புகழ் பெற்றதாகும்.

சிறிதே விலை குறைவான, மலிவான தயாரிப்பை வாங்கி, உங்கள் பாதுகாப்பை விட்டுக் கொடுப்பீர்களா? அது உங்களுக்கே ஆபத்து அல்லவா?

ISI முத்திரை கொண்ட, பாதுகாப்பான பிரிமியர் தயாரிப்பையே வாங்குங்கள்.

பிரிமியர்
கியாஸ் ஸ்டவ்

TAS VISION P 626/00



பச்சை நிறமே பச்சை நிறமே...

இந்தக் கிளின்டனுக்கு மோனிகாவையும் தெரியாதாம், ஹிலாரியையும் தெரியாதாம். நம்பித்தானாக வேண்டும். ஏனென்றால் இது 'வயசான இளைஞர்' கிளின்டனில்லை. வயசாகாத இளைஞர் (24) பாடகர் கிளின்டன். புனைபெயரோ, காரணப் பெயரோ அல்ல. இயற்பெயரே கிளின்டன் ஸர்கோதான்.

சொந்த ஊர் என்னமோ சுற்றுலாப் பிரியர்களின் சொர்க்கமான கோவா! ஆனால் அதன் செயற்கை கவர்ச்சிகளைத் தவிர்த்துவிட்டு, இயற்கை எழிலின் தெய்வீகத்தை மட்டுமே சுவீகரித்துக் கொண்டிருக்கிறார். ஆம்! எக்கச்சக்க பக்திமான்! வீடு - ஸிம்பாலிக்காக- மாஹிம் சர்ச்சின் பக்கத்தில் தானிருக்கிறது.

அப்பா, ஈஸ்ட் இண்டியன் கம்பெனி காலத்துப் போர்த்துகீசிய வர்க்கம். அம்மா ஃபிரெஞ்சில் பி.எச்.டி. சகோதரர் இஞ்சினியர். சகோதரி டாக்டர், போதார் காலேஜில் காமர்ஸ் படித்துக் கொண்டிருந்த கிளின்டனும், குடும்ப 'ஜீன்ஸ்' படி, எம்.பி.ஏ. படிக்கப் போவதாகத்தானிருந்தார். இசையை ஒரு தொழிலாகக் கொள்வதான நினைப்பே இல்லை.

சில நண்பர்கள், இவருக்கிருந்த இசையார்வத்தையும், பாடும் திறனையும் கண்டு, இவரை க்ளென் டிசௌசாவின் இசைக் குடும்பத்துக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள். அவருக்காக என்று இவர் 'காஸ்பெல்' இசைத்துக் கொண்டிருந்தபோது, பிரபல விளம்பரப் பாடகியான டிசௌசாவின் மனைவி மெர்லின், இவர் குரலால் ஈர்க்கப்பட்டு விளம்பரப் படப் பாடல்கள் பாட அழைத்திருக்கிறார்.

"எனக்கு முறையான சங்கீதப் பயிற்சி ஒன்றும் கிடையாது. மேல் நாட்டு சங்கீதத்தைக் கேட்டுக் கேட்டு "ஃபாரின் குரு"க்களைத்தான் என் மானசிகக் 'குரு'க்களாக்கிக் கொண்டேன். கிபோர்டை வைத்துக் கொண்டு நானே வாசித்துக் கொண்டிருப்பேன். சினிமா இசையில், புதிதாக எதையாவது அறிமுகப்படுத்த வேண்டும் என்ற தாகம் இருந்தது. எனது எண்ணங்களின் சங்கமம் ரஹ்மானுக்குப் பிடித்திருந்ததால் 'ஃபயர்' படத்தின் 'டைட்டில் ஸாங்'கை எனக்குப் பாடத் தந்தார். 'தக்ஷக்'கிலும் அவருடன் பணியாற்றும் அரிய வாய்ப்பு கிட்டியது. இப்போது ஒரு வருடமாகத்தான் 'சாஸ்திரிய இசை' கற்று வருகிறேன்" என்றவரிடம், "தமிழில் முதல் 'ப்ரேக்' என்ன?" என்றோம்.

"அலிபாய்டே" என்றார்.

மராத்தியப்படமா, கோவனீஸ் படமா என்ற சந்தேகத்தில் மீண்டும் "டமீலில்" என்றவுடன், "மணிரத்னம் சாரின் அலிபாய்டே" என்று அவர் வலியுறுத்தவும்தான், செவியில் 'அலைபாய்ந்தது'. ஹரிஹரனுடன் இணைந்து பாடிய 'பச்சை நிறமே'தான் முதல் தமிழ்ப் பாடலாம்.

"பாடல் வரிகளை எல்லாம் ஆங்கிலத்தில் எழுதிக் கொண்டு, அர்த்தத்தைத் தெரிந்து வைத்துக் கொள்வேன். இது 'பாவ'ங்களைக் குரலில் ஏற்றி, உணர்ச்சிபூர்வமாகப்

கல்கி இன்டர்நெட் முகவரி : www.kalkiweekly.com ஈ மெயில் : kalkiweekly@vsnl.com

பாடுவதற்கு உதவியாக இருக்கும்" என்கிறார்.

தொழில்நுட்ப முன்னேற்றமடைந்து விட்ட இன்றையச் சூழலில், இசைத் துறையில் பிரகாசிக்கப் பெரும் திறமை வேண்டாம் என்பதை ஒப்புக் கொள்கிறார்.

"அந்தக் காலத்தில் ஒரு சில பின்னணிப் பாடகர்கள்தான் இருந்தார்கள். ஆனால், அவர்கள் காலத்தால் அழிக்க முடியாத, நிலைத்த பிராபல்யத்தை அடைந்தார்கள். இன்றோ 'பிட்ச்' கரெக்ஷனைக் கூட கம்ப்யூட்டர் செய்துவிடுகிறது. சுமாரான குரல்களைக்கூட பிரமாதமானதாக மாற்றிக் காட்டி விடுகிறது. அதனால் பின்னணி பாடுபவர்களும், அந்தக் காலத்தவர்போல், இதயபூர்வமாகப் பாடுவதில்லை. இதனாலேயே இன்று, புற்றீசல் போல் பல புதுப் பாடகர்கள் கிளம்பியிருந்தாலும், நிலைத்து நிற்பவர்கள் ஆத்மார்த்தமாக இசைக்கக் கூடிய ஒரு சிலரே" என்கிறார்.

கிளின்டனின் லட்சியம் முதல் தரமான இசையமைப்பாளராக ஆக வேண்டுமென்பது.

"எனக்கு மிகவும் பிடித்த இசையமைப்பாளர் ரஹ்மான். எதிர்காலத்தில், அவரைப் போலவே, அற்புதமான இசையை மக்களுக்கு வழங்க வேண்டுமென்று ஆசை நிறைய இருக்கிறது. மேடையேறிக் கலக்குவதைக் காட்டிலும், மேடைக்குப் பின் செய்யும் அமைதியான பணிகளில்தான் ஆர்வம் அதிகம்" என்கிறார்.

சமீபத்தில் ஷியாம் பெனகல் படப் பாடல் பதிவுக்கென்று சென்னை வந்து திரும்பியிருக்கும் இவருக்கு, ரஹ்மானுடன் விரைவிலேயே நியூயார்க் செல்லும் வாய்ப்பிருக்கிறது.

அது சரி. இந்தக் கிளின்டன் வாழ்வில் ஹிலாரி யாரேனும் உண்டா?

"ம்... ம்..." என்று வெட்கப்படுகிறார்.

"ரஹ்மான் குழுவில் பாடி வரும் டாமினிக் என்ற பெண்ணை நான் விரைவில் மணமுடிக்க இருக்கிறேன். ஆனால் நிச்சயமாக வேறு லெவின்ஸ்கிகள் கிடையாது" என்கிறார் கிளின்டன்.

- ஜெயஸ்ரீ ராஜ்

ஆடாத, பாடாத மாதவன்!



சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் 'அதிரடி அட்டகாசம்' என்ற பெயரில் அனுராதா ஸ்ரீராம், சரண், ஸ்ரீனிவாஸ் உட்பட ஏராளமான ஸ்டார் பாடகர்களை வைத்து அண்மையில் ஒரு இசை நிகழ்ச்சி நடத்தினார் சாதகப் பறவைகள் சங்கர்.

"இன்டோர் கேம்ஸுக்காக கட்டப்பட்ட அரங்கில், இசை நிகழ்ச்சி நடத்துவது சரியா? ஒத்து வருமா?" என்று கேட்டபோது, சங்கர் சொன்னார். "இந்த உள் அரங்கில் இசை நிகழ்ச்சி நடத்துவது எங்களுக்கு இது முதல் தடவை இல்லை. இது எங்களின் ஆறாவது நிகழ்ச்சி. எல்லாமே ஹவுஸ் புல் நிகழ்ச்சி. (அரங்கின் கொள்ளளவு பன்னிரண்டாயிரம்) அரங்கில் உள்ள கிரவுண்டுக்கு எந்தவித சேதமும் இன்றி நிகழ்ச்சிகள் நடந்துள்ளன. மியூஸிக் அகாடமி, காமராஜர் அரங்கு என்றால், ஒலி ஏற்பாடுகள் செய்வது சுலபம். இங்கே ரொம்ப கஷ்டம். ஏகப்பட்ட ஸ்பீக்கர்கள் வைத்தாக வேண்டும். எங்கு அமர்ந்திருந்தாலும், சரியாய்க் கேட்காமலும் போகக் கூடாது. இரைச்சலாகவும் இருக்கக் கூடாது. அதற்கேற்ப ஒலி அமைப்பு செய்ய வேண்டும். அது எங்களுக்குப் பழகிவிட்டது."

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினரான 'அலைபாயுதே' மாதவன். பாடச் சொன்னபோது 'பாடத் தெரியாது' என்றார். சரி, மற்றவர் பாட்டுக்கு ஆடுங்கள் என்றால், 'ஆடத் தெரியாதே' என்றார். 'சரி! பேசுங்கள்' என்றபோது வேறு வழியின்றி, இரண்டு வரி பேசி, ரசிகர்களுக்கு வாழ்த்துச் சொன்னார். ரசிகர்களுக்கு ரொம்பவே ஏமாற்றம்!

- ராம்

உலகின் முதல் வாசனை திரைப்படம்
– செய்தி



"என்னய்யா இது படம் ஆரம்பிக்கிறதுக்கு முன்னாடியே வாசனை வீசுது?"

"இது போன காட்சியோட வாசனை சார்!"

மானேஜர் : சத்தியமா தீ விபத்தில்ல சார், வாசனை திரைப்படம் காட்டறோம். அதான் புகை.

தீயணைப்பு அதிகாரி : நோ! நெருப்பில்லாம புகையாது. நாங்க தண்ணீர் அடிப்போம். எங்க கடமை.





"சீனுக்கு சீன் புகையை விரட்டத்தான் ரிட்சஸ Exhaust Fan போட்டோம். இப்படி எதிர்பார்க்கல சார்.

"வாசனைப் படம் போட்டது நல்லதாப் போச்சு."

"ஏன்?"

"பைசா செலவில்லாம தியேட்டர்ல இருந்த மூட்டைபூச்சி, கொசு எல்லாம் காலி."



மாதுரி

எந்த வயதிலும்

ஓய்.எம்.சி.ஏ. கால்ஃப் கிரவுண்டில் ஒரு டோர்னமெண்ட்டை முடித்துவிட்டு வந்த அவரை மணப்பாக்கத்திலுள்ள அவரது இல்லத்தில் சந்தித்தோம்.

அழகான பாய்கட். கொஞ்சூண்டு நீண்ட மூக்கு. தெறிக்கும் கண்கள். எப்போதும் நிழலாடும் புன்னகை. பேசத் தூண்டும் முகம். பதினாறு வயதுக்கான குறுகுறுப்பு. பிரக்யா மிஸ்ரா. இந்திய கால்ஃப் ஜூனியர் அணியில் (பெண்கள் பிரிவு) இடம் பெற்றிருக்கும் இளம் மங்கை.


"ஜெய்ப்பூர் தான் சொந்த ஊர். ஐந்து வருஷத்துக்கு முன்னால சென்னைக்கு வந்தோம். ஒய்.எம்.சி.ஏல டென்னிஸ் ஆடிட்டிருந்தேன். திடீர்னு அந்த டென்னிஸ் கோர்ட்டை மூடிட்டாங்க. (இப்போது இருக்கிறது). வேற ஏதாவது விளையாடணும்னு நினைச்சதும் அப்பாதான் ஞாபகத்துக்கு வந்தார். அவர் கால்ஃப் ப்ளேயர். நானும் கால்ஃப் ஆடப் போறேன்னு சொன்னேன். சரின்னுட்டார். அவரோடவே ஒய்.எம்.சி.ஏ. கால்ஃப் மைதானத்தில் போய் ப்ராக்டீஸ் பண்ண ஆரம்பிச்சேன். இப்ப முழு நேரமும் கால்ஃப் தான்." என்று புன்னகை செய்துவிட்டு சிறிது நேரம் மௌனம் காத்தார். பிறகு அவரே ஆரம்பித்தார்.

"இந்த விளையாட்டைப் பொறுத்தவரை ஆடுறவங்களை விட காடி (caddy) தான் (மட்டைகளைக் கொண்ட பையைத் தூக்கிக் கொண்டு வருபவர்) முக்கியம். ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால ஒரு பெண் இருக்கிறாங்கன்னு சொல்ற மாதிரி ஒவ்வொரு ப்ளேயரின் வெற்றிக்குப் பின்னாலயும் காடி இருக்காங்க! மைதானத்தின் நீளம், அகலம், ஸ்ட்ரோக், மண் தன்மை எல்லாம் அவங்களுக்கு அத்துபடி. ஒரு டோர்னமெண்ட்ல நாம ஜெயிச்சா அவங்களுக்கு ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் பணம் கொடுக்க வேண்டியிருக்கும்" என்கிறார் பிரக்யா.

இரண்டு வருடங்களுக்கு முன்பு இந்திய கிரிக்கெட் வீரர்களுக்குப் பயிற்சி கொடுப்பதற்காக சென்னை வந்த சோபர்ஸுடன் தாம் கால்ஃப் ஆடியதைப் பசுமையான நினைவு என்கிறார் இவர். "அவரோட பேசிட்டிருந்தா நேரம் போறதே தெரியாது. நகைச்சுவையை அள்ளி விடுவார்." என்று சர்ட்டிபிகேட் கொடுக்கிறார்.

இங்கு கிரிக்கெட் மட்டையைத் தூக்கிக் கொண்டு அலைவது மாதிரி, அமெரிக்காவுல வீட்டுக்கு ஒருவர் கால்ஃப் ப்ளேயராக இருப்பார்களாம். இந்தியாவில் இதற்கு அதிக முக்கியத்துவமில்லை என்கிறார் பிரக்யா.

"இந்த விளையாட்டைப் பொறுத்தவரை மூளைக்குத்தான் வேலை. கவனம் ரொம்ப அவசியம். மொத்தம் பதினெட்டு ஹோல்கள். ஒவ்வொரு குழிக்குள்ளேயும் பந்தைத் தள்ள நான்கு வாய்ப்பு. மொத்தம் எழுபத்திரண்டு வாய்ப்பு. இதுக்குள்ள ஜெயிக்கணும். புதுசா பார்க்கறவங்களுக்கு இந்த விளையாட்டு போர் அடிக்கற மாதிரிதான் தெரியும். விளையாட ஆரம்பிச்சுட்டா சுவாரஸ்யம்தான்" என்று சொல்லும் பிரக்யா, ஆகஸ்ட் பதினான்காம்



• பெற்றோருடன் பிரக்யா மிஸ்ரா

தேதி மலேஷியாவில் நடக்கும் 'மலேஷியன் ஓபன் பெண்கள் கால்ஃப் டோர்னமெண்டில் கலந்து கொள்ள இருக்கிறார். இந்த வாய்ப்புக்காகத் தென்னிந்திய பெண்

ஆடலாம்!

கள் கால்ஃப் அசோசியேஷனுக்கும், கோச் பிரதாப்புக்கும் நன்றி சொல்கிறார்.

பிரக்யாவுடன் பேசிக் கொண்டிருக்கும் போதே இடையில் வந்து தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டார் அவர் தந்தை ஏ.என். மிஸ்ரா. இந்திய விமானப்படையின் முன்னாள் அதிகாரியான இவரின் ஒவ்வொரு அசைவும் அப்படியே வாசிம் அக்ரத்தை ஞாபகப்படுத்து கிறது. இதுபற்றிக் கேட்டால் பலமாகச் சிரிக் கிறார் அவர். "என்னோட நண்பர்கள் எல்லா ருமே அப்படித்தான் சொல்றாங்க. ஒரு தடவை பிரக்யாவோட அவ படிக் கிற நேஷனல் ஓபன் ஸ்கூலுக்குப் போனேன். பிரக்யாவோட





நண்பர்கள் எல்லாம் என்னைப் பார்த்துட்டு அக்ரமானு கேட்க, அப்புறம் வாசிம் அக்ரம் பொண்ணுன்னே பிரக்யா வைக் கூப்பிட ஆரம்பிச்சுட் டாங்க" என்கிறார். கால்ஃபில் LPGA-US தான் பெரிய டோர்னமெண்டாம். இந்தியாவின் சார்பில் இதில் கலந்து வென் றிருக்கிற ஒரே பெண் மணி ஸ்ம்ருதி மேரா மட்டும்தான். அவருக்கு அடுத்தபடியாய் இதுவரை யாரும் இல்லை. அதை வெல்வதுதான் தமது கனவு என் கிறார் இந்த ஈரெட்டு வயதினாள்.

''ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு டென்னிஸ் ஆட முடியாது. ஆனால் கால்ஃப் அப்படியில்லை. வயதானாலும் ஆடிக் கொண்டே இருக்கலாம். என் கனவு நனவாகும்" என் கிறார் முத்துப் பற்கள் தெரிய சிரித்தபடி.

"ஆமா.. இந்திய ஜூனியர் அணியில் இடம் கிடைத்தது பற்றிச் சொல்லவே இல்லையே" என்றால் மீண்டும் சிரிப்பு!

''இதுல கிரிக்கெட் அல்லது மற்ற விளையாட்டுகள் மாதிரி அவ்வளவா போட்டி இல்லை. ஆண்கள் பிரிவிலாவது ஓரளவு போட்டி இருக்கும். பெண்கள் பிரிவில் அப்படி இல்லை. நல்லா ஆடினா நிச்சயம் தேர்வு செய்யப்படலாம்'' என்றார். இப்போது புரிந்தது அந்த சிரிப்புக்கான அர்த்தம்!

அப்பு

படங்கள் : ஐரிஸ்

குரோர்பதி கலாட்டா!

ஸ்டார் டீ.வி.யில் அமிதாப்பச்சன் நடத்தும் 'கௌன் பனேகா குரோர்பதி' என்ற நிகழ்ச்சி சூப்பர் ஹிட். திங்கள் முதல் வியாழன்வரை இரவு ஒன்பது மணிக்கு ரசிகர்களைச் சின்னத்திரை முன் கட்டிப் போடுகிறது இந்த நிகழ்ச்சி என்றால், திரையில் தோன்றும் அமிதாப் மட்டுமில்லை, பின்னால் இருந்து ஆட்டுவிப்பவரான



சித்தார்த்த பாசுவ்வுதான் காரணம்.

இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க விரும்புபவர்கள், மும்பை, டெல்லி, பெங்களூர் போன்ற நகரங்களில் குறிப்பிட்ட எண்களுக்கு ஃபோன் செய்து, தங்களைப் பதிவு செய்து கொள்ள வேண்டும். இப்படிப் பதிவு செய்து விட்டு, நிகழ்ச்சியில் பங்கேற்க ஆவலுடன் காத்திருக்கும் ரசிகர்களுக்குத் திடீரென்று ஃபோன் வருகிறது. ஸ்டார் டீ.வி.யின் நிகழ்ச்சி நிர்வாகி பேசுவதாகவும், "நிகழ்ச்சியில் பங்கேற்க முதல்கட்டமாகச் சில கேள்விகளை இப்போது கேட்போம். அதற்கு உடனடியாக பதிலளித்தால், அடுத்த கட்டத் தேர்வுக்கு அழைப்பு வரும்" என்று கூறி, சில கேள்விகளைக் கேட்பார் மறுமுனையில் இருப்பவர். இவர்களும் பதில் சொல்லுவார்கள்.

'திருப்திகரமாய் பதில் சொல்லவில்லை. அடுத்த தடவை முயற்சி செய்யுங்கள்' என்றோ, "கங்கராஜுலேஷன்ஸ். விரைவில் அடுத்தக்கட்ட தேர்வுக்கு அழைப்பு வரும்" என்றோ சொல்லப்படும். ஆனால், இந்த அப்பாவி ரசிகருக்கு, இவரிடம் முதல்கட்டத் தேர்வு நடத்தியவர் ஸ்டார் டீ.வி. நிகழ்ச்சி நிர்வாகி இல்லை. யாரோ ஒரு கிண்டல் பேர்வழி என்பது தெரியாது.

இன்னும் சிலருக்கு "நீங்கள் அமிதாப்பின் நிகழ்ச்சியில் பங்கேற்கத் தேர்வாகி இருக்கிறீர்கள். மும்பை பிலிம் சிட்டியில் நாளை காலை பத்து மணிக்கு ஷூட்டிங். நேரடியாக, குறித்த நேரத்துக்கு வந்து விடுங்கள்" என்று அழைப்பு வரும், டெலிபோனில் இவரும் அதை நம்பி, மறுநாள் அமிதாப்புடன் டீ.வி. நிகழ்ச்சியில் பங்கேற்கும் கனவுடன் போவார். அங்கே போனவுடன் தான் தன்னை யாரோ ஏமாற்றிவிட்டது தெரிய வரும். இதுபோல நிறைய பேர் பிலிம் சிட்டிக்கு நேரில் வந்து, ஏமாந்து திரும்புகிறார்கள்' என்கிறார் ஸ்டார் டீ.வி. அலுவலர் ஒருவர்.

இவற்றையாவது யாரோ சிலரது கிறுக்குத்தனம் என்று ஒதுக்கிவிடலாம். இன்னும் சில ஏமாற்றுப் பேர்வழிகள் இருக்கிறார்கள். அமிதாப் படம், ஸ்டார் டீ.வி. முத்திரை போட்ட கடிதம் சகிதம் நேரில் வந்து சந்தித்து, நுழைவுக் கட்டணம் என்று கூறி பணம் பறிப்பது இவர்கள் ஸ்டைல்.

மக்களை முட்டாளாக்குவது, பணம் பறிப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டிருப்பவர்கள் சிலர் பற்றிய விவரங்கள் ஸ்டார் டீ.வி. வசம் கிடைத்துள்ளதாம். இதுபற்றி சட்டப்படி நடவடிக்கை எடுக்கும் முயற்சியில் இறங்கியுள்ளது ஸ்டார் டீ.வி.

இந்த கலாட்டாவுக்குப் பிறகு இந்நிகழ்ச்சியின் எபிசோடிலும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும், நிகழ்ச்சியில் நேயர்கள் பங்கேற்பது எப்படி? என்று ஐந்து முறை அறிவிப்பு செய்கிறார்கள். அந்த அறிவிப்பைச் செய்பவர் : சாட்சாத் பச்சன்தான்!

- மானஸா.

குறுகிய காலத்தில் மிகப் பெரிய பக்தர் கூட்டத்தை உருவாக்கிக் கொண்டவர் சிவசங்கர்பாபா. சாட்டிலைட் தொலைக்காட்சிகளின் உபயத்தில் வீடுதோறும் காலை வேளைகளில் வலம் வருபவர். மற்ற ஆன்மிகவாதிகளைப் போலக் கடவுளைப் பற்றி மணிக்கணக்கில் பேசாமல் 'நானே கடவுள்' என்று அறிவித்து, கடவுள் உருவ வேடம் பூண்டு கற்பூர ஆரத்தியெல்லாம் ஏற்பவர். சென்னையை அடுத்த நீலாங்கரையில் உள்ள இவரது 'சம்ரக்ஷணா' என்கிற ஆசிரமத்தில் பல சுயதொழில் வகுப்புகள் இலவசமாக நடத்தப்படுகின்றன. வேத வகுப்பு முதல் போட்டோஷாப் வகுப்புகள் வரை அவரவர் திறமை, விருப்பத்துக்கேற்ற வகுப்புகள் நடத்தப்படுவதுடன் தொழில் வாய்ப்புகளும் பெற்றுத் தரப்படுகின்றன. இதனால் குவிகிறது இளைஞர்கள் கூட்டம். சிவசங்கர்பாபாவை ஒரு மாலை வேளையில் சந்தித்து இரவு வரை பேசினோம். கோபமூட்டக்கூடிய கேள்விகளுக்குக் கூட சிரித்துக் கொண்டே பதில் சொன்னவிதம் ரசமாக இருந்தது. பேட்டியிலிருந்து :



"திடீரென்று ஒருநாள் சிவ சங்கர் பாபா என்ற பெயருடன் ஆன்மிகத் துறையில் குதித்து விட்டீர்கள். உங்கள் பூர்வீகம் எது? முன்னணி பின்னணி விவரங்களை முதலில் கூற முடியுமா?"

"வட ஆற்காடு மாவட்டத்தில் ஆலங் காயம் என்ற கிராமம்தான் என் சொந்த ஊர். என் தந்தை ஒரு பள்ளி ஆசிரியராகப் பணியாற்றி வந்தவர். நான் படித்தது, பெரியநாயக்கன் பாளையத்திலுள்ள ராம கிருஷ்ணா வித்யாலயத்தில். பிறகு பி.எஸ்ஸி. வேதியியல் படித்து விட்டுச் சென்னை வந்தது 1968ல். 78 வரை இங்கே ஒரு பெரிய தனியார் நிறுவனத்தில் ரீஜனல் மானேஜராகப் பணியாற்றினேன். அது ஒரு டிரான்ஸ்போர்ட் நிறுவனம். பிறகு சொந்தத் தொழில் தொடங்கி வெற்றிகரமாக நடத்தினேன்.

டிரான்ஸ்போர்ட் நிறுவனத்தில் பணியாற்றிய அனுபவம் அதற்கு மிகவும் உதவியது. தென்னிந்தியா முழுவதிலும் பல பெரிய நிறுவனங்களுடன் நல்ல தொடர்பு இருந்தது எனக்கு. மாதவரத்தில் ஒரு 'பப்ளிக் வேர் ஹவுஸ்' அமைத்து, யார் வேண்டுமானாலும் தம் சரக்குகளை அங்கே பாதுகாக்க வழிசெய்தேன். இந்தக் காலகட்டத்தில் பல்வேறு சமூக, தொழில் அமைப்புகளின் உயர் பதவியிலும் இருந்தேன். ஏராளமான வருமானம். அண்ணா நகரில் ஒரு பெரிய பங்களா கட்டினேன். அந்தப் பகுதியிலேயே சினிமாக்காரர்கள் படப்பிடிப்பு நடத்த விரும்பிய ஒரே பங்களா என்னுடையது தான். உறவைக் காத்த கிளி, தலையணை மந்திரம் என்று ஏராளமான படங்கள் அங்கு எடுக்கப்பட்டன. இதன் மூலமும் எனக்கு எக்கச்சக்க வருமானம். வருமானத்துக்குப்

சிவசங்கர்பாபா பேட்டி

'நான் அவதாரபுருஷனல்ல!''



போட்டியாக என் சமூக அந்தஸ்தும் உயர்ந்து கொண்டே போனது. அப்போது தான், 'ஒரு சாதாரண பள்ளி ஆசிரியரின் மகனான நமக்குக் கடவுள் இத்தனை உயர்ந்த ஸ்தானம் கொடுத்திருக்கிறாரே, நாம் ஏதாவது செய்ய வேண்டாமா' என்று தோன்றியது...''

''அதனால்தான் சாமியாராகி விட்டீர்களா?''

''இல்லை. ஆன்மீக வாழ்வு பற்றிய சிந்தனை கூட அப்போது இல்லை. நான் செய்த ஒரே காரியம், அண்ணாநகரில் ஒரு ஐயப்பன் கோயில் கட்டியதுதான். அந்தக் கோயில் கட்டி முடித்து, நல்லபடியாகக் கும்பாபிஷேகம் செய்தோம். கும்பாபிஷேகம் முடிந்து சரியாக நாற்பத்தெட்டாவது நாள் எனக்கு ராகவேந்திர சுவாமி காட்சி தந்தார்.''

''பகலிலா? இரவிலா?''

''இரவுதான். நல்ல உறக்கத்திலிருந்த அதிகாலைப் பொழுது.''

''அதாவது, உங்கள் கனவில் ராகவேந்திரர் வந்தார்?''

''இல்லை. அது கனவில்லை. நிஜமான தரிசனம். உயிரும் உடலுமாக அந்த மகானை என்னருகில் கண்டேன். பிரமையே இல்லை. அது ஒரு பேருண்மை.''

''நீங்கள் ராகவேந்திரர் பக்தரா?''

''அதுவுமில்லை. ஒரே ஒருமுறை மந்திராலயம் சென்றிருக்கிறேன் என்பதைத் தவிர வேறு விசேஷமாக ஏதுமில்லை. ஆனால் பொதுவாகவே நிரம்ப தெய்வ பக்தி உள்ளவன். பல கோயில்களுக்கு அடிக்கடி செல்வேன். பல துறவிகளைச் சந்தித்திருக்கிறேன். 84ம் வருடம் அந்த ராகவேந்திரர் தரிசனம் ஆகும் வரை நானும் எல்லாரைப் போலவேதான் இருந்தேன்.''

''சரி, ராகவேந்திரர் வந்து உங்களிடம்

என்ன சொன்னார்?"

"என்னைக் கூப்பிட்டு அருகே நிறுத்திக் கொண்டவர், கீழே கைகாட்டி, 'பார், உன் பிணத்தை நீயே பார்' என்று சொன்னார். நான், என் கண்களால் என் இறந்த உடலைக் கண்டேன்! அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. என் உடலிலிருந்து ஒரு பாம்பு வெளியேறி பழனி ஆண்டவர் திருமேனி அருகே, இடதுபுறம் போய் நிற்கிறது. அப்படியே, அங்கேயே அது உருகி, ஒரு தங்க மயமான சித்தர் உருவானார். அவர் என்னிடம், 'பௌர்ணமிக்கு எட்டு ரூபாய்; பதினொரு பௌர்ணமி' என்று சொல்லி விட்டு இரு மந்திரங்களை உபதேசித்தார். ஒன்று முருகர் தொடர்பானது. மற்றது வெங்கடாஜலபதி தொடர்பானது. இச்சம்பவம் நடந்தவுடனேயே எனக்குப் புற உலக விஷயங்களின்பால் அதுவரை இருந்து வந்த ஈர்ப்பு போய் விட்டது."

"பெரிய பிஸினஸ்மேனாக, பல தொழில் விற்பன்னர்களோடு பேசி, புத்திசாலித்தனமாகக் காரியங்களைச் சாதித்துப் பொருளீட்டக்கூடியவராக இருந்ததாகச் சொல்கிறீர்கள். பகுத்து ஆராயும் சித்தமில்லாமல் இதெல்லாம் சாத்தியமில்லை. உங்களுக்கு அனுபவமாக ஏற்பட்டதாக நீங்கள் கூறும் இச் சம்பவங்கள் வெறும் பிரமை அல்லது கனவே என்று தோன்றவேயில்லையா? அல்லது யாரும் எடுத்துச் சொல்லவில்லையா?"

"கனவு என்றுதான் பலரும் சொன்னார்கள். ஆனால் என் அனுபவத்துக்கு என்னை விட வேறு சிறந்த சாட்சி யார்? அது பிரமை அல்ல; கனவல்ல. உண்மை. அந்தச் சம்பவத்துக்குப் பிறகு நான் வீடு தங்கவில்லை. இலக்கில்லாமல் கால் போனபடி திரிய ஆரம்பித்து விட்டேன். ஆள் வாசமற்ற மகேந்திரகிரிக் காடுகளில் தன்னந்தனியாக அலைந்து திரிந்திருக்கிறேன். மலைக் குகைகளில் தியானம் செய்வேன். இறைவனைத் தவிர வேறு நாட்டம் இல்லாமலாகி விட்டது. அந்தச் சமயத்தில் நிறைய மகான்களைச் சந்தித்தேன். திருவண்ணாமலையிலும் பொள்ளாச்சி அருகே உள்ள புரவிபாளையம் மடத்திலும் இருந்த மகான்களைச் சந்தித்தபோது, என்னைப் பற்றி அவர்கள் சொன்ன கருத்துகள் என் தேடலின் நோக்கத்துடன் பொருந்துவதாகவே இருந்தன."



"அப்படி என்ன சொன்னார்கள்?"

"நான்தான் ராமகிருஷ்ண பரமஹம்சராக முன்பு பிறந்தவன் என்று கோடி சுவாமிகள் சொன்னார்."

"நிஜமாகவா?"

"ஆமாம். நான் பகவானின் அம்சம் என்பதை அவர் கண்டுகொண்டார். காஞ்சி பரமாச்சாரியாரும் என்னை 'மகாஜோதி' என்று குறிப்பிட்டிருக்கிறார். திருவண்ணாமலை யோகி ராம்சுரத்குமார், 'Sivasankar has gone to greater level than Aurobindo and Chaithanya என்று குறிப்பிட்டிருக்கிறார்."

"நீங்கள், நான்தான் கடவுள் என்று கூறிக் கொள்கிறீர்கள். நமது கடவுள்கள் எல்லோருக்குமே மனைவி, குழந்தைகள் உண்டு. உங்களுக்கும் திருமணமாகி, வாரிசுகள் பிறந்த பிறகுதான் ஆன்மிக நாட்டம் வந்திருக்கிறது. ஆனால், வீட்டை, மனைவி மக்களை விட்டு விட்டு ஓடியிருக்கிறீர்கள். உலகைக் காக்கும் பரம்பொருளாகத் தன்னைக் கூறிக் கொள்பவர் தன் சொந்தக் குடும்பத்தை அம்போவென்று விட்டு விட்டு ஓடுவதுதான் ஆன்மிகமா? ஒரு வார இதழ் பேட்டியில் உங்கள் மனைவி கூட மிகவும் வருந்திப் புலம்பியிருந்தாரே?"

"நான் ஒன்றும் விட்டு விட்டு ஓரேயடியாக ஓடவில்லை. என் ஞானத் தேடலின் இடையே நான்கு வருடங்கள் கழித்து ஒருநாள் ஒரு சங்கேதக் குறிப்பு கிடைத்தது. அப்போது நான் திருவண்ணாமலையில் இருந்தேன். 'மறுபடியும் இல்லற வாழ்க்கைக்குப் போ. கடனைத் தீர்க்காவிடில் மறுபடியும் பிறப்பு இருக்கும்' என்றொரு குறிப்பு கிடைக்கவே, மீண்டும் வீட்டுக்குப் போனேன். ஆனால் நிலைமை அங்கே மிக மோசமாகியிருந்தது. தொழில் முற்றிலும் குலைந்து போய் விட்டது. மீட்க முடியாத விளிம்பில், அதுவரை நான் சேர்த்த அத்தனை செல்வமும் செழுமையும் காணாமல் போய் விட்டிருந்தது. இருப்பினும் சிறியதொரு வசிப்பிடம் அமைத்துக் கொண்டு குடும்பத்தில் இருந்து கொண்டே என் தேடலிலும் ஈடுபட்டு வந்தேன். ஆனால் என்னால் இல்லற தருமம் எதையும் கடைப்பிடிக்க முடியாது என்பது புரிந்து விட்டது.



92ல் இந்த 'சம்ரக்ஷணா'வை ஆரம்பித்தேன். யாரிடமும் நிதி வசூலிக்காமல், உண்டியல் ஏந்தாமல் முழுக்க முழுக்க ஒரு தன்னார்வ ஆன்மிக இயக்கமாக இதை உருவாக்கினேன்."

"உங்கள் மனைவி கொடுத்த பேட்டி பற்றிக் கூற விட்டு விட்டீர்கள்..."

"நான் அவர்களை ஏமாற்றவில்லை. அவர்களும் அப்படிச் சொல்லவில்லை. '88லிருந்து எங்களை அவர் கவனிக்கவில்லை என்றுதான் குறிப்பிட்டிருக்கிறார். தானாக உழைத்துக் குடும்பத்தை நடத்துவதைத்தான் சொல்லியிருந்தார். அது ஓரளவு உண்மைதான். இறை ஆணையால் மீண்டும் நான் குடும்பத்துக்கு வந்தாலும் வீட்டாருடன் ஈடுபாடில்லாமல் என் வழியில்தானே இருந்தேன்? பற்றற்ற நிலை என்று அதைக் குறிப்பிடலாம்."

"நம் நாட்டுத் துறவிகள் பலர் இப்படிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் கடவுளே நான்தான் என்று கூறுபவரல்லவா? உலகுக்கே பொதுவாகத் தன் கருணையை வழங்குவதுதானே கடவுள் அம்சம்? சொந்த வீட்டாரிடம் கூட பற்றற்றிருப்பது - வேண்டுமானால் ஒரு சாதாரணத் துறவியின் இயல்பாக மட்டுமே இருக்க முடியும்..."

"நான் அவர்களைப் புறக்கணிக்கவில்லை. கைவிடவில்லை. ஆனால் விலகியிருந்தேன். இது ஒரு மேலான நிலை. அவர்கள் நடுத்தெருவுக்கு வந்திருந்தால் நீங்கள் கூறுவது சரி. நான் விலகி இருந்தாலும் புறக்கணிக்காமல்தான் இருந்தேன். இன்று அவர்கள் எல்லோரும் அமெரிக்காவில் நன்றாக வேரூன்றிக் கொண்டு விட்டார்கள். நல்ல நிலையில்தான் இருக்கிறார்கள். ஒரு குடும்பத்துடன் என் பணி நிறைவடைவதற்காக நான் படைக்கப்படவில்லை. இதைப் புரிந்து கொள்ள வேண்டும்."

"ஆன்மிகம் ஒரு நல்ல பிஸினஸ் என்கிற எண்ணம் சாமானிய மனிதனுக்குக் கூட வந்து விட்ட காலம் இது. உங்களது தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், வீடியோப் படங்கள், கட் அவுட் கலாட்டாக்களையெல்லாம் பார்த்தால் அதையேதானே மறுபடி நினைக்கத் தோன்றுகிறது?"

"என் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் என்று சொல்லாதீர்கள். நான் எதையும் ஸ்பான்சர் செய்யவில்லை. மீடியா தொடர்புடைய நம் அன்பர்கள், இந்த சம்ரக்ஷணாவின் நோக்கம் உலகமெலாம் பரவ வேண்டுமென்று இங்கு நடைபெறும் நிகழ்ச்சிகளை, சொற்பொழிவுகளை டீவியில் ஒளிபரப்ப ஏற்பாடு செய்கிறார்கள். அவர்களது அன்பையும் ஈடுபாட்டையும் நான் எப்படித் தடை செய்ய முடியும்? வீடியோ படங்கள் பற்றிக் குறிப்பிட்டீர்கள். சம்ரக்ஷணாவுக்கு கேளம்பாக்கத்திலும் வெங்கலேரியிலும் கிளைகளிருக்கின்றன. மக்களுக்கு உதவும் பல நல்ல செயல்கள் அங்கும் நடைபெறுகின்றன. பல சுயதொழில் பயிற்சி நிலையங்களை ஒரே கூரையின்கீழ் நாங்கள் இலவசமாக நடத்துகிறோம். ஆனால் இங்கு வருவோருக்கு நாங்கள் என்னதான் செய்து கொண்டிருக்கிறோம் என்பது முழுமையாகத் தெரிய வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். வருகிற அத்தனை பேரையும் எங்களது எல்லா கிளைகளுக்கும் அழைத்துப் போய்க் காண்பிக்க முடியுமா? அதனால்தான் வீடியோப் படங்கள் தயாரித்து இங்கு வருபவர்களுக்குப் போட்டுக் காட்டுகிறோம். பத்திரிகையாளர்களைக் கூட இங்கு நடக்கும் நல்ல செயல்களை வெளியுலகுக்கு எடுத்துச் சொல்பவர்களாகத்தான் எண்ணி வரவேற்கிறோம். இது விளம்பர நோக்கமல்ல. நல்லது நாலு பேருக்குப் பரவ வேண்டும் என்கிற பரிதவிப்பு என்று வேண்டுமானால் சொல்லலாம்."

"என்னிடம் வாருங்கள், நான் கூறுவதைக் கேளுங்கள், நான் உங்களுக்கு நல்ல பாதையைக் காட்டுகிறேன் என்று அறைகூவல் விடுவதெல்லாம் இறை தூதர்களின் செயல். இறைவனே நான்தான் என்பவர் இப்படிக் கூப்பிட்டு போதிக்க வேண்டிய அவசியமென்ன?"

"இதுநாள் வரை கடவுள் என்கிற தத்துவத்தை ஒரு பூஜையறை விஷயமாக்கி, மக்களை விலகி நின்று வழிபடச் செய்யவே போதித்து வந்தார்கள். ஒரு நாளில் அரை மணி நேரம் கந்தர்சஷ்டி கவசம் சொல்லி விட்டால் போதும்; மிச்ச நேரமெல்லாம் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்று மனிதன் நினைத்து விட்டான். நான் இந்த மனப்பாங்கை மாற்ற விரும்புகிறேன். அதற்காகவே மக்களை என் பக்கம்





கூப்பிடுகிறேன். கடவுள் என்பவர் அரைமணி நேர ஆராதனைக்கு மட்டும் உரியவரல்லர்; இருபத்தி நான்கு மணி நேரமும் உனக்குள்ளேயே உயிர்த்திருப்பவர் என்பதை உணர்த்த விரும்புகிறேன். அதன் மூலம், செய்யும் 'செயலில் ஒரு லயம் கூடி, வாழ்க்கையை வளமுள்ளதாக மாற்றிக் கொள்ள முடியுமே! மனித சரீரம் என்பது ஒரு காகிதத்தை விடவும் கல்லை விடவும் உயர்ந்த விஷயம். கல்லைக் கும்பிடுபவன், தன்னைக் கும்பிட ஆரம்பித்தால் எல்லா பிரச்னைகளும் தீர்ந்து விடும். தன்னைக் கும்பிடுதலென்பது தன்னை உணர்வது.''

''தன்னை உணர்வது என்பதுதான் உபநிடதங்கள் தொடங்கி எல்லா நீதி நூல்களும் எல்லா ஞானிகளும் கூறி வரும் விஷயமாயிற்றே. இதை அப்பட்டமாக நடைமுறைக்கு எடுத்துக் கொண்டு நீங்களே வெங்கடாஜலபதி போலவும் பிற இறை உருவங்கள் போலவும் மேக்-அப் போட்டுக் கொண்டு, நகைகள் பூண்டு, ஆரத்தியெல்லாம் எடுப்பது நாடகத்தனமாக அல்லவா உள்ளது? நானே கடவுள் என்று இப்படியா நிரூபிக்க விரும்புகிறீர்கள்?''

''நான் எப்போதும் அப்படிப்பட்ட தோற்றங்களைப் பூணுவதில்லை. ஒரு சாமானிய மனிதனைப் போலவேதான் இருக்கிறேன். நாளெல்லாம் சாதாரணமாக அருகிருந்து பேசிக் கொண்டிருக்கும் பாபா திடீரென்று வெங்கடாஜலபதி தோற்றம் கொண்டு எதிரே நின்றால் அவன் என்ன நினைப்பான்? 'இதன் மூலம் இவர் என்ன உணர்த்த விரும்புகிறார்? சாதாரண மனிதன் தனக்குள் இருக்கும் கடவுளை அடையாளம் கண்டு கொள்ள முடியும் என்றுதானே!' - இப்படி அவன் எண்ணத் தொடங்க வேண்டுமென்பதுதான் என் நோக்கமே தவிர வேறல்ல!''

''யாராவது அப்படி நினைக்கிறார்களா? உங்கள் தீவிர பக்தர்கள் ஆரத்தி காட்டி, கன்னத்தில் போட்டுக் கொள்கிறார்கள்; உங்களை நம்பாதவர்கள் சிரித்துக் கொண்டு போய் விடுவார்கள். இதுதானே நடக்கிறது?''

''இது மாற வேண்டுமென்றுதான் முயற்சி செய்கிறேன். சொல்லப் போனால் இது ஒருவித சயின்டிஃபிக் மேனேஜ்மென்ட் அப்ரோச்! நான் மேனேஜ்மென்டில் மூன்று டிகிரி வாங்கியவன்! (சிரிக்கிறார். பிறகு மறுபடி சீரியஸாகி) இது ஒருவித மனோதத்துவ அணுகுமுறையும் கூட. ஆனால் இப்போது இதை நான் மாற்றி விட்டேன். நான் இறைவேடம் பூணாமல் அந்தச் சின்னங்களுக்கு மட்டுமே கற்பூரம் காட்டச் சொல்லி விட்டேன். மக்கள் தம் இறைத்தன்மையை உணர்ந்து, தொண்டில் தோய வேண்டுமென்பதுதான் என் நோக்கம். அதை அவன் எட்டிப் பிடித்து விடுகிற நிலையில் நான் என் 'பயிற்சி'களை நிறுத்திக் கொண்டு விட்டேன்.''



''சம்ரக்ஷணா போன்ற



தொகு தொண்டு நிறுவனம் நடத்துவதெல்லாம் பலர் செய்து கொண்டிருக்கும் காரியம்தான். நீங்



கள் ஞானம் பெற்றதாகச் சொல்லும் இந்தப் பதினாறு ஆண்டுகளில் பிறர் செய்யாத பெரியதொரு சேவையை – மனிதகுலத்துக்கு – நீங்கள் என்ன செய்து விட்டீர்கள்?''

''நாட்டில் நாத்திகவாதம் மிகுந்து, அறநெறி வழுவி வரும் பொழுதில் தளர்ந்து கொண்டிருந்த ஆத்திகத்தை நான் தூக்கி நிறுத்தியிருக்கிறேன். லட்சக்கணக்கான மக்களுக்கு, அவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில், குழப்பாமல் என் தத்துவங்களைப் பரப்பியிருக்கிறேன்; நல்வழிப் படுத்தியிருக்கிறேன். இது பெரிய விஷயமல்லவா?''



''உங்களை சித்த யோகி என்று குறிப்பிட்டுக் கொள்கிறீர்கள். நீங்கள் சித்து புரிபவரா?''

''இல்லை. நான் சித்து புரிவதில்லை. ஆனால் அதன் பயனைப் பல முறை அனுபவித்திருக்கிறேன். என் மனத்தில் ஒரு விஷயத்தை நான் தீவிரமாகக் கருதும் போது அது நடைமுறைக்கு வந்து விடுகிறது. இதன் மூலம் பல ஏழை மக்களின் நோய் நொடிகளை நீக்க முடிந்திருக்கிறது. அதாவது, பயனுள்ள ஒரு செயலுக்காக ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி என்னை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொள்வதாக நினைக்கிறேன்.''

''தேவையான நேரத்தில் உங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் அந்த அமானுஷ்ய சக்தி, உங்களது சம்ரக்ஷணாவே பற்றி எரிந்தபோது ஏன் உதவவில்லை?''



''சம்ரக்ஷணாவில் தீ விபத்து ஏற்பட்டது ஒரு திட்டமிட்ட சதி. பின்னணியில் சில அரசியல் சக்திகளும் இருக்கின்றன. அது பற்றி நான் பேச விரும்பவில்லை. ஒன்று சொல்வேன். ஆன்மிகவாதிகளைக் கூட சாதிக் கண்ணோட்டத்துடன்தான் பார்க்கிறார்கள்.''

''அது சதியாகவே இருக்கட்டும். கடவுள் என்று கூறிக் கொள்ளும் உங்களால் ஒன்றும் செய்ய முடியாமல் போனது ஏன்?''



''திருஞானசம்பந்தரின் மடத்துக்கு அக்காலத்தில் ஜைனர்கள் நெருப்பு வைத்தார்கள். அதன் பின் விளைவு – 'பாண்டியர்க்குச் சென்று பையவே தாக்குவா'னென்று ஆயிற்று. தெய்வத்தின் இயல்பு நின்று கொல்வதல்லவா? தவிர மகான்களின் இயல்பு மன்னிப்பதே அன்றி தண்டிப்பதல்ல.''

''மனிதகுலத்தை உய்விப்பதாகச் சொல்லும் நீங்கள் தனிமனிதத் துதியைத் தானே வளர்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?''

''இல்லை. என்னை வணங்காதீர்கள். என் காலில் விழாதீர்கள் என்று தான் நான் தொடர்ந்து கூறி வருகிறேன்.''

''காலில் விழுந்து வணங்கிய பின், 'வணங்காதே, எழுந்திரு' என்று கூறுவதும் ஒருவித 'இமேஜ் பில்டிங்' டெக்னிக்தானே?''

''நான் மக்களுடன் நெருங்கிப் பழகுகிறேன். நான் செய்வதை நீ கடைபிடி. என்னை வணங்காதே. என்னிடமிருந்து கற்றுக் கொள். என்னைப் பின்பற்றாதே என்றுதான் தினமும் கூறி வருகிறேன். மக்கள் என்னை விடவும் பெரிய ஆளாக வேண்டுமென்பது தான் என் விருப்பம். அதற்காகத்தான் உழைத்து

வருகிறேன்."

"உங்களைப் புகைப்படம் எடுத்தால் அதில் சிவலிங்கம், நாகம் எல்லாம் ஒளி வடிவில் தோன்றும் என்று கூறுகிறார்களே?"

"ஆமாம். அது எப்படி என்று எனக்குத் தெரியாது. என் புகைப்படங்களில் பல இறைச் சின்னங்கள் குறுக்கே தோன்றுவது வழக்கம்." (சில படங்களைக் காட்டுகிறார்.)

"யார் எடுத்தாலும் அவை வருமா? இவை வெறும் போட்டோ ஜிம்மிக்ஸ் என்கிறேன்?"

"இவை ஜால வேலையல்ல. யார் யாரோ என்னைப் படமெடுத்து விட்டு, என்னிடமே கொண்டு வந்து காட்டி வியப்பார்கள்."

"இதோ நமது புகைப்படக்காரர் யோகா உங்களைப் படமெடுத்துக் கொண்டிருக்கிறார். இவை கல்கியில் பிரசுரமாகப் போகின்றன. இதிலும் நீங்கள் குறிப்பிடும் சின்னங்கள் கட்டாயம் வரும் என்று உறுதியாகக் கூற முடியுமா?"



"பகவானை நினைத்து யோகத்திலிருந்தால் வரும். ஆனால் நான் இப்போது ஒரு மானிட நிலையில் இருந்து கொண்டு உங்கள் கேள்விகளை அசைபோட்டுக் கொண்டு, அது பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பதால், இப்போது எடுக்கும் படத்தில் ஒளி உருவங்கள் வராது என்று நினைக்கிறேன். இவை எதுவும் என் திட்டமிடலுக்கு உட்பட்டதல்ல."

"நீங்கள் 'ராமராஜ்ஜியம்' என்கிற அறிவிப்போடு ஒரு குடியிருப்புப் பகுதி நிர்மாணித்து வருகிறீர்கள். சர்வமத வழிபாடு, கோயில், மசூதி, சர்ச் எல்லாம் உண்டு என்கிறீர்கள். ஆன்மிக சமாசாரத்தை நீக்கி விட்டுப் பார்த்தால் இது வெறும் ரியல் எஸ்டேட் பிசினஸ்தானே?"

"எந்த ரியல் எஸ்டேட்காரர்கள் இத்தனை குறைந்த விலையில் சகல வசதிகளுடனும் வீடு கட்டித் தருகிறார்கள்? இது பிசினஸ் அல்ல. மதநல்லிணக்கம், வசுதேவ குடும்பகம் என்ற உயரிய நோக்கத்தின் வெளிப்பாடு. தவிர, சொந்த வீடு என்பது இன்று நடுத்தர மக்களின் ஆயுள் கனவு. அதை நான் சுலபமாக நிறைவேற்றுகிறேன். தன் லௌகீக சந்தோஷங்களை சுலபமாக அடைந்து விட்டபின் மனிதனால் ஆன்மிகத் தேடலில் சுலபமாக ஈடுபட முடியும் என்பது என் நம்பிக்கை. அதற்காகத்தானே தவிர, நான் ஒன்றும் ரியல் எஸ்டேட் பிசினஸ் நடத்தவில்லை. உணவு, உடை, உறையுள் தேவைகளைத் தீர்த்தபின்தான் மக்களை அதனினும் உயரிய லட்சியத்தை நோக்கித் திருப்ப முடியும்."

"நீங்கள் டான்ஸ் கற்றுக் கொண்டிருக்கிறீர்களா?"

"இல்லவே இல்லை. இன்று வரை நடனம் பற்றிய சூட்சுமம் எதுவும் எனக்குத் தெரியாது. ஆனால், யோக நிலையில் நான் ஆடத் தொடங்கும் போது அதில் பல்வேறு நடனக் கலைகளின் கூறுகள் பொதிந்திருப்பதாக வல்லுநர்கள் கூறுகிறார்கள்."

"உங்களது 'நானே கடவுள்' அறிவிப்பின் ஒரு பகுதியாக, நீங்கள் உங்களைப் பரம சிவன் அவதாரமாகக் காட்டிக் கொள்ளக் கையாளும் உத்தி இது என்று கொள்ளலாமா?"

"நிச்சயமாக இல்லை! எனக்கு என்னை ஒரு அமானுஷ்யமானவனாக காட்டிக் கொள்ளும் நோக்கமேதும் இடையாது."

"அப்புறம் எதற்கு நடனம்? எதற்கு இறைவனின் உருவம் போல் வேடமணிதல்? எதற்குக் கற்பூர ஆரத்தி? உங்கள் நோக்கம் சமூக மேம்பாடுதான் என்றால் அதை நேரடியாகச் செய்யலாமே? நானே கடவுள் என்று ஏன் அறிவித்துக் கொள்ள வேண்டும்?"

"அகம் பிரம்மாஸ்மி என்கிற கருத்தைப் புரிந்து கொண்டால் நான் கூறுவது விளங்கிவிடும். நானே கடவுள் என்றால், கடவுள் தன்மை, கடவுள் அம்சம் என்னுள் இருப்பதை உணர்ந்து கொண்டவன் என்று பொருள் கொள்ள வேண்டும். எல்லா மக்களுக்கும் கடவுள் தன்மை இருக்கிறது. அத்வைதமே அதைத்தானே சொல்கிறது? நான், நீங்கள் உணரத் தவறிய கடவுள் தன்மையை எடுத்துக்காட்டும் வேலையைத்தான் செய்து கொண்டிருக்கிறேன்."

"மற்றபடி கடவுளின் பத்தாவது அவதாரமே நான்தான் என்றொருவர் கூறுகிறாரே, நீங்கள் அவருக்குப் போட்டி இல்லையே?"

(சிரித்தபடி) "என் வழி அதுவல்ல! நான் அவதார புருஷனுமல்ல! என்னுள் உறைந்திருக்கும் பரம்பொருளை உணர்ந்தவன். அவ்வளவே!"

சந்திப்பு : **ஔரங்கசீப்**

படங்கள் : **யோகா**

ஆலயக்காலடி

தீர்ந்து போகும் பொருட்களின் மேலேயே
உன் ஞாபகத்தை வைத்துப் பார்க்க முடிகிறது.
இது
உன் நினைவுகளுக்கான நீட்சியை
மறைமுகமாக உணர்த்துகிறது.
வாசப் பெருக்கலில்
உதிர்ந்த ஈர்க்குச்சிகள்.
படித்த அடையாளமாய்
அறுபதாம் பக்கத்தில் ஓர முக்கோணம்.
கோயில் மணியில் நீ தொட்ட ஓசை
கொடுத்த திருநீறின்
மூக்கு வந்த சிதறல்கள்.
தொலையும்
தீர்ந்து கொண்டே இருக்கும்
பொருட்களில் நீ.
மணிநாவு ஓய்ந்த பின்னும்
தீராது அதிர்வு.

— ஜெரா







2000 ஆகஸ்ட் 13
விக்ரம ஆடி 29
மலர் : 59
இதழ் : 2

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.




ஆட்டிப்படைக்கும் வீரப்பன்

ராஜ்குமாரையும் அவருடன் கடத்தப்பட்ட வேறு மூவரையும் விடுவித்து அழைத்து வர 'நக்கீரன்' ஆசிரியர் கோபால் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது ஆச்சர்யமில்லை. கடந்த முறை இத்தகையதொரு நெருக்கடி ஏற்பட்டபோது வீரப்பனிடம் நைச்சியம் பேசி பிணைக்கைதிகளை விடுவிக்கச் செய்தவர் கோபால்தான். இந்த முறையும் அவர் வெற்றி பெற வேண்டும் என்பதுதான் அனைவரது பிரார்த்தனையும் விருப்பமுமாக இருக்கும். இதில் தமிழர் - கன்னடியர் என்ற வேறுபாடு எதுவும் இருக்க முடியாது.

ஆனால், வீரப்பன் தமிழகத்துக்கும் தமிழ் மக்களுக்கும் வேண்டப்பட்ட ஆசாமி என்பது போலவும், ராஜ்குமாரைக் கடத்திப் போனதற்குத் தமிழக காவல் துறையின் அலட்சியம்தான் காரணம் என்பது போலவும் கர்நாடகாவில் ஒரு தமிழ் விரோத அலையே கிளம்பியிருப்பது மிகவும் வருத்தத்துக்குரியது. வீரப்பனைப் பிடிக்க இயலாமல் போன அவமானத்தில் கர்நாடக காவல் துறைக்கும் சமமான பங்கு உண்டு என்பதை உணர்ச்சிவசப்பட்ட நிலையில் கர்நாடக மக்கள் மறந்து போயிருக்கிறார்கள்.

அது மட்டுமல்ல. அவர்கள் மிகவும் நேசிக்கும் கன்னட சூப்பர் ஸ்டாரை விடுவிக்குமாறு வீரப்பனிடம் கேட்டுக்கொள்ள ஒரு தமிழர்தான் தூது போக வேண்டியிருக்கிறது.




இரு மாநில அரசுகளுமே, வீரப்பனின் அதிரடி நடவடிக்கைகள் தலைதூக்கும் நேரத்தில் விழித்துக் கொள்வதும் கொஞ்சம் நடவடிக்கை எடுப்பதும் அதன் பிறகு அவனைப் பற்றி அடியோடு மறந்து போய் விடுவதுமாகக் காலத்தைக் கழித்து விட்டன. சிறப்புக் காவல் படையினால் காட்டுக்குள் புகுந்து வீரப்பனைப் பிடிக்க முடியாது என்பதும் நிரூபணமாகி விட்டது. வீரப்பன் புழங்குகிற காட்டுப் பகுதியின் விளிம்பிலுள்ள கிராமங்களில் வசிக்கும் மக்களுக்குக் கூட அதிரடிப் படையினால் முழுப் பாதுகாப்பு வழங்க முடியவில்லை.

இவ்வாறு இருக்க, வீரப்பனை எத்தனைக் காலம்தான் இப்படிச் சுதந்தரமாகத் திரியவும் பிணைக் கைதிகளைப் பிடித்து வைத்துக் கொண்டு அரசை மிரட்டவும் அனுமதிக்கப் போகின்றன இந்த அரசுகள்?

இத்தனைக்கும் பொது மன்னிப்பு வழங்க உத்தரவாதம் அளித்தால் தாம் சரணடையத் தயார் என்கிறான் வீரப்பன். திட்டமிட்டு நிகழ்த்திய அவனது குற்றங்கள் மன்னிப்புக்குரியவை அல்ல என்பது உண்மையே. எனினும், தொடர்ந்து கடத்தல்காரனாக நீடிப்பதில் அவனுக்கு ஆர்வமில்லை என்பது அவனது பொதுமன்னிப்புக் கோரிக்கை மூலம் வெளிப்படுகிறது.

ஆனால் தமிழக, கர்நாடக அரசுகள் இது விஷயத்தில் பளிச்சென்று முடிவெடுக்காமல் இருப்பதால் வீரப்பன் குற்ற வாழ்க்கையைத் தொடர்கிறான்.

பொது மன்னிப்பை உத்தரவாதம் செய்து அவனைச் சரணடைய வற்புறுத்தினாலும் இரு அரசுகள் குறித்தும் கடுமையான விமர்சனமே எழும். ஒரு கிரிமினலை மன்னிப்பதன் மூலம் வேறு பலருக்கு முன்னுதாரணம் ஏற்படுத்தப்படுவதாகக் கொள்ளப்படும்.



மாநில அரசுகளால் வீரப்பனைப் பிடிக்கவும் முடியவில்லை, சரணடையச் செய்யவும் முடியவில்லை என்னும் போது பிரச்னைக்குத் தீர்வுதான் என்ன...?

இந்திய ராணுவத்திடம் பொறுப்பை ஒப்படைப்பதுதான் வழி. காதும் காதும் வைத்தாற் போல் காட்டுப் பகுதிகளை நாற்புறமும் முற்றுகையிட்டு, படிப்படியாக உட்புகுந்து தேடி **(combing operation)** வீரப்பனைக் கைப்பற்றுவது ராணுவத்துக்கு முடியாத காரியமல்ல. அதிகபட்சம் போனால் ஒரு நூறு பேர்தான் அவன் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது.

எங்கோ ஆப்பிரிக்காவில் (ஸியர்ரா லியோன்) அமைதியை நிலைநாட்ட இந்திய ராணுவம் அனுப்பப்படும்போது தமிழகத்தில் அமைதி உருவாக்க ஏன் ராணுவத்தைப் பயன்படுத்திக் கொள்ளக் கூடாது?

ஆனால் வீரப்பன்வசம் பிணைக்கைதிகள் சிக்கியிருக்கும் போது இப்படிப்பட்ட முயற்சியில் இறங்குவது பேராபத்து. தாட்சண்யமின்றி அவர்களை அவன் தீர்த்துக் கட்டி விடக்கூடும்.

இப்போதைய பரபரப்பெல்லாம் இன்றி வீரப்பன் அடங்கியிருந்த காலகட்டத்தில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். வாய்ப்பு தவறவிடப்பட்டிருக்கிறது.

ராணுவ உதவி கோருவது மாநில அரசுகளின் காவல் துறையுடைய தோல்வியை உணர்த்துவதாகக் கொள்ளப்படும் என்பதால் இரு மாநில அரசுகளுமே மத்திய அரசின் உதவியைக் கோருவதை கௌரவக் குறைவாக நினைக்கின்றன.

இந்தப் போலி கௌரவத்துக்கு அவை தந்து கொண்டிருக்கும் விலை மிக அதிகம். வீரப்பன் என்கிற ஒற்றை மனிதனின் நடவடிக்கையால் இரு மாநிலங்களின் அமைதிக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கிறது.

பரோடா பல்கலைக் கழக மாணவர்கள், அரைக்கால் சட்டையுடன் கல்லூரி வளாகத்தில் அரை நிர்வாணப் போராட்டம் நடத்தியிருக்கிறார்கள். மாணவிகள் மிகவும் கவர்ச்சியாய் உடுத்துகிறார்கள். அவர்களுக்குப் பல்கலைக் கழகம் உடை விதிகள் ஏற்படுத்த வேண்டும் என்பதே போராட்டத்துக்குக் காரணம்! இது பொழுதுபோகாத மாணவர்களின் ஆரவாரமா? அல்லது அடிப்படைவாத ஆணாதிக்கத்தினரின் தூண்டுதலுக்குத் துணை போகிறார்களா? மாணவிகள் என்ன நினைக்கிறார்கள் என்பதை அறிய சென்னை வைஷ்ணவா கல்லூரி மாணவிகள் சிலருடன் கலந்துரையாடினோம்.

கல்கி: மாணவிகள் கவர்ச்சியாக உடை அணிவதற்கும் மாணவர்களின் ஈவ் - டீசிங் மன நிலைக்கும் தொடர்பு இருக்குன்னு நினைக்கிறீங்களா?

ப்ரீத்தி: உடையும் ஒரு காரணம். ஆனால் அது மட்டுமே காரணம் என்று சொல்வது சரியான சப்பைக்கட்டு. மாணவர்கள் மனசுல கட்டுப்பாட்டு உணர்வு குறைச்சலா இருக்கு. அதை வளர்த்துக் கொள்வதை விட்டு விட்டு மாணவிகள் மேல் பழி போடுவது மகா அபத்தம்.

ரக்ஷணா: இப்போ எல்லா மாணவர்களும் டீன்ஏஜ் சபலத்தோடுதான் அலையறாங்கன்னு சொல்ல முடியாது.





• ரக்ஷனா

பரோடா யூனிவர்சிட்டியில நடந்திருக்கிற இந்தச் சம்பவத்தில் அங்கே படிக்கும் எல்லா மாணவர்களும் கலந்து கொள்ளவில்லைங்கிறதை நாம கவனிக்கணும். ஆனாலும் மாணவிகள் இப்படித்தான் டிரெஸ் போட வேண்டும்ன்னு சொல்வது தனி நபர் உரிமையில் தலையிடுவது போலத்தானே?

நீல்கமல்: ரொம்ப கரெக்டா சொன்னே! மேற்கத்திய பண்பாட்டுக்கு எல்லோரும் ஆதரவு கொடுக்கிறோம். ஆண்களும் அந்த நாகரிகப்படிதானே பேண்ட், ஜீன்ஸ், டீ சர்ட், ஷார்ட்ஸுன்னு மாறினாங்க. அதை ஏன் அடிக்கடி மறந்துடுறாங்க. பெண்கள் ஜீன்ஸ் போட்டா ஏன் அவங்களுக்குக் கஷ்டமா இருக்கு.

ப்ரீத்தி: இந்திய கலாசாரத்துக்குப் பழகிப் போன மூளை நம்ம ஆண்களுடையது. அதற்கு மாறா ஒரு பெண் உடை உடுத்தும்போது, அவ




• நீல்கமல்

பார்க்கிறது! பொது இடத்தில் பாய் பிரெண்ட் கூட அரட்டை அடிப்பது இதெல்லாம், தவறாகப் பார்க்கும் மாணவர்களுக்குத் தைரியத்தைக் கொடுக்குது.

நீல்கமல்: இருக்கலாம். அதுக்காக சுடிதாரோ, புடைவையோ கட்டும் மாணவிகளுக்கு டீசிங்கே நடக்கிறதில்லையா என்ன? சரிகாஷா, உடைப் பிரச்சனைனாலயா உயிரை இழந்தாங்க. கவர்ச்சிங்கிறது பார்க்கிற கண்களைப் பொறுத்தது. புடைவையிலோ சுடிதாரிலோ கவர்ச்சி இல்லேன்னு சொல்ல முடியுமா?

ப்ரீத்தி: சரியா சொன்னே! பெண்களை டீஸ் செய்யறது, தினசரி உயிர் வாழ தண்ணீர் குடிப்பது மாதிரி ஒரு யாதர்த்த விஷயம் என்பது போல சினிமா பாதை போட்டுக் கொடுக்கறது. இங்கே எடுக்கிற

ஜீன்ஸ், கண்ணியம், கட்டுப்பாடு!



ப்ரீத்தி

எந்த தமிழ், ஹிந்தி சினிமாவிலாவது 'டீசிங் சாங்' இல்லாம இருக்கா. காலேஜ் காதல் பத்தி படமெடுக்

மனநிலையும் தப்பா இருக்கும்னு கணக்குப் போடுறாங்க. இதனால மாடர்ன் பொண்ணுங்களை கேலி செய்யணுன்னு நினைக்கிறாங்க.

கல்கி: நாகரிக உடைகளில் பல, கண்ணியமாக இல்லையே...!

அபர்ணா: நிச்சயமா... ஆனால் மாடர்ன் டிரஸ் போடும் எல்லோருமே அது போலப் போடுறதில்லே. இதைவிட ஜீன்ஸோ அல்லது மிடியோ அணியும் ஒரு மாணவி அல்லது பெண் எப்படி நடந்து கொள்கிறாள் என்பதைப் பொறுத்தும், அவளுக்கு ஆபத்து வருது... தேவையில்லாமல் வேடிக்கைப்

கிற இயக்குனர்கள், கல்லூரி ஏதோ ஒரு கனவுலகம் மாதிரியும், அங்கே அரைக்கால் சட்டையும், கவுனும் போட்டுக் கொண்டு தான் எல்லா மாணவிகளும் வகுப்பிற்கு வருவது போலவும் படம் எடுக்குறாங்க... அதுதான் யதார்த்தம்னு நம்ம ஆண்களும், ஏன் பெண்களும்கூட அதை ஃபாலோ செய்ய நினைக்கிறாங்க...

அபர்ணா: ஆமா! அதான் நடக்குது. நம்ம சென்சார் போர்டுல, பெண் உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதே சந்தேகமா இருக்கு. அந்த அளவுக்கு முரண்பாடான காட்சிகளை சர்வ சாதாரணமாக அனுமதிக்கிறாங்க.

ரக்ஷணா: போதாக்குறைக்கு நிறைய விளம்பரங்கள், டீன் ஏஜர்சை குறி வெச்சே எடுக்கப்படுகிறது. ஒரு குறிப்பிட்ட பிராண்ட் ஜீன்ஸ் போடும் ஆண்மகனை எந்த கேள்வியும் கேட்காமல் ஒரு பொண்ணு லவ் பண்றதா விளம்பரம் எடுக்குறாங்க...!

கல்கி: அப்போ விளம்பரத்தைப் பார்த்து தான் மாணவ மாணவிகள் உடை வாங்குறாங்களா?

நீல்கமல்: முழுக்க அப்படிச் சொல்ல முடியாது. குறிப்பா பெண்கள், நமக்கு இந்த உடை சௌகரியமா இருக்குமா என்று பார்த்துதான் வாங்கி அணியறாங்க. தோழிகள் எல்லோரும் புடைவை கட்டியிருக்கும் போது நான் மட்டும் ஜீன்ஸ் போட்டிருந்தால் நன்றாக இருக்காது. அதே போல தோழிகள் எல்லோரும் மாடர்னாக உடையணியும்போது நான் மட்டும் புடைவை கட்ட முடியாது! இங்கே குழு உணர்வு பெரிய காரணமா இருக்கு. நவீன உடைகளை அணியறோமே தவிர, எங்கள் அணுகுமுறையில் எந்த மாற்றமும் வருவது இல்லை. எந்த இந்தியப் பொண்ணும் தன்னோட கலாசாரத்தை எந்தச் சூழ்நிலையிலும் மறக்க மாட்டாள்.

கல்கி: கலாசாரத்தை எந்தச் சூழ்நிலையிலும் மறக்க மாட்டோம்னா இங்கே ஏன் பல அடிப்படை வாத இயக்கங்கள் தொடர்ந்து போராடுகின்றன?


அபர்ணா: மூட்டைப் பூச்சிக்குப் பயந்து வீட்டையே கொளுத்திடலாம்னு நினைக்கிறவங்கதான், இப்படி வேலை வெட்டி இல்லாமல் கத்திக்கிட்டே இருப்பாங்க. சமயத்தில் நல்ல விஷயத்தையும் சொல்வாங்க. அதை எடுத்துக்கலாம்.

ரக்ஷணா : ஆனால் கலாசார சீரழிவு, அது இதுன்னு சொல்லிக்கொண்டு, பெண்கள் உடை உடுத்த கட்டாய விதி கொண்டு வந்து திணிக்க வேண்டும் என்று நினைப்பதுதான் ரொம்பவும் ஆபத்தானது.

கல்கி: நமது சூழ்நிலைக்கு ஏற்ப பெண்களுக்கு எது போன்ற உடைகள் பொருத்தமாக இருக்கும்னு நினைக்கிறீங்க?

ப்ரீத்தி: எதில் அசிங்கமாக தெரிய மாட்டோமோ, எந்த உடை சராசரியான கண்ணியமான தோற்றத்தைக் கொடுக்கிறதோ அது போன்ற உடைகளைச் சூழ்நிலைக்குத் தகுந்தமாதிரி அணியலாம். கோவிலுக்குப் போனா புடைவை. டியூஷனுக்குப் போனா சுடிதார். குடும்பத்தோடு அவுட்டிங் போறோமா கொஞ்சம் மாடர்ன்... கலேஜுக்கு எல்லாவற்றையும் மாற்றி மாற்றிப் போடலாம். ஒரு வெளிக் கிரக ஜந்து மாதிரி உடை உடுத்தக் கூடாது. அப்போ எல்லோரும் வேடிக்கை பார்க்கத்தானே செய்வாங்க!

தொகுப்பு: **ஆர்.சி.ஜெ**
படங்கள்: **வெங்கடேஷ்**



"உங்கம்மா கொஞ்சம் ராமாயணம் படிச்சிருக்கலாம். அதுக்காக இவ்வளவு பீத்திக்க வேண்டாம்!"

"ஏன்? என்ன ஆச்சு?"

"நான் ஆசையா தினமும் சண்டையை ஆரம்பிக்கும் போதெல்லாம் 'இன்று போய் நாளை வா'ன்னு ஒத்தி வெச்சிடறாங்க!"

- கொங்கணாபுரம் வே. செந்தில்

மக்கள் போடும் மதிப்பெண்கள்

தமிழக சட்டமன்றத் தேர்தலுக்குத் தேர்தல் கமிஷன் காலம் குறித்து விட்டது. நடப்பு ஆட்சியின் முக்கிய அமைச்சர்கள் சிலருக்கு மக்கள் (தொண்டர்களும்தான்) மதிப்பெண் போட்டுப் பார்க்கிறார்கள்:

அமைச்சர் துரைமுருகன் வருகிறார் என்றால் ஒரு நிமிடம் முன்னதாகவே அவர் போட்டிருக்கும் செண்ட் முன்னால் வந்து கட்டியம் கூறும் ஒரு காலத்தில். இப்போது செண்ட் வாசனை குறைந்திருக்கிறது. அமைச்சருக்கு வீட்டை விட்டுக் கிளம்பும் போது நல்ல நேரம் பார்த்துக் கிளம்புவது போன்ற பழக்கங்கள் உண்டு. மனிதர் ரொம்ப ஜாலியாக இருந்தால் பல பெரிய தலைவர்களைப் போல் 'மிமிக்ரி' செய்தும் காண்பிப்பார். காரிலும், அலுவலக அறையிலும், வேர்க்கடலை, மிக்ஸர், சிப்ஸ் போன்ற நொறுக்குத் தீனி ஸ்டாக் இருந்து கொண்டே இருக்கும்.

இந்த நான்கு வருட காலத்தில் தமது தொகுதியான காட்பாடிக்கு அமைச்சர் செய்தது என்ன? உள்ளூர் உடன்பிறப்புகள் பட்டியலிடுகிறார்கள்!

"காட்பாடி தனித் தாலுகா, ரயில்வே மேம்பாலம், ராஜா தோப்பு - காணாறு நீர்த் தேக்கத் திட்டம், மோர்தானா நீர்தேக்கத் திட்டம், கிராமங்களில் தார் சாலைகள், பேருந்து வசதிகள், பகுதி நேர ரேஷன் கடைகள்'' என்று அமைச்சர் நிறையவே செய்திருக்கிறார். ஆனாலும் பொதுமக்களிடையே அதிருப்தி இல்லாமல் இல்லை. உடன்பிறப்புகளின் ஒத்துழைப்போடு நடக்கும் கள்ளச்சாராய வியாபாரம், குடிதண்ணீர் குழாய் கனெக்ஷனுக்குக் கூடுதல் பணம் கேட்கும் தி.மு.க பேரூராட்சி தலைவர்கள் - என்று கழக அரசின் பெயர் கெடுக்கப்படுகிறது.

உள்ளூர் உடன்பிறப்புகள் அமைச்சரின் மேல் கொஞ்சம் "காரமாகவே" இருக்கிறார்கள். காரணம் வேலை, டிரான்ஸ்பர், காண்ட்ராக்ட் போன்ற விவகாரங்களில், அவர்கள் தரும் சிபாரிசைப் பற்றி அமைச்சர் கண்டு கொள்ளாமல் இருப்பதுதான். "அந்த சிடு, சிடுப்பைத் தாங்க முடியாது" என்றார் ஒரு ஒன்றியத் தலைவர்.

வேலூர் மாவட்டத்தின் மற்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அமைச்சர் மேல் வருத்தமிருக்கிறது. காரணம் மாவட்டத்துக்குக் கிடைக்கும் நிதியில் தனது செல்வாக்கைப் பயன்படுத்தி பெரும்பான்மை நிதியை தனது தொகுதிக்கு எடுத்துக் கொண்டு போய்விடுகிறார் என்பதுதான். மேலும் எந்த ஒரு திட்டமென்றாலும் காட்பாடிக்கு முன்னுரிமை கொடுக்கச் சொல்கிறாராம். "இப்படி இருந்தால் நாங்கள் தொகுதிக்கு என்ன செய்வது?" என்று கேட்கிறார் வேலூர் மாவட்டம் சட்டமன்ற உறுப்பினர் ஒருவர்.

அமைச்சர் தொகுதியில் வன்னியர் - தாழ்த்தப்பட்டவர் உறவு எப்போதும் கொஞ்சம் சூடாகவே இருப்பதால் தொகுதி மக்களிடையே கத்தி மேல் நடக்க வேண்டிய நிலை அமைச்சருக்கு. தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த கண்டக்டர் ஒருவர் கொலை செய்யப்பட்ட விவகாரத்தில் கட்சியின் இமேஜ் பாதிக்கப்பட்டிருக்கிறது.

"அமைச்சர் என்பதாலேயே தொகுதியில் வளர்ச்சிப் பணிகள் எளிதாக நடைபெறுகிறது என்பது சரியல்ல" என்கிறார்கள். அமைச்சரும் பல விஷயங்களுக்காக மற்ற துறைகளுடன் போராட வேண்டியிருக்கிறது. உதாரணமாக கழிஞ்சூர் என்ற இடத்தில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் ஆர்ஜிதம் செய்வதில் பல துறைகளுடன் கடுமையாகப் போராட வேண்டியிருந்ததாம்.

சில பெரிய ஊராட்சிகளில் மனமகிழ் மன்றம் என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார் அமைச்சர். விளையாட்டுச் சாதனங்கள் வாங்க இம் மன்றங்களுக்கு 25,000 ரூபாய் கொடுத்துள்ளார்கள். இதற்காகத் தொகுதி இளைஞர்கள் அமைச்சரைக் கொண்டாடுகிறார்கள். மகாதேவமலையில்

உள்ள ஈஸ்வரன் கோயிலுக்குத் திருப்பணி செய்ததும் முக்கியமான சாதனையாகச் சொல்லப்படுகிறது.

தொகுதி எம்.எல்.ஏ என்ற முறையில் அமைச்சர் காட்பாடிக்குச் செய்த பணிகள் ஒரு பக்கம் இருக்க, அமைச்சர் என்ற முறையில் தமிழகத்துக்கு அவர் பங்களிப்பு என்ன?



"மத்திய அரசின் சுற்றுச் சூழல் இலாகாவின் ஒப்புதல் கிடைக்காமல் பன்னிரண்டு வருட காலம் நிலுவையில் இருந்த சோத்துப்பாறை அணை திட்டத்திற்கு ஒப்புதல் வாங்கி, பணிகளை விறு, விறுவென்று நடத்திக் கொண்டு வருவது முக்கியமாகச் சொல்லப்பட வேண்டியது. அப்புறம் தஞ்சை, நாகை, திருவாரூர் மாவட்டங்களில் கால்வாய்களைத் தூர் எடுத்தது. புதிய மாவட்டங்களில் மாவட்ட ஆட்சியாளர் அலுவலகங்கள் கட்டி முடித்தது. நபார்டு வங்கி உதவிகளுடன் ஏரி, குளம் மராமத்து போன்றவைகளை குறிப்பிடலாம்" என்கிறார் பொதுப் பணித்துறை உதவி அதிகாரி ஒருவர்.

"மிகவும் சென்ஸிடிவ்வான காவிரி பிரச்னை, கிருஷ்ணா குடிநீர்ப் பிரச்னை போன்றவை அமைச்சரின் நேரத்தை ரொம்பவே எடுத்துக்கொள்கின்றன. இருந்தாலும் தமது துறை பற்றி எல்லா விவரங்களையும் அவர் விரல் நுனியில் வைத்துக் கொண்டிருக்கிறார் என்றார் அவர். "கிருஷ்ணா குடிநீர் விவகாரத்தில் அ.தி.மு.க அரசு கொஞ்சம் விழிப்புடன் செயல்பட்டிருந்தால், விரைந்து தண்ணீர் வருவதற்கு ஏற்றபடி செய்திருக்கலாம். ஆனால் ஜெயலலிதா அரசு 'தூங்கி விட்டது'. இப்போது நாம் போராட வேண்டியதாகி இருக்கிறது" என்று தனிப்பட்ட முறையில் சொல்லி வருத்தப்படுகிறார் அமைச்சர்.

தமிழகத்தின் பெரும்பாலான அமைச்சர்கள் சென்னையிலும், தொகுதிக்கும், நேரத்தை செலவிட்டுக் கொண்டிருக்கும்போது 'தமிழகத்தின் அனைத்து மாவட்டங்களின் மூலை முடுக்குகளுக்கும் சென்று வந்து கொண்டிருக்கிறார் துரைமுருகன். ஆனால் அவர் இலாகா சந்திக்கும் முக்கியமான பிரச்னை 'நிதி' தான். இன்றுள்ள பட்டவர்த்தனமான நிலை, ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் கொடுக்க தமிழக அரசில் நிதி இல்லை என்பதுதான். இதனால் உலக வங்கி உதவியுடன் நடைபெறும் திட்டங்களைத் தவிர மற்ற திட்டங்களில் ஒப்பந்தக்காரர்கள் ஆர்வம் காட்ட முயல்வதில்லை. தினசரி நிதி இலாகாவுடன் போராடுகிறார் அமைச்சர்.



கன்னியாகுமரி மாவட்டம் சுவாமித் தோப்பு என்ற ஊரில் உள்ள வைகுண்டர் பதிக்குள் ஆண்கள் அனைவரும் தலைப்பாகை கட்டிக் கொண்டுதான் செல்ல முடியும். இப்போதும் இக் கோயிலில் இவ் வழக்கம் இருந்து வருகிறது.

— ஆர். பார்த்திபன்

அரசால் வகுக்கப்பட்ட விதிமுறைகளை மீறி அமைச்சர், தனிப்பட்ட காண்ட்ராக்டர் ஒருவருக்குச் சலுகை காட்டியிருக்கிறார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சோ.பா. சட்டசபையில் கூறிப் பரபரப்பை உண்டாக்கினார். அந்தக் குற்றச்சாட்டு உண்டாக்கிய உணர்ச்சிக் கொந்தளிப்பின் காரணமாக "நான் மரணமடையும்போது, 'எந்தக் குற்றச்சாட்டுக்கும் ஆளாகாத, நாணயமான என் தம்பி துரைமுருகன்' என்று கலைஞர் குறிப்பிட வேண்டும்; அதுவே என் ஆசை" என்று எமோஷனலானார் அமைச்சர். ஊழல் புகாரில் அடிபட்ட பொதுப்பணித்துறை அதிகாரி ஒருவருக்குப் பதவி நீடிப்புப் பெற்றுத் தர துரைமுருகன் முயன்றதும் ஒரு குற்றச்சாட்டாய்ச் சொல்லப் படுகிறது. சர்ச்சைகளுக்கிடையில் அமைச்சர் பணியிருந்தாலும் தி.மு.க அமைச்சரவையில், செயல்படக்கூடிய அமைச்சர்களில் துரைமுருகனும் ஒருவர். ஆனால், தண்ணீர் கஷ்டத்தால் இவ்வாண்டு தவித்துப் போன சென்னைவாசிகள் துரைமுருகனிடம் கோபத்தில் இருக்கிறார்கள். தேர்தல் நேரத்தில் ஆட்சி பேரிலும் கட்சி பேரிலுமான கோபமாக அது மாறக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகம்.

— ப்ரியன்

ADMISSION NOTIFICATION

NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT (NILEM)

Offers the following six months Diploma Courses by Correspondence.

- TOTAL QUALITY MGMT. & ISO 9000
- BUSINESS MANAGEMENT
- PERSONNEL MGMT. & INDUSTRIAL RELATIONS
- HUMAN RESOURCES DEVELOPMENT
- ENVIRONMENT & POLLUTION CONTROL
- BUSINESS ADMINISTRATION
- QUALITY CONTROL & ISO 9000
- INDUSTRIAL SAFETY
- PRODUCTION MANAGEMENT
- SALES & MARKETING MANAGEMENT
- FINANCIAL MANAGEMENT
- OFFICE ADMINISTRATION
- LABOUR LAWS
- MATERIALS MANAGEMENT
- EXPORT & IMPORT MANAGEMENT
- QUALITY ASSURANCE & QS 9000
- ENVIRONMENTAL MGMT. & ISO 14000/14001
- CONTRACT MANAGEMENT
- INTERNATIONAL BUSINESS MANAGEMENT
- FIRE & SAFETY MANAGEMENT
- QUALITY ASSURANCE & ISO 9000

No formal qualification is required for joining the Courses. Each diploma has 4 written papers. Tuition Fee Rs. 700/- (including Study Materials & Model Question Papers). Examination will be conducted in all major centres in India. For detailed Prospectus & Application Form send Rs. 30/- by D.D./I.P.O. in favour of **NATIONAL INSTITUTE OF LABOUR EDUCATION & MANAGEMENT** and apply to **NILEM** No. 59, Second Street, Parameswari Nagar, Adyar, Chennai - 600 020. Ph : 044 - 4911443.

உங்களுக்குள் இருக்கும் அற்புத சக்திகள்



● நமக்குச் சொந்தமான இந்த உடலையும், மனதையும் நல்ல முறையில் ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது நம் கையில் தான் இருக்கிறது. ஆம்! ரேய்கி என்ற அற்புதமான தெய்வீக ஜீவ சக்தியின் மகிமையை ரேய்கி பயிற்சி வகுப்பில் கற்று உணர்ந்தபின், அந்த அருமருந்தான சக்தியை தினமும் நம் உடலுக்கு அளித்து வருவதன் பயனாக நமக்குள் ஏற்பட்டிருக்கும் உடல் பலவீனங்கள், நோய்கள், மனம் சார்ந்த நோய்கள், டென்ஷன், ரத்த அழுத்தம், தலைவலி, தூக்கமின்மை போன்ற பல தொல்லைகளும் நீங்கி, உடலில் சுறுசுறுப்பு, உற்சாகம், தன்னம்பிக்கை, மன அமைதி, ஞாபக சக்தி கூடுவது, நல்ல எண்ணங்கள், குடும்பத்தில் ஒற்றுமை போன்ற பல நன்மைகள் தானாகவே உண்டாகும். உங்களின் ஹீலிங் கைகளை நம்பி வரும் பல தரப்பட்ட மக்களின் உடல் நோய், மனக்கவலை தீர்த்து வைக்கவும் நீங்கள் கை கொடுக்க முடியும்.

● சுயமான ஆர்வத்துடனும், நம்பிக்கையுடனும் ரேய்கி படிக்க விரும்பி வருபவர்களுக்கு, அவரவர் தேவைக்கேற்ப தனி கவனம் செலுத்தி ரேய்கி கற்றுத்தரப்படும்.

● ஆண், பெண் இருவருக்கும், எவ்வளவு வயது ஆகியிருந்தாலும், எவ்வளவு குறைவான படிப்பு இருந்தாலும் ரேய்கி சக்தி பெற தடையில்லை. ஆங்கிலம் புரியாதவர்களுக்கு தமிழிலும் விளக்கம் தரப்படும்.

பயிற்சி விவரங்கள்:

ரேய்கி I & II

ரேய்கி III A & III B

(ரேய்கி மாஸ்டர்ஷிப்)

(ரேய்கி II முடித்தவர்கள் எல்லோரும் மாஸ்டர்ஷிப் படிக்க முடியும்)

கருணா ரேய்கி I & II

கருணா ரேய்கி மாஸ்டர்ஷிப்

மேக்னிஃபைட் ஹீலிங்

(Magnified Healing)

● **ICRT(U.S.A)**யின் மெம்பரான இவர் பிரபல இன்டர்நேஷனல் மாஸ்டர்களான வில்லியம் ரான்ட், பௌலா ஹாரன், ஆல்டன் காமடான், ஜிஸேல் கிங் போன்றவர்களிடம் பயிற்சி பெற்றிருக்கிறார்.

● மன அமைதி தரும் தியான பயிற்சிகள் ஜப்பானிய சிகிச்சை முறைகள் மற்றும் எல்லோருக்கும் மிகவும் தேவைப்படக்கூடிய பல பாதுகாப்பு முறைகளும் இவருடைய ரேய்கி வகுப்பில் கற்றுத்தரப்படும்.

மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

திருமதி. லக்ஷ்மி நாராயணன்
ரேய்கி கிராண்ட் மாஸ்டர்
37/1, இரண்டாவது மெயின் ரோடு,
மலைமகள் நகர், நக்காடுதாங்கல், (100 அடி ரோடு காசி தியேட்டர் அருகில்)
சென்னை – 600 097. போன்: 2323066
Email: lakshmi_reiki@yahoo.com
VISIT: www.reiki-healing.webjump.com

“நீலத் திரைக்கடலோரம் - அங்கே நித்தம் தவம் செய்யும் குமரி, அங்கே ஆழ் கடலில் மூழ்கினேன். மூழ்கி எழுந்து வெளியே வருகையில் கைநிறைய கிளிஞ்சல் களும் சிப்பிகளும் கிடைத்தன. சிப்பி ஒன் றைத் திறந்தேன். அதிலே கண்ணைப் பறிக் கும் முத்து ஒன்று பளிச்சிட்டது. அந்த முத்து தான் கழகத்திற்கு கன்யாகுமரியில் கிடைத்த சொத்து - அந்தச் சொத்துதான் நாஞ்சில் மனோகரன்.''

- காஞ்சிபுரத்தில் நடந்த தி.மு.க. பொதுக்குழுவில், மறைந்த நாஞ்சில் மனோகரனை இப்படி வாய் நிறைய வாழ்த்தியவர் அண்ணா! 1962-ம் ஆண்டில் தென் சென்னை பாராளு மன்றத் தொகுதியில் அவரை வேட்பாளராக நிறுத்தினார் அண்ணா. அப்போது கட்சியின் வெளியேயும் உள்ளேயும் கொஞ்சம் எதிர்ப்பு கிளம் பிற்று. ''அனுபவமும், பக்குவமும் இல்லாத ஒரு கல்லூரி மாணவனை நிறுத்தியிருக்கிறீர்களே'' என்று அண்ணாவிடம் கேட்டார் ராஜாஜி.



‘குமரிக் கடல் முத்து’

அப்போது அண்ணா, ''இருக்கலாம். ஆனால் ஆழமான கட்சிக்காரன்'' என்று சொன்னா ராம். அந்தத் தேர்தலில் தி.மு.க.வில் இருந்து விலகி பரபரப்பு உண்டாக்கிய ஈ.வெ.கே. சம்பத்தும் போட்டியிட்டார். ''இந்தச் சிங் கத்தை எதிர்த்து தி.மு.க. சார்பில் சிறு நரியை நிறுத்தியிருக்கிறார் அண்ணா'' என்று பிரசாரக் கூட்டங்களில் கிண்ட லடித்தார் சம்பத்.

''சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திப்பேன்'' என்று பதிலடி கொடுத்தார் மனோகரன். அந்தத் தேர்தலில் வென்று பாராளுமன்றத்தில் அடியெடுத்து வைத் தார். பதினைந்து வருட காலம் எம்.பியாக இருந்து முத்திரை பதித்தார்.

''தி.மு.க. மாநாடுகளில் பிரெஞ்சுப் புரட்சி, அயர்லாந்து விடுதலை ஆகியவை குறித்து நாஞ்சிலார் பேசியதை மறக்கவே முடியாது'' என்கிறார் தி.மு.க. எம்.எல்.ஏ. கோவை ராமநாதன். '67ல் வடசென்னை யில் போட்டியிட்டு வென்ற மனோகரனை அண்ணா வாழ்த்தியபோது, 'பேசியே மக்கள் வாக்குகளைப் பெற்ற வெகு சிலரில் ஒருவன் நீ' என்று பாராட்டினாராம்.

திருச்சியில் நடந்த தி.மு.க. மாநாட்டில் (1989) எனக்குப் பேச வாய்ப்பு கிடைத்தது. நான் பேசிய முதல் மாநாடு என்ப தால் நடுக்கத்தில் பேச்சு சரியாக அமைய வில்லை. நாஞ்சிலார், அவர்கள் என்னைக் கூப்பிட்டு பேச்சுக் களை எப்படித் தயார் செய்ய வேண்டும் என்று ஒரு வகுப்பே எடுத்தார்'' என்ற நினைவுகூர்ந்தார் பரிதி இளம்வழுதி.

ராஜீவ் காந்தி இறந்த போது வன்முறை கும்பலொன்று அவரது வீட்டில் புகுந்து காரை எரித்து விட்டது. அந்தச் சம்பவங்கள் அவர் மனத்தைப் பெரிதும் பாதித்தன.

“பெரியார், அண்ணா ஆகியோர் கற்றுக் கொடுத்த அரசியல் அடிப்படைப் பண்பு கள் தொலைந்து போய்க் கொண்டிருக்கின் றன. காட்டுமிராண்டி காலத்துக்கு நாம் போய்க் கொண்டிருக்கிறோம் போலிருக் கிறது''என்று மனமுடைந்து அவர் பேசிய துண்டு.

தமது மகன்களை அரசியலுக்கு அறி முகப்படுத்தக் கூடாது என்பதில் மிகவும் தெளிவாக இருந்தார்.

— ப்ரியன்

தங்கத்திற்கு குட்பை!

நவரத்தினங்களில் ஒன்றான முத்து பெண்மையைப்போல் நளினம்மிக்கது. பாலின் நிறத்தை தோற்கடித்துவிடும் அதன் ஜொலி ஜொலிப்பில் ஆதிகாலம் தொட்டே அதீத காதல் நம் பெண்களுக்கு. முத்துக்களை மாலையாக அணியத் தொடங்கிய நம் பெண்கள், இன்று அதனைக் கொண்டு விதவிதமாய் நகைகள் செய்து அணிந்து அசத்துகிறார்கள். தங்க மோகம் தலைவிரித்தாடினாலும், தன் இடத்தை தக்கவைத்திருக்கும் முத்து, கடல் நீரில் மட்டும்தான் விளையுமென்பது நமக்குத் தெரியும். ஆனால் அந்த முத்துக்களுக்குப் பின்னால் உருக்கமான ஒரு கதை இருப்பது உங்களுக்குத் தெரியுமா? அதை நம் வாசகர்களோடு பகிர்ந்து கொள்கிறார் நாராயணா பியர்ல்ஸ் உரிமையாளர் திரு **கே.வி. நாராயணா.**



• **கே.வி. நாராயணா**

"தமிழகத்தில் தூத்துக்குடியில் மட்டும்தான் இன்று கடலில் மூழ்கி, இயற்கை முத்து எடுக்கிறார்கள். 'முத்துக் குளித்தல்' என்று சொல்லப்படும் இந்தப் பரம்பரைத் தொழிலில் மீனவர் சமுதாயத்தைச் சேர்ந்த சிலர் மட்டுமே ஈடுபட்டு வருகின்றனர். காரணம் உயிருக்கு உத்திரவாதம் கிடையாது. முத்துக்குளிக்கும் மீனவன், தனது மனைவியின் தம்பியை மட்டுமே தன்னுடன் அழைத்துச் செல்லும் பழக்கம் இன்றும் வழக்கில் இருக்கிறது. பெரிய பாறாங்கல் ஒன்றைக் கயிற்றில் கட்டி, பின் அதை உடம்புடன் சேர்த்துக் கட்டிக் கொண்டு, ஆழ்க்கடலில் குதிப்பான். கடலின் அடியில் சென்று, மூச்சுப்பிடித்த படி முத்துச்சிப்பிகளைத் தேடி எடுத்ததும், தன் உடம்பில் கட்டியிருக்கும் கயிற்றை ஆட்டினால், படகில் இருக்கும் தன் மைத்துனன் அவசர அவரமாக உடன் கயிற்றை இழுத்து, அவனைக் காப்பான். காரணம் தன் சகோதரி கைம்பெண்ணாக ஆகிவிடக் கூடாது என்ற பயம் கலந்த பாசம். ஆனால் மைத்துனன் இல்லாமல் முத்துக்குளித்த பலர் கடலுக்கு அடியில் காணாமல்போன வரலாறு நிறைய உண்டு" என்றவரிடம், இத்தனை ஆபத்துகளையும் தாண்டி இயற்கை முத்துக்கள் இன்று கிடைக்கின்றனவா? என்றோம்.

"இயற்கை முத்துக்களில் மூன்று வகை உண்டு. ஒன்று கடலில் வாழும் சிப்பிகள். மழை நேரத்தில் நீர்மட்டத்திற்கு மேலே வந்து, தனது வயிற்றை திறந்து காட்டும். அப்போது அதில் விழும் மழைத்துளி, அடுத்துவரும், பௌர்ணமியில் முத்தாக மாறிவிடும். முத்து உருவான சிப்பி உயிரைத் தியாகம் செய்து விடும். இரண்டு நூறு ஆண்டுகளைக் கடந்து உயிர்வாழும் யானையின் தலையில் முத்து இருக்கும். இதைத்தான் 'கஜ முதியம்' என்கிறார்கள். அதே போல் நீண்டநாள் வாழும் ஆப்பிரிக்க தவளை இனத்தின் தலையிலும் முத்துக்கள் தோன்றும். ஆனால் இவை இன்று அருகி விட்டன. இன்று அள்ள அள்ளக் குறையாத அட்சயபாத்திரமாகக் கிடைப்பவை சீன முத்துக்கள்தான்" என்கிறார். அது என்ன சீன முத்துக்கள்?

"கடல் சிப்பிகள் திரவ உணவைத்தான் உண்ணுகின்றன. கடினமான திரவ உணவு அவைகளுக்குச் செரிமாணம் ஆவதில்லை. இதை அறிந்து கொண்ட சீனர்கள், கடல் சிப்பிகளைப் பிடித்து வந்து, 'லைம் கார்போனேட்' என்ற இயற்கை அமிலத்தை அவற்றின் வயிற்றில் செலுத்துகிறார்கள். அமிலம் செலுத்தப்பட்ட சிப்பிகள் அடுத்த மூன்றாவது ஆண்டு முத்துக்களை ஈன்று விடுகின்றன. அதன் பிறகும் அவை உயிர் வாழ்கின்றன. இதுபோன்ற முறையில் உற்பத்தியாகும் சீன முத்துக்கள் அனைத்தும் ஹைதராபாத்துக்கு அனுப்பப்படுகின்றன. காலம் காலமாய் சீனமுத்துக்களை சிறந்த முறையில் பதப்படுத்தி, அவற்றை பாலீஸ் செய்து, டிசைன் செய்து உலகம் முழுவதும் அனுப்புவதில் ஹைதராபாத்தான் முதலிடத்தில் உள்ளது. இந்தத் தொழிலில் பாரம்பரிய அனுபவம் கொண்ட என் தாத்தா நாராயணன் இங்குதான் தனது முத்து வணிகத்தைத் தொடங்கினார். அதன்பிறகு எனது தந்தை வெங்கையா, மூன்றாவது தலைமுறையாக நானும் இதே முத்து வியாபாரத்தில் வந்துவிட்டேன்" என்கிறார்.

"வரும் செப்டெம்பர் பதினெட்டாம்

தேதியன்று சென்னையில் வியாபாரம் தொடங்கி ஐந்தாவது ஆண்டு முடிகிறது. இன்று முத்துக்களைக் கொண்டு எனது தலைமுறையில் புதிய புதிய டிசைன்களில் அணிகளை உருவாக்குகிறோம். இதற்காக இன்ஸ்டிடியூட் ஆஃப் பேஷன் டிசைன்ஸ், வேர்ல்டு டிசைன் புக், போன்றவற்றின் உதவியோடு அதிநவீன டிசைன்களை உரு வாக்கி நியாயமான விலையில் விற்கிறோம். வாடிக்கையாளர் கொண்டுவரும் டிசை னையும் செய்து தருகிறோம்" என்றவரிடம், முத்துக்கள்தான் உங்கள் ஷோரூமின் சிறப்பா என்றதும், "இறக்குமதி செய்யப் பட்ட வண்ணமணிகள் மாலைகளாகவும், நகைகளாகவும் எல்லா வண்ணத்திலும் கிடைக்கும். வாடிக்கையாளர் கொண்டு வரும் புடைவை, சுடிதாரின் நிறத்திற்கே வண்ணமணிகள் கிடைக்கும். அதுமட்டு மல்ல இன்று ஜீன்ஸூம், டாப்ஸூம் அணி யும் மார்டன் பெண்களுக்கு சில்வர் ஆக்சி டைஸ்டு ஜூவல்லரியை நவீன டிசைன் களில் விற்கிறோம். இந்த வகை நகைகளில் காணப்படும் கருப்பு நிழல் அழகோ அழகு. பவளத்திலும் பலவகை நகைகள் உண்டு.

அடுத்து நாங்கள் நம்பர் 1 ரியல் ஜெம்ஸ் விற்பனையாளர்களாக உயர்ந்திருக் கிறோம். தரமற்ற ரியல் ஜெம்ஸ் கற்களை வாங்கி வாடிக்கையாளர்கள் ஏமாந்துவிடக் கூடாது என்பதற்காக ஒரிஜினல் ஜெம்ஸ் கற்ளை அவர்களுக்குக் காட்டி, அவற்றின் தரத்தை விளக்கிக் கூறி விழிப்புணர்வு ஏற்படுத்துகிறோம். அத்துடன் எங்களிடம் வாங்கும் கற்களுக்கு தரச் சான்றிதழ் அட்டையும் கொடுக்கிறோம். வைர நகைகளும் விற்பனை செய்கிறோம். பழை மையான டிசைன்களை விரும்பு வோர்க்கு லைட்வெயிட் நகைகளை ஆன்டிக் ஆப ரணங்கள் செய்து கொடுக்


தொழிற்சாலை...



கிறோம். எமரால்டு ரூபி நெக்லஸ் செட் களும் விற்பனை உண்டு.

எங்களது விற்பனையில் அதிக ஆத்ம திருப்தியையும், வாடிக்கையாளர்கள் தேடி வந்து பெற்று செல்லும்படியும் நாங்கள் செய்து வருவது ராசிக் கற்கள். பிறந்ததேதி, நேரம், இடம், ஜாதகம் இவற்றுடன் வரும் வாடிக்கையாளருக்கு புகழ்பெற்ற ஜோதி டரைக்கொண்டு பலன் கணித்து தேவை யென்றால் மட்டும் பிரச்னைக்கேற்ற கற் களை அணியச் சிபாரிசு செய்கிறோம். வேலைவாய்ப்பு, போட்டி தேர்வு, தாமத மாகும் திருமணம், மகப்பேறு, உள்ளிட்ட பிரச்சனைகளோடு வந்த நம் வாடிக்கையா ளர்கள் இன்று ராசிக்கல் அணிந்து பரி காரம் பெற்றுள்ளனர். அதற்கும் நம் வாடிக் கையாளர்களின் கடிதங்களே சாட்சி. முத்து, வண்ணமணிகள், பவளம், ரியல்ஜெம்ஸ் நகைகளைத் தயாரிக்க அனுபவம் மிக்க பெண் தொழிலாளர்களை கொண்டு தொழிற்சாலை ஷோரூமிலேயே செயல்படு கிறது. வாடிக்கையாளர் அதை நேரில் கண்டுகளிக்கலாம்.

தற்போது ஐந்தாவது ஆண்டு விழாவை முன்னிட்டு ஆகஸ்ட் எட்டாம்தேதி முதல் தீபாவளி வரை 10 முதல் 20 சதவீதம் வரை சிறப்புத் தள்ளுபடி உண்டு என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம் என்கிறார் நாராயணா பியர்ல்ஸ் நிறு வனத்தை நடத்தி வரும் கே.வி. நாராயணன்.

கூடிப்பேசி ஒரு முடிவு...!



முயல் – ஆமை கதை போன்று தலைவர் ரேஸில் முன்னணியில் வந்து இருக்கையைப் பிடித்திருக்கிறார் ஆந்திராவைச் சேர்ந்த பங்காரு லக்ஷ்மண். ஜனா கிருஷ்ணமூர்த்திக்குத்தான் பிரகாசமான வாய்ப்பு என்று நினைத்துக் கொண்டிருந்தவர்களுக்கு ஏமாற்றம்!

புதிய தலைவருக்கு வயது 61. ஹைதராபாத் உஸ்மானியா பல்கலைக் கழகத்தில் வழக்கறிஞர் பட்டம் பெற்றவர் லக்ஷ்மண். பன்னிரண்டு வயதிலேயே அரைக்கால் சட்டை மாட்டிக் கொண்டு காலை நேர ஆர்.எஸ்.எஸ் வகுப்புகளில் கலந்துகொண்டார். 1992ல் நந்தியால் தொகுதியில் முன்னாள் பிரதமர் நரசிம்மராவை எதிர்த்துப் போட்டியிட்டார். தோல்வி. அதேபோல் சென்ற வருடம் ராஜஸ்தான் மாநிலத்திலிருந்து பூட்டாசிங்கை எதிர்த்துப் போட்டியிட்டார். அதிலும் தோல்வி. இப்படி இரண்டு தோல்விகளைச் சந்தித்தும் கட்சி இவரைக் கைவிட்டு விடவில்லை. குஜராத் மாநிலத்திலிருந்து இவரை ராஜ்ய சபைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியது பா.ஜ.க. அமைச்சர் பொறுப்பும் வந்து சேர்ந்தது.

"தலித் என்ற ஒரு தகுதி காரணமாக மட்டும் அவர் தலைமைப் பொறுப்புக்கு வரவில்லை. அவர் ஒரு பழுத்த தலைவர்; அவர் தலைமையில் கட்சி வளரும்" என்று நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் குஷாபாவ் தாக்கரே. "ராமர் கட்சிக்குத் தம்பி லக்ஷ்மண் தலைவர் ஆகியிருக்கிறார்" என்று கிண்டலடிக்கிறார்கள் மார்க்ஸிஸ்டுகள்.

பா.ஜ.க.வின் தலைமை விவகாரங்களில் இயல்பாகவே ஆர்.எஸ்.எஸ். மூக்கை நுழைக்கும். அது போலவே இந்த முறையும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பு ஜனா. கிருஷ்ணமூர்த்தியைச் சிபாரிசு செய்தது. ஆனால் இந்தி மொழியில் வெளுத்துக் கட்டும் திறமை அவருக்கில்லாததால் ஓரங்கட்டப்பட்டார். இது தவிர சுஷ்மா ஸ்வராஜ், வெங்கையா நாயுடு ஆகியோரும் முட்டிப் பார்த்திருக்கிறார்கள். பயனில்லை.

அத்வானி நடத்திய ரத யாத்திரையில் (1998) பங்கு பெற்று நாடு முழுவதும் வலம் வந்தவர் பங்காரு. அதனால் அவருடன் நல்ல நெருக்கம். ராஜஸ்தானிலும், குஜராத்திலும் ஏற்கெனவே அறிமுகமாகி இருப்பதால் அங்குள்ள கட்சிப் பிரமுகர்களுக்கு லக்ஷ்மண் தலைவராகி இருப்பதில் ஏக சந்தோஷம். இந்தி மட்டுமல்லாமல், ஆங்கிலம், தெலுங்கு, மராட்டி என்று பலமொழி பேசும் வித்தகர்.

"எங்கள் அரசின் மரியாதையைக் காப்பாற்றுவது என் முக்கியப் பணியாக இருக்கும். கட்சியில் நான் வாஜ்பாய் கோஷ்டியுமல்ல; அத்வானி கோஷ்டியுமல்ல, நான் ஒரு கட்சிக்காரன். கட்சி என்னை வழி நடத்தும். பா.ஜ.கவில் எடுக்கப்படும் முடிவுகள் தனி மனிதரால் எடுக்கப்படுபவையல்ல; கூடிப்பேசித்தான் ஒவ்வொன்றுக்கும் தீர்வு காண்கிறோம்" என்கிறார் பங்காரு லக்ஷ்மண்!

— ரமா

கிரிமினல்கள் ஜாக்கிரதை – 2

தடய அறிவியல் நிபுணர் டாக்டர் **பி. சந்திரசேகரன்**

என்னைப் பார்த்து எம்.ஜி.ஆர். சிரித்தது எப்படி?

"எந்த ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்டாலும் அதைப் பற்றி முழு விவரங்களையும் சேகரித்துத் தருவதால் தான் உங்களுக்கு 'சேகரன்' என்ற பெயரோ என்று தமாஷாகச் சொன்ன எம்.ஜி.ஆர் தொடர்ந்து, "ஆனால் என்னுடைய வழக்கில் மட்டும் முக்கியமான தகவலைச் சேகரித்துத் தர மறந்து விட்டீர்களே சேகரன்" என்றார்.

"இல்லையே... கூடுமான வரை எல்லாத் தகவல்களையும் திரட்டி உதவினேனே!" என்றேன் பதற்றத்துடன்.

"நான் துப்பாக்கியால் மிக அருகிலிருந்து சுடப்பட்டும், எம்.ஆர். ராதா அண்ணன் தன்னைத் தானே சுட்டுக் கொண்டபோதும் இருவரின் உயிருக்கும் எந்த ஆபத்தும் ஏற்படவில்லையே; ஏன்? அதற்கான காரணத்தைக் கண்டறியவில்லையே சந்திரசேகரன்!" என்றார் எம்.ஜி.ஆர்.

தடய இயல் நோக்கில் பார்க்கும் போது எம்.ஜி.ஆர் அவர்கள் எழுப்பிய கேள்வி மிக, மிக முக்கியமான ஒன்றாகத்தான் தோன்றியது. ஆனால் எம்.ஜி.ஆர் போன்று மக்கள் அபிமானத்தைப் பெற்ற தலைவர் பிழைத்து வந்ததைக் கொண்டாடிக் கொண்டிருந்த மக்கள் மத்தியில் 'அருகிலிருந்து சுடப்பட்டும் ஏன் இறக்கவில்லை?' என்ற நோக்கில் ஆராய்ச்சி செய்து வெளியிடுவது நாகரிகமாக இருக்காது என்று நான் கருதினேன். இருந்தாலும் அந்த ரீதியிலும் ஆராய்ச்சி செய்து அதற்கான விடையைக் கண்டுபிடித்து வைத்திருந்தேன். எம்.ஜி.ஆர் கேட்ட கேள்வி என்னைப் பன்னிரண்டு வருடங்கள் பின்னோக்கி அழைத்துச் சென்றது.

அப்போது தடய அறிவியல் துறையில் உதவி இயக்குனராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அண்ணா தலைமையில் தி.மு.க அரசு பொறுப்புக்கு வந்திருந்த நேரம். முதல்வர் அவர்கள் என்னை மகாராஷ்ட்ரா மாநிலம், கிர்கியிலுள்ள ராணுவத் துப்பாக்கி பயிற்சி நிலையத்துக்குச் சிறப்புப் பயிற்சி பெற்று வர அனுப்பியிருந்தார். அதனை ஞாபகம்



வைத்துக் கொண்டிருந்த அண்ணா அவர்கள் சிகிச்சைக்காக அமெரிக்கா போவதற்கு முன் என்னை அழைத்து "இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விஞ்ஞானபூர்வமான எல்லா உண்மைகளையும் சேகரித்து நீதியை நிலை நாட்ட உதவ வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். நானும் அப்படியே செயல்பட்டேன்.

ஆய்வு நோக்கில் கண்டுபிடித்த எல்லா தகவல்களையும் நீதிமன்றத்தில் தெரிவித்தோம். இந்த வழக்கில் முக்கியமாக நிரூபிக்க வேண்டிய ஒன்றாக நாங்கள் எடுத்துக் கொண்ட விஷயம், எம்.ஜி.ஆர் - ராதா இருவரும் சுடப்பட்ட விவகாரத்தில் பயன்படுத்தப்பட்டது ஒரே துப்பாக்கிதானா என்பதுதான். ஏனென்றால் ராதா தமது துப்பாக்கியால் எம்.ஜி.ஆரைச் சுட்டுவிட்டு, தன்னையும் சுட்டுக் கொண்டார் என்பதுதான் போலீஸ் வழக்கு. ஆனால் ராதா தரப்பில், "எம்.ஜி.ஆர் அவரது துப்பாக்கியால் ராதாவைச் சுட்டதால், தற்காப்புக்காக ராதா அவரது துப்பாக்கியால் எம்.ஜி.ஆரைச் சுட்டார்" என்ற வாதம் வைக்கப்பட்டது.

எம்.ஜி.ஆர். வைத்திருந்த துப்பாக்கியும் ராதா வைத்திருந்த துப்பாக்கியும் ஒரே நிறுவனத்தில் செய்யப்பட்ட ஒரே மாடல் துப்பாக்கிதான். துப்பாக்கியிலிருந்து வெளிவரும் குண்டு, அதனுள் வெடி மருந்து எரிவதால் ஏற்படும் வெப்பத்தின் காரணமாக சற்று விரிவடைந்து துப்பாக்கி குழலின் (barrel) உட்புறத்தை இறுக உரசிக் கொண்டும், குழலினுள்ளே இருக்கும் Rifling என்ற அமைப்பால் தன்னைத்தானே சுற்றிக் கொண்டும் வெளியேறுகிறது. அப்படி வெளியேறும்போது துப்பாக்கிக் குழலின் முகத் துவாரத்தில் (Muzzle end) சீறிக் கொண்டு பாயும் குண்டுகளின் உரசல், கோடுகளை உண்டாக்கும். ஒரு துப்பாக்கியில் உள்ள இப்படிப்பட்ட உள்ள அமைப்பு, வேறொரு துப்பாக்கியின் உள்ள அமைப்பைப் போல் இருக்கமுடியாது என்பது தடய அறிவியலார் கண்டுபிடித்திருந்த உண்மை. அதே போல ஒரே துப்பாக்கியிலிருந்து புறப்படும் குண்டுகளின் வெளிப்புற உரசற் கோடுகள் ஒரே மாதிரி இருக்கும். துப்பாக்கியால் சுடப்பெற்றவரின் உடம்பிலிருந்து எடுக்கப்பட்ட ஒரு குண்டை, சந்தேகப்பட்ட துப்பாக்கியிலிருந்து சோதனைக்காகச் சுடப்பட்ட மற்றொரு குண்டுடன் பொருத்தி, மைக்ராஸ்கோப்பில் பார்த்தால் அதில் தெரியும் உரசற் கோடுகளின் ஒற்றுமை அல்லது வேற்றுமைகளை வைத்து உண்மையை அறியலாம்.

இந்த முறையைப் பயன்படுத்தித்தான் எம்.ஜி.ஆர் உடம்பிலிருந்தும், எம்.ஆர். ராதா உடம்பிலிருந்தும் எடுக்கப்பட்டக் குண்டுகள் ஒரே துப்பாக்கியிலிருந்து சுடப்பட்டவை என்று கண்டறிந்தோம். அந்த ஒரே துப்பாக்கிக்குச் சொந்தக்காரர் ராதாதான் என்பதை உறுதிப்படுத்த வேறொரு சோதனையும் செய்தோம்.

வழக்குக்கு இந்த ஆய்வு மட்டுமே போதுமானதாக இருந்ததால் "இருவரின் உயிருக்கும் ஏன் ஆபத்து வரவில்லை' என்ற கேள்வி எழுப்பப்படவில்லை.

ஆனால் நீதிமன்றத்தில், வழக்கில் தடய அறிவியலின் பங்களிப்பைப் பற்றிய விவாதம் நடந்து கொண்டிருந்தபோது ராதா என்னை நோக்கி, அவருக்கே உரித்தான பாணியில் பொரிந்து தள்ளினார்.

எம்.ஆர். ராதா அவர்கள் என்னை நோக்கி இண்டலடித்ததால் உண்டான ரோஷம் காரணமாக அவரது கேள்விக்கு விடை காண நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டேன்!

எம்.ஜி.ஆர் - ராதா இருவரும் வைத்திருந்த துப்பாக்கிகள், ரிவால்வர் ரகத்தைச் சேர்ந்தவை. ஆறுமுறை இந்தத் துப்பாக்கி



• எம்.ஜி.ஆருடன் சந்திரசேகர்

யால் தொடர்ந்து சுட முடியும். துப்பாக்கி ரவைகள் என்பது பித்தளை அல்லது தாமிரக் குப்பியில் ஒரு பக்கம் மூடிய அமைப்புடன் வெடிமருந்து அடைக்கப்பட்டிருக்கும். திறந்திருக்கும் மற்றொரு பக்கத்தில் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கும். மூடிய அடிப்பாகத்தில் தாக்கப்படும் பாகம் (percussion cap) ஒன்று பொருத்தப்பட்டிருக்கும். இந்த percussion capல் துப்பாக்கி விசை தாக்கியவுடன் விசையின் முனை அந்த precussion capஐத் தாக்கும். உடனே அதிலிருந்து தீப்பொறிகள் கிளம்பி வெடிமருந்தைக் கொளுத்தும்.

எரிகின்ற வெடிமருந்துக்கு மிகக் குறுகிய இடமே குப்பியினுள் இருப்பதால், அங்கே ஏற்படும் அபரிமிதமான அழுத்தம் குண்டைத் துப்பாக்கி குழல் மூலம் வெளியேற்றி விடும். குப்பியினுள் எவ்வளவு அழுத்தம் இருக்கின்றதோ அதே அளவு வேகமாகக் குண்டு துப்பாக்கியிலிருந்து வெளியேறும். எனவே வெளிப்படும் குண்டின் வேகத்தை, குப்பியில் இணைக்கப்பட்டிருக்கும் குண்டு பிடிப்புதான் நிர்ணயிக்கிறது. இந்தப் பிடிப்பு மிக அதிகமாக இருந்தால், குண்டு விடுபடாத ரவை துப்பாக்கிக்குள்ளேயே வெடித்து விடும்!

இவ்வளவு விளக்கம் கொடுப்பதற்குக் காரணம், இந்த விவரங்களைத் தெரிந்து கொண்டால்தான் மிகவும் அருகில் இருந்து ஒரே துப்பாக்கியால் சுடப்பட்டும், எம்.ஜி.ஆர், ராதா ஆகிய இருவரில் ஒருவர் உயிருக்குக் கூட ஆபத்து ஏற்படாததன் காரணம் புரியும்.

இந்த அடிப்படையோடு எனது ஆய்வைத் துவக்கினேன். எம்.ஆர். ராதாவின் துப்பாக்கியில் மீதமிருந்த ரவைகளையும், அவர் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்ட ரவைகளையும் ஆராய்ந்தேன். இந்த ரவைகளை ஏறத்தாழ 15 ஆண்டுகளுக்கு முன்னர் ராதா வாங்கினார் என்பது விசாரணையில் தெரிய வந்தது. மேலும் இந்த ரவைகளை ஒரு தகர டப்பாவில் போட்டு தம் மேஜை டிராயரில் வைத்திருந்தார் என்ற உண்மையும் தெரிய வந்தது. அடிக்கடி பயன்படுத்தும் இந்த மேஜை டிராயரை (working table) ஒரு நாளைக்குப் பத்து முறையாவது இழுத்து மூடியிருப்பார் என்று வைத்துக் கொண்டால்கூட, பதினைந்து வருடங்களில் ஐம்பதாயிரம் முறை டிராயரை இழுத்து மூடியிருப்பார் என்று கணக்கிடலாம். ஒவ்வொரு முறை இழுத்து மூடும்போதும், தகர டப்பாவில் இருந்த ரவைகள், ஒன்றோடொன்று அடிபட்டும், முட்டியும் மோதியும் பாதிக்கப்பட்டதால் குண்டுகளின் மேல் பிணைக்கப்பட்டிருந்த குழாயின் (cartridge case) பிடிமானம் தளர்ந்து போய்விட்டிருக்கிறது.

இப்படி பிடிப்பு அழுத்தம் மற்றும் ஊடுருவும் சக்தி குறைந்த ரவைகளைப் பயன்படுத்தியதால்தான் அவை உடலை ஊடுருவிச் சென்று ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அதன் காரணமாகவே விவகாரத்தில் சம்பந்தப்பட்ட இருவரும் பிழைத்துக் கொண்டார்கள்.

இவ்வளவு விவரங்களையும் எம்.ஜி.ஆரிடம் சொன்னேன். "நீங்கள் எமனைப் பார்த்துச் சிரித்து மீண்டதன் காரணம் இதுதான் என்றேன். எம்.ஜி.ஆருக்கு இந்த விஞ்ஞான பூர்வமான காரணங்களைக் கேட்டதும் ஒரே சந்தோஷம். "இந்த உண்மைகளைத் தடய அறிவியல் துறைக்குப் பயன்படும்படி வெளியிட வேண்டும்" என்று கேட்டுக் கொண்டார். அதன் பின்னர் பல தடய அறிவியல் கருத்தரங்குகளில் இது பற்றிப் பேசியிருக்கிறேன்.

இதற்குச் சில ஆண்டுகளுக்குப் பிறகு வேறு காரணங்களுக்காகச் சிகிச்சை பெற எம்.ஜி.ஆர். ஜப்பானுக்குச் சென்றார். ஒரு நள்ளிரவில் ஜப்பானில் இருந்து போன் அழைப்பு! பேசியவர் முதல்வரின் செயலர். குரலில் கொஞ்சம் பதற்றம்.

(தொடரும்)



"என்னது! கிலோ நாலு ரூபாய்தானா? ரொம்பக் கஷ்டப்பட்டு எதிர்வீட்டில் இரவல் வாங்கிச் சேர்த்த பேப்பருப்பா... கொஞ்சம் பாத்து விலை சொல்லு!"
— உ. ராஜாஜி

எரிந்து அடங்கிப் போன சிதையை ஒரு குச்சியால் ஒழுங்குபடுத்தி, வரட்டிச் சாம்பல் வேறு, எலும்புச் சாம்பல் வேறு என்று ஒதுக்கிக் கொண்டிருந்தான் பூசைமுத்து. இன்னும் சற்று நேரத்தில் அந்தச் சடலத்தின் எலும்புகளைப் பொறுக்கி எடுத்து, நதியில் கரைக்க உறவுக் காரர்கள் வந்து விடுவார்கள் என்பதால், எலும்புகள் எளிதில் தெரியும்படி செய்து கொண்டிருந்தான்.

அவன் தொழில் நேர்த்தியை உப்பிலி எத்தனையோ முறை பார்த்து வியந்திருக்கிறான். சடலம் எரியூட்டப்பட்ட பிறகு இறந்து போனவர் எந்த சாதியைச் சேர்ந்தவராக இருந்தாலும் அவனுடைய பொறுப்பில் எடுத்துக் கொண்டு அரைவேக்காடு இல்லாமல் முழுமையாக எரித்துக் கொடுப்பதைத் தன் கடமையென எண்ணிப் பணிபுரியும் பூசைமுத்து மேல் உப்பிலிக்கு நட்பும், மதிப்பும் உண்டு.

அந்தச் சமத்துவபூமியில் அந்த இருவரிடையே அலாதியானதொரு நட்பு நிலவியது. ஒரு வகையில் பூசைமுத்துவின் பாடு தேவலாம் என்று உப்பிலி நினைப்பதுண்டு. அக்ரஹாரத்தில் சாவு விழுந்தால்தான் உப்பிலிக்கு அழைப்பு வரும்.

பூசைமுத்துவுக்கு அப்படியில்லை!

முனிசிபாலிடியில் அவனுக்கு அளிக்கப்படுவது சொற்பமான சம்பளமே என்றாலும் சாவு வீட்டுக் காரர்களிடம் கறாராகப் பேசிக் கறந்து விடும் சாமர்த்தியம் அவனுக்கு இருந்தது.

உப்பிலிக்குப் பேச்சு சாமர்த்தியமும் போதாது. அழுக்கும் கரியும் படிந்த பூணூல், ஒட்டிய கன்னம், குழி விழுந்த கண்கள், இவை வறுமை அவனுக்கு அளித்த கோலம் என்பதுதான் உண்மை என்றாலும், "பிரேத காரியங்களைப் பண்ணிப் பண்ணி உனக்கும் பொணக் களை வந்துடுத்துடா" என்று சேஷாத்ரி வாத்தியார் அடிக்கடி



பிங்களன்

சமத்துவ பூமி

கூறும்போது, அதுவும் உண்மைதான் என்று தோன்றும்.

அவனும் சின்ன வயதிலேயே சேஷாத்ரி வாத்யாரைப் போல வேதம் படிக்கப் போனவன்தான். அவனுடைய மூளையில் ஏறவில்லை. பின்னர் சமையலுக்கு எடுபிடி என்று போனான். சரிப்படவில்லை. இந்தப் பிழைப்பில் தான் போட்டி இல்லை என்பதால் இதுவே அவனுக்கு நீடித்து விட்டது.



உப்பிலியின் மகன் சீனுவும், பூசை முத்துவின் மகன் மாரியும் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு வேலை தேடிக் கொண்டிருந்தார்கள். தன் மகனுக்கு வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கை உப்பிலிக்கு என்றுமே இருந்ததில்லை.

"பூசமுத்து! ஒன் பிள்ளை ஏதோ வேலை கெடைக்கும்னு நேத்து எங்கியோ போனானே என்ன ஆச்சு?'' என்று திடீரென்று கேட்டான் உப்பிலி.

"வேலை எங்க ஐயரே கிடைக்குது! என் தொழிலுலேயே இருந்துடலாம்னு நெனைக்

கிறேன். இந்தத் தொர மவன் ஆபீஸ் வேலைக்குத்தான் போவேன்கிறான் கடேசில முட்டி மோதிக்கிட்டு இங்க தன்னால வருவான் கழுதை."

"என் பிள்ளைக்குத்தான் எங்க போனாலும் இல்லேங்கறான். ஒங்க சாதிக்காரானுக்குன்னு சர்க்காரில வேலை ஒதுக்கி வெச்சிருக்கானே."

இதைக் கேட்டவுடன் பூசைமுத்து வாய் விட்டுச் சிரித்தான். "அய்யிரே! ஒனக்கு ஒலகம் தெரியலை. இப்ப சர்காரில காந்தி மவராசனும், அம்பேத்காரய்யாவுமா இருக்காங்க! கையில துட்டுகீதா! சிவாரிஷுகீதா இந்தாப் பிடி வேலை- நம்ம ஒறமுறக்காரன் ஒருத்தன் பெரிய்ய ஆபீசராக்கிறான் சூடிமுத்துப் பிள்ளைன்னு. இன்னா லாபம்?"

"ஒன்னோட உறவுங்கறே சூடிமுத்துப் பிள்ளைங்கிறியே?" என்று கேட்ட உப்பிலியைப் பார்த்துச் சிரித்தான் பூசைமுத்து.

"அவன் என் மாமன் மவந்தான். எங்க ஆத்தா கையில சோறு துன்னவந்தான். நல்லாப் படிச்சான். ஆபீசரானதுக்கு அப்பால பேரையும் பிள்ளைன்னு ஒட்டிக்கிட்டான். நானும் புள்ளையக் கூட்டிக்கிட்டு அவன் வூட்டாண்ட போய் நின்னேன். ஊட்டுக்குள்ளாறவேவுடலையே. மசானத் தீட்டு உள்ள வராதேன்னுட்டான். ஒம்புள்ளைக்குச் சிபாரிஷு செய்தா எம்பேரு கெட்டுடும்னான்" என்று கூறிய பூசைமுத்து சரமாரியாகக் கெட்ட வசவுகளைப் பொழிய ஆரம்பித்தான். அவனுக்குக் கோபம் வந்தால் அப்படித்தான்.

"உப்பிலி"- மயானத்தின் சுற்றுச் சுவருக்கு வெளியேயிருந்து சேஷாத்ரி வாத்தியார் குரல் கொடுத்தார். அவரைப் பார்த்தவுடன் பூசை முத்துவும் தன் தலையில் கட்டியிருந்தத் துண்டைக் கையில் எடுத்துக் கொண்டான்.

"உப்பிலி ஒன்னால ஒரு காரியம் ஆகணும். சக்ரபாணி அய்யங்கார் ஆத்துல நாளைக்குப் பதினோராம் நாள் காரியம். ஏகோதிஷ்டம்" ஒத்தையனாக சாப்பிட வர்றேன்னு சொன்ன சீமா காலை வாரிட்டான். நீ அந்த இலைக்கு உட்காரணும்."

"ஒத்தையனாக" சாப்பிட பிராமணர்கள் கிடைப்பது கஷ்டம் என்பது அவனுக்குத் தெரியும். தன்னைப் போன்ற கீழ்மட்டப் பிராமணன்தான் அதற்குச் செல்ல வேண்டும். ஒத்தையனாகச் சாப்பிடுவது பிரேதத்துக்கு அருகில் உட்கார்ந்து சாப்பிடுவது போல மகாபாபமான சமாசாரம் என்று அவன் கேள்விப்பட்டிருக்கிறான். எனவே இதுவரை அவ்வாறு செல்ல அவனுக்கு மனம் இடம் தரவில்லை.

"அண்ணா மன்னிச்சுக்கோங்கோ. நீங்க சொல்லித் தட்டறேன்னு நெனைக்கப்படாது. சவுண்டிக்கு வேணா வர்றேன்."

சவுண்டி என்பது பன்னிரண்டாம் நாள் காரியம். ஆனால் அதற்குத் தன்னை அழைப்பார்கள் என்று அவன் நம்பியதில்லை.

அதற்கு 'உட்காருகிறவர்களுக்கு' வெள்ளி டம்ளர் - பாத்திரம். சில இடங்களில் தங்க மோதிரமும் உண்டு. பெரும்பாலும் மாப்பிள்ளை, மச்சினன் என்று உறவுக்காரர்களையே வைத்து விடுவார்கள்.

சேஷாத்ரி வாத்யாருக்கு முகம் சிவந்தது.

'சவுண்டிக்கெல்லாம் ஒன்னை ஏண்டா கூப்பிடணும்!' ஏதோ சிரமப்படறயேன்னு சொன்னேன். "சக்ரபாணி அய்யங்கார் பெரிய ஆபீசா தெரியுமோன்னோ இப்போ கை குடுத்து ஒத்தாசை பண்ணினாக்க, பின்னால ஒம் பிள்ளைக்கு வேலைக்குச் சிபாரிசுக்குப் போலாம். அப்புறம் ஒன் இஷ்டம்" வாத்யார் ஸ்கூட்டரை உதை விட்டுக் கிளம்பினார்.

> **''படத்துக்கு 'கல்யாணத்துக்கு வாங்க'ன்னு பெயர் வெச்சது தப்பா போச்சு!''**
>
> **''ஏன்.... என்ன ஆச்சு?''**
>
> **''இடைவேளையிலே'எங்கே, இலைபோட்டாச்சா, பந்தி பரிமாறியாச்சா'ன்னு ரசிகர்கள் கேட்குறாங்க!''**
>
> **– வைதேகி மாதவன்**

அன்று அய்யங்கார் வீட்டில் பதிமூன்றாம் நாள் சுபஸ்வீகாரம்.

கோஷ்டியாக 25 வைணவ வைதீகர்கள் திவ்யப் பிரபந்தம் சாதித்துக் கொண்டிருந்தார்கள். இன்னொருபுறம் வேத கோஷங்கள் முழங்கின.

அவர்களைக் கண்ட உப்பிலிக்குத் தன் மேல் கழிவிரக்கம் ஏற்பட்டது. உள்ளே செல்லத் தயங்கி வெளியேயே நின்று கொண்டான்.

வெளியே பிச்சைக்காரர்கள் கூட்டம். கையில் அலுமினிய மண் சட்டிகளுடன் காத்திருந்தது. குறுக்கே தெரு நாய்கள் ஓடிக் கொண்டிருந்தன. சக்ரபாணி அய்யங்கார் வெளியே வந்து பார்த்தார். யாரையோ எதிர் பார்ப்பது போலத் தோன்றியது. உப்பிலி கும்பிடு போட்டான். இவனைப் பார்த்தும் அவர் கண்டுகொள்ளவில்லை. பதினோராம் நாள்- ஒத்தையனாக வந்தது- சேஷாத்ரி

வாத்தியார் மந்திரம் சொல்ல- இவனுடைய கால்களைப் பசுஞ்சாணி இட்டுக் கழுவியது. இதெல்லாம் வெறும் சடங்குகள்தான் என்பது உப்பிலிக்குப் புரிந்துதான் இருந்தது என்றாலும் சேஷாத்ரி வாத்தியார் அவனை அன்றைய சடங்குக்கும் அழைத்திருந்தார்.

உப்பிலி வெளியேயே நின்று கொண்டிருந்தான். இன்னும் சற்று நேரத்தில் சடங்குகள் முடிந்துவிடும். அதன் பின் இலை போடுவார்கள். பசி வயிற்றைக் கிள்ளியது.

வெள்ளை நிற மாருதி வந்து நின்றது. அய்யங்கார் வெளியே வெற்றுடம்பும், பஞ்சக்கச்சமுமாக ஓடி வந்தார்.

"வாங்கோ... வெல்கம்..."

கதவைத் திறந்து இறங்கியபடி –

"ஃபங்ஷன் முடிஞ்சிடுச்சிங்களா. லேட்டா



யிடுச்சு. கடைசி நிமிஷத்துல மினிஸ்டர்கிட்டேயிருந்து 'கால்' வந்திடுச்சு."

"சரியான நேரத்துக்குத்தான் வந்திருக்கேள்" அய்யங்கார் குழைந்தார்.

"சார்தான் சூடிமுத்துப் பிள்ளைவாள், ஹோம் டிபார்ட்மெண்ட் ஜாயிண்ட் செக்ரடரி"- அய்யங்கார் உறவினர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது இவன் காதில் விழுந்தது.

சூடிமுத்துப் பிள்ளை. இவர்தான் பூசை முத்துவின் உறவுக்காரராக இருக்க வேண்டும். அய்யங்காரே இவ்வளவு வழியறாரே? பெரிய ஆபீசராகத்தான் இருக்க வேண்டும்.

அய்யங்கார் சமையற்காரனைக் கூப்பிட்டார். "ஓய் இவர் அவசரமாப் போணும். உடனே ரெண்டு இலையப் போடுங்கோ. கூடவே நானும் உட்கார்ந்துடறேன்."

பரிசாரகர் தயங்கினார்.

"அண்ணா! சுபஸ்வீகாரம் இன்னும் முடியலை. பெருமாளுக்குத் திருவாராதனம் முடியணும். வைதீகாள் ததியாராதனை ஆயி சாப்டப்பறம்தான் மத்தவா சாப்டறதுன்னு வழக்கம்."

"ஓய்! எல்லாம் எனக்குத் தெரியும். சொல்றதைச் செய்யும். வைதீகாள்ளாம் ஹால்லதானே இருக்கா? இங்கே இந்த ரூம்ல ரெண்டு இலையைப் போடும் அவாளுக்குத் தெரிவானேன்."

அந்த அறை தெருவை ஒட்டி இருந்தது என்பதால் உப்பிலிக்கு எல்லாம் கேட்டது.

அய்யங்காரும், சூடிமுத்துப் பிள்ளையும் சாப்பிடத் தொடங்கி விட்டார்கள்.

"மிஸ்டர் சக்ரபாணி நாளைக்கு இண்டர்வ்யூவுக்கு உங்க உறவுக்காரப் புள்ளை வரானில்ல..." வேலையைப் பற்றிய பேச்சு என்றதும் உப்பிலி கூர்ந்து கேட்டான்.

"நானே ஞாபகப்படுத்தணும்னு நெனைச்சேன். இன்னிக்குச் சாயங்காலம்தான் ஊரிலிருந்து வர்றான் கொஞ்சம் பார்த்துக்கங்க."

"அய்யங்கார் கவலைப்படாதீங்க. அவனுக்குத்தான் அந்த வேலைன்னு முடிவு பண்ணியாச்சே" என்றார் பிள்ளை.

"அது ரிசர்வ்ட் போஸ்ட். அதுனால சிக்கல் இருக்குமோன்னு நெனைச்சேன்."

"ரிசர்வ்ட் வேலைதான். ஆனால் அதுக்கு வழி இருக்குதே. ரிசர்வ்ட் சாதிலருந்து விண்ணப்பமே வரலைன்னு சொல்லிடலாம். பத்து விண்ணப்பம் அந்த சாதிலிருந்து வந்துச்சு. ஒண்ணும் சரியில்லே. ஓபன் காம்படிஷன்ல எடுக்கலாம்னு எழுதிட்டேன்" என்றார் சூடிமுத்து. பின்னர் குரலைத் தாழ்த்தியபடி,

"அய்யங்கார் நம்ம பெரம்பலூர் காண்டிராக்டர் ராஜி பைல் உங்ககிட்டதான் இருக்குதாம். கொஞ்சம் கவனிச்சுக்கங்க" என்று கூறிக்கொண்டே கைகழுவ எழுந்தார் சூடிமுத்து.

ஹாலில் வைதீகர் ஒருவர் பகவத் கீதையின் சரமஸ்லோகத்துக்கு விளக்கம் அளித்துக் கொண்டிருந்தார்.

"சர்வதர்மான் பரித்யஞ்ச மாமேகம் சரணம்வ்ரஜ" என்று தொடங்கி அய்யங்கார் எத்தனை சிரத்தையுடன் தன் தாயாருக்குச் செய்ய வேண்டிய வைதீகக் கடமைகளைச் செய்கிறார் என்று சிலாகித்துக் கொண்டிருந்தார்.

உப்பிலி வெடுக்கென்று எழுந்து நடக்கத் தொடங்கினான்.

பசி வயிற்றைக் கிள்ளியது. வீட்டில் சோறு இருக்காது. மயானத்தை நோக்கி நடந்தான். பூசைமுத்து மதிய உணவு சாப்பிடும் நேரம்.

வழக்கம் போல அவன் பழைய சோறு கொடுத்தால் மறுக்கக் கூடாது. சாப்பிட வேண்டும் என்ற நினைப்புடன் நடையை வேகமாக்கினான். ●

ஸ்ரீ அய்யப்பா டிராவல் ஏஜன்சி

S.A.T.A

21, வெள்ளாளத் தெரு, புரசைவாக்கம், சென்னை – 84. ✆ : 6431023

Email : sriayyappatravelagency@usa.net / sriayyappatravels@hotmail.com

முக்திநாத் (சாளக்கிராக யாத்திரை) 23-9-2000 முதல் 14 நாட்கள். பூரி, கோனார்க், புவனேஸ்வரம், வாரணாசி (காசி), போக்ரா, ஜிம்ஸிம், முக்திநாத், காட்மண்டு, பசுபதிநாத், அயோத்யா, திருவேணி சங்கமம், வாரணாசி, 2–ம் வகுப்பு 3 டயர் ரயில்–பஸ், உணவு, தங்குமிடம் உள்பட ரூ. **6,300/-** (ஆகாய விமான கட்டணம், குதிரை கட்டணம் தனி)

தீபாவளி கங்காஸ்நானம், தங்க அன்னபூரணி தரிசனம். 19-9-2000 முதல், 14 நாட்கள். பூரி, கோனார்க், புவனேஸ்வரம், கயா, வாரணாசி, அயோத்யா. உணவு, தங்குமிடம், 2–ம் வகுப்பு 3 டயர் ரயில் மற்றும் பஸ் உள்பட ரூ. **4,500/-**

பூரி புருஷோத்தம யாத்திரை. 11-9-20000 முதல் 10 நாட்கள். நெல்லூர், மங்களகிரி, விஜயவாடா, பத்ராஜலம், ராஜமுந்திரி, அரசவள்ளி, பூரி, கோனார்க், புவனேஷ்வர், சிம்மாசலம், ஸ்ரீகூர்மம், பெனுகொண்டா (வாசவி கன்னிகா பரமேஸ்வரி), திராட்சக்ஷா ராமம், அன்னவரம், ஸ்ரீசைலம், மந்திராலயம், பஞ்சமுகி ஹனுமார், மஹாநந்தி, அஹோபிலம், திருத்தணி, சென்னை. காபி, டிபன், உணவு, தங்குமிடம், மாநிலவரி உள்பட ரூ. **2,781/-**

வைஷ்ணவ திவ்ய தேச யாத்திரை. பாண்டிய நாடு 18, மலை நாடு 13, 31 திவ்ய தேசங்கள் 26-11-20000 முதல் 8 நாட்கள். 2×2 புஷ்பேக் பஸ், டிபன்–காபி, உணவு, தங்குமிடம், மாநிலவரி உள்பட நபர் 1–க்கு ரூ. **2,430/-**

"5 வருட இடுப்பு வலியிலிருந்து ஆப்ரேஷன் இன்றி குணமடைந்தேன்!!!"



Lakshmi Iyer

ஸ்ரீமதி. லக்ஷ்மிஐயர்,
மேட்டூர்டேம் R.S.,
சேலம் மாவட்டம்,
தமிழ்நாடு.

கடந்த ஐந்து வருடங்களாக இடுப்பில் வலி இருந்து வந்தது. இதனால் குனிந்து நிமிரும் பொழுதும், சிறிது தூரம் நடக்கும் பொழுதும், உட்கார்ந்து எழுந்திருக்கும் பொழுதும், மாடிப்படி ஏறி இறங்கும்பொழுதும் , பிடிப்புடன் கூடிய வலி இருந்தது. ஆங்கில மருத்துவரிடம் சென்று **C.T. Scan** எடுத்துப் பார்த்த போது. இடுப்பில் கடைசி இரண்டு எலும்புகள் விலகி இருப்பதாக கூறினார்கள் **(L4, L5, DISC PROLAPSE)**இதற்கு சில மருந்துகளையும், இடுப்பில் போட்டு கொள்வதற்கு **Belt**-ம் எழுதிக் கொடுத்தார்கள். இருப்பினும் வலி நிற்கவில்லை. பின்பு ஆப்ரேஷன் **(Operation)** செய்தால் குணமடையும் என்று கூறினார்கள் அப்பொழுது **"MARC HERBAL CARE(P)LTD."** நிறுவனத்தின் விளம்பரத்தை செய்தித்தாள்களில் கண்டு நானும் எனது கணவரும் அங்கு சென்றோம். டாக்டரின் ஆலோசனைபடி அவர்கள் கொடுத்த மூலிகை பசும்கூழ் (Poultice) வெளிப்பிரயோகமாக தினமும் தவறாமல் தடவி வந்தேன். 9 வார தொடர்ச்சியான சிகிச்சைக்குப் பிறகு தற்பொழுது எனது வலிகள் அனைத்தும் நீங்கி பரிபூரண நிவாரணம் அடைந்தேன். நன்றி.

- ★ காலம் காலமாக வேதமகரிஷிகள் சித்தர்கள் கண்டுபிடித்து பரிசோதித்து அனுபவப்பட்டு வெற்றிகண்ட ஆயுர்வேத மூலிகை மருத்துவமுறைப்படி எங்களது நிறுவனம் ஒரு வெளிப்பிரயோக மூலிகை பசும்கூழ் (Poultice) கொண்டு ஆர்த்திரைட்டீஸ், ஸ்பாண்டிலைட்டீஸ், தோள்பட்டை வலி, முதுகுவலி, குதிக்கால்வலி, கைகால் மூட்டுவலி ஆகியவைகளுக்கு தகுதிவாய்ந்த அனுபவம் மிக்க ஆயுர்வேத, சித்தா மற்றும் அலோபதி மருத்துவர்களின் மேற்பார்வைகளின் கீழ் சிகிச்சை அளித்து வருகிறோம்.
- ★ ஒரு வரைப்போல் மற்றொருவரது உடல்வன்மை இருப்பது இல்லை என்பது யாவரும் அறிந்த உண்மை எனவே கால மாற்ற விளைவுகளால் மனிதனின் உடல்வன்மையில் ஏற்படும் மாறுதல்களுக்கு ஏற்ப சிகிச்சையும் பலன்களும் வேறுபடலாம் என்பதை **MARC HERBAL CARE (P) LTD** நன்கு உணர்ந்துள்ளன.

கலந்து ஆலோசிக்க இப்போதே தொடர்பு கொள்க.
தொலைபேசி
0413-346683


காலை 9 மணி முதல், இரவு 7 மணி வரை
வாரத்தில் 7 நாட்களும் திறந்திருக்கும்.

MARC ஹெர்பல் கேர் (பி) லிமிடெட்

32, செயின்ட் தெரெஸ் வீதி, பாண்டிச்சேரி – 1
(ராமன் தியேட்டர் எதிர் வீதி, சுபார்ச்சூன் பேக்கரி எதிரில்)

Fax : 91 - 0413 - 346683

பொன்னியின் செல்வன்



பத்தொன்பதாம் அத்தியாயம்

திருநல்லம்

ஜோசியர் வீட்டின் ஓட்டுக் கூரையையும் அதனுடன் தன்னுடைய உயிரையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டிருந்த வானதி காவேரி நதியின் உடைப்பு வெள்ளத்தில் மிதந்து மிதந்து போய்க்கொண்டிருந்தான். வெள்ளம் அவளை மேலே மேலே அழைத்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் சென்றது. சில சமயம் மெதுவாகச் சென்றது. சில சமயம் வேகமாக இழுத்துச்சென்றது. வேறு சிலபோது பெரிய சுழிகளிலும் சுழல்களிலும் அந்த வீட்டுக்கூரை அகப்பட்டுக் கொண்டு சுற்றிச் சுழன்று தடுமாறிக் கொண்டு சென்றது.

வெள்ளத்தின் ஆழம் அதிகமில்லாத மேட்டுப்பாங்கான இடங்களில் சில போது சென்றது. அது மரங்களின் அடியில் வெள்ளம் எவ்வளவு தூரம் ஏறியிருக்கிறது என்பதைப் பார்த்ததும், ஆங்காங்கு காவேரிக்கரை ஓரமிருந்த மண்டபங்கள் எவ்வளவு தூரம் முழுகியிருக்கிறது என்பதைப் பார்த்ததும் தெரிந்தது. மேட்டுப்பாங்கான இடங்களில் கீழே இறங்கலாமா என்று வானதி யோசிப்பதற்குள் ஆழமான இடங்களுக்குச் சுழல்கள் இழுத்துப் போய்விட்டன.

இறங்குவதற்கும் வானதிக்கு அவ்வளவாக மனம் இல்லை. ஏனெனில் பொன்னி நதியின் அவ்வெள்ளம் அவளைப் பொன்னியின் செல்வர் இருக்கு

அமரர் கல்கி

மிடத்துக்கு அழைத்துச் செல்வதாக அவளுடைய மனத்தில் ஒரு தோற்றம் ஏற்பட்டிருந்தது. இளவரசருக்கு ஏற்படப் போகும் அபாயம் பற்றிப் பழுவேட்டரையர் மூடுமந்திரமாகக் கூறியது அவள் உள்ளத்திலும் பதிந்திருந்தது. அவரை அந்த அபாயத்திலிருந்து பாதுகாக்கவே காவேரி நதி தன்னை அழைத்துப் போவதாக அவள் எண்ணிக்கொண்டாள்.

ஆகா! அந்தப் பூங்குழலிக்குத்தான் எவ்வளவு கர்வம்? இளவரசர் விஷயத்தில் எவ்வளவு உரிமை கொண்டாடுகிறாள்? ஆயினும், அவ்வாறு உரிமை கொண்டாடுவதற்குக் காரணம் உண்டு. இன்று இளவரசர் பிழைத்திருப்பதே பூங்குழலியினால்தானே? ஒருநாளும் இல்லை! - அந்தக் குடந்தை ஜோதிடர் கூறியதைத்தான் வானதி கேட்டிருந்தாளே! இளவரசர் பிறந்தவேளை அப்படி! அவருக்கு இம்மாதிரி கண்டங்கள் பல வரக்கூடும்! ஆனால் அவர் உயிருக்கு ஒன்றும் ஆபத்து வராது! உலகத்தை ஆளப்பிறந்தவரைக் கேவலம் கடலும் புயலும் நதி வெள்ளமும் என்ன செய்து விடும்? அவர் அவ்விதம் உயிர் தப்புவதற்கு யாரேனும் ஒரு வியாஜமாக வேண்டும்! பூங்குழலிக்கு அத்தகைய பாக்கியம் கிடைத்திருக்கிறது! அதற்காக அவள் உரிமை எப்படிக் கொண்டாடலாம்? எனினும், அம்மாதிரி பாக்கியம் தனக்கும் ஒரு தடவை கிட்டக் கூடாதா என்ற ஏக்கம் வானதியின் இதய அந்தரங்கத்தில் நீண்ட காலமாக இருந்து கொண்டிருக்கிறது.

சில சமயம் கூரை சுழன்று திரும்பிய போது, பின்னால் வெகு தூரத்தில் படகு ஒன்று வருவதை வானதி பார்த்தாள். அதில் பெண் ஒருத்தியும், புருஷன் ஒருவரும் இருப்பதும் தெரிந்தது. யார் என்று நன்றாய்த் தெரியவில்லை. பெண் படகு செலுத்தியதைப் பார்த்ததும் அவள் ஒரு வேளை பூங்குழலியாயிருக்கலாம் என்று தோன்றியது. தன்னை வெள்ளத்திலிருந்து காப்பாற்றத்தான் வருகிறாளா? இளைய பிராட்டி அனுப்பி வைத்திருக்கிறாரா? போதும், போதும்! அவளுக்கு இளவரசர் கடமைப்பட்டிருப்பதே போதும். தானும் வேறு நன்றிக்கடன் பட வேண்டாம்! கூடவே கூடாது. தான் அவளால் இந்த வெள்ளத்திலிருந்து காப்பாற்றப்படுதலே கூடாது.

சிலசமயம் படகு அவளுக்கு அருகில் நெருங்கிவிட்டது போலிருந்தது. சில சமயம் கூரை வேகமாகச் சென்று படகை வெகுதூரம் பின்னால் விட்டு விட்டுச் சென்றது.

இவ்விதம் படகு கண்ணுக்கு மறைந்திருந்த ஒரு சமயத்தில், வீட்டுக் கூரை திசை திரும்பித் தெற்கு நோக்கிச் செல்லுவது போலத் தோன்றியது. காவேரியின் தென் கரையைத் தாண்டி, தெற்கே ஒரே சமுத்திரம் போலத் தோன்றிய வெள்ளப் பிரதேசத்தில் சென்றது. கடைசியில், அந்தத் தண்ணீர் வெள்ளத்தின் எல்லை கண்ணுக்குப் புலப்பட்டது. ஆகா! இது ஒரு நதியின் கரை போல அல்லவா காணப்படுகிறது. ஆம், ஆம்! இது அரசலாற்றங்கரைதான்! காவேரி உடைப்பு வெள்ளம் நடுவில் பல பிரதேசங்களை முழுக அடித்துக் கொண்டு வந்து இந்த ஆற்றில் விழுந்து கலந்திருக்கிறது. இதன் தென் கரை சிறிது மேடாக இருப்பதால் அதற்குள் அடங்கிச் செல்லுகிறது. அந்த நதிக் கரை, அதன் மரங்களடர்ந்த தோற்றம், அவளுக்குப் பழக்கப்பட்ட இடமாகத் தோன்றியது. பூர்வ ஜன்ம வாசனையைப் போல் ஞாபகம் வந்தது. இல்லை, இல்லை! இந்த ஜன்மத்தில் இரண்டு மூன்று தடவை பார்த்த இடந்தான்! அவள் திருநல்லம் என்னும் க்ஷேத்திரத்தை நெருங்கி வந்து கொண்டிருக்க வேண்டும். அங்குள்ள ஆலயத்தை மழவரையர் மகளார், செம்பியன் மாதேவி, தம் அருமைக் கணவரான கண்டராதித்த சோழரின் ஞாபகமாகக் கருங்கல் திருப்பணியாகச் செய்ய ஆவல் கொண்டிருக்கிறார். அங்கே நதிக்கரையில் சோழ குலத்தார்கள் தங்குவதற்கு வசந்த மாளிகை ஒன்றும் இருக்கிறது. செம்பியன் மாதேவி ஒருசமயம் இளைய பிராட்டியை அவ்விடத்துக்கு அழைத்துச் செல்ல, அவருடன் தானும் போனதுண்டு! அந்த வஸந்த மாளிகையை



யொட்டியிருந்த தோட்டங்களிலே சென்று பறவைகளின் இனிய கீதங்களைக் கேட்பதில் தனக்கு எவ்வளவு ஆர்வ மிருந்தது. ஆகா! அப்போது அங்கு நடந்த ஒரு சம்பவம், வானதியின் உள்ளத்தில் என்றும் மறக்க முடியாத படி ஆழ்ந்து பதிந் திருந்தது.

இருபதாம் அத்தியாயம்

பறவைக் குஞ்சுகள்

கொடும்பாளூரிலிருந்து வானதி பழையாறை நகருக்கு வந்த புதிதில், சோழ நாட்டின் நீர்வளம் அவளை ஒரே ஆச்சரியக் கடலில் ஆழ்த்தியிருந்தது. கொடும்பாளூர்ப் பக்கத்தில் நதி ஒன்றும் கிடையாது. ஏரிகள்தான் உண்டு. மழை

பெய்யும் காலங்களில் ஏரிகள் தண்ணீர் நிறைந்து ததும்பிக்கொண்டிருக்கும். கோடைக்காலத்தில் காய்ந்துவிடும். இம்மாதிரி இரு கரைகளையும் தொட்டுக் கொண்டு தண்ணீர் ததும்பிச் சுழிகளும் சுழல்களுமாய் ஓடும் நதிகளும், வாய்க்கால்களும், கண்ணிகளும் அங்கே இல்லை. தாமரையும் செங்கழுநீரும் தழைத்துப் பூத்துக் கொழித்த தடாகங்களை வானதி பிறந்த ஊரில் பார்க்க முடியாது. இவற்றையெல்லாம் வானதி பார்த்துப் பார்த்து மெய் மறந்து உட்கார்ந்திருப்பாள். குளத்து மீனுக்குக் குடை பிடித்த தாமரை இலைகளின் மீது முத்துக்கள் போன்ற நீர்த்துளிகள் அங்குமிங்கும் ஓடிக் களிப்பதைப் பார்த்து மகிழ்வாள். கமல மலர்களையும் அல்லிப் பூக்களையும் கருவண்டுகள் சுற்றிச் சுழன்று வந்து ஆடிப் பாடுவதைக் கண்டதும் பரவசமாகி விடுவாள். பொழுது போவதே தெரியாமல் போய்விடும்.

ஒரு சமயம் வானதியும் குந்தவையும் செம்பியன் மாதேவி அழைத்ததின் பேரில் திருநல்ல*த்துக்குப் போயிருந்தார்கள். வசந்த மாளிகையில் தங்கியிருந்தார்கள். செம்பியன் மாதேவியும் குந்தவையும் அடிக்கடி சைவ சமய குரவர்களின் வரலாறுகளைப் பற்றியும், அவர்களுடைய பதிகங்களில் கனிந்து சொட்டும் பக்தி ரஸத்தைப் பற்றியும் பேசத் தொடங்கி விடுவார்கள். செம்பியன் மாதேவி, மேற்கெழுந்தருளிய தேவரான தம் அருமைக் கணவர் கண்டராதித்தருடன் தாம் க்ஷேத்திர யாத்திரை செய்த வரலாறுகளையும் சொல்லத் தொடங்கி விடுவார். அதையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பதில் வானதிக்குச் சிரத்தை இருப்பதில்லை. அதைக்காட்டிலும் வசந்த மாளிகையையொட்டியிருந்த தோட்டங்களிலே சென்று பறவைகளின் இனிய கீதங்களைக் கேட்பதிலும், தடாகத்தில் பூத்துக் குலுங்கிய தாமரை மலர்களைச் சுற்றி வந்து கொண்டிருந்த கருநீல வண்டுகளின் இன்ப ரீங்காரத்தைக் கேட்பதிலும் அவளுக்கு ஆர்வம் அதிகமாயிருந்தது. இன்னும் மாளிகையின் ஒரு பக்கமாகச் சென்று கொண்டிருந்த நதி வெள்ளம் சுழி போட்டுக்கொண்டு ஓடுவதையும் அந்தச் சுழிகளின் அழகிய செக்கச் சிவந்த கடம்ப மலர்கள் சுழன்றுகொண்டிருப்பதையும் பார்க்க அவளுக்கு மிக்க ஆர்வம் இருந்தது. கொடும்பாளூர் பகுதிகளில் இம்மாதிரி மனோரம்யமான காட்சிகளைப் பார்க்க இயலாதல்லவா?

* இக் காலத்தில் திருநல்லத்துக்குக் கோனேரிராஜபுரம் என்று பெயர் வழங்குகிறது.

ஒருநாள் மழவரையர் மகளாரும் இளையபிராட்டி குந்தவையும் சுவாரஸ்யமாக ஏதோ பேசிக் கொண்டிருந்தார்கள். வானதி அவர்கள் அருகில் சென்றபோது இளையபிராட்டி "வானதி! நீ தோட்டத்துக்குப் போ! சற்று நேரத்துக்கெல்லாம் நானும் வருகிறேன்!" என்றார். வானதி குதூகலத்துடன் துள்ளிக் குதித்து ஓடினாள். தோட்டத்தில் சற்று நேரம் சுற்றி அலைந்து விட்டுத் தாமரைக் குளக் கரைக்குச் சென்றாள். குளக்கரையில் வானை மறைத்துக்கொண்டு வளர்ந்திருந்த மரங்கள் பல இருந்தன. அவற்றில் நெடிதுயர்ந்து பல்கிப் பரவித் தழைத்திருந்த இலுப்பை மரம் ஒன்றிருந்தது. இலுப்பை மரம் பூக்கும் காலம் அது. அந்த மரத்தடியில் இலுப்பைப் பூக்கள் உதிர்ந்து பூமியை அடியோடு மறைத்துக்கொண்டிருந்தன. அவற்றின் நறுமணம் கம்மென்று வீசித் தோட்டம் முழுவதிலும் பரவியிருந்தது. அந்த மரத்தடியில் ஒரு பெரிய வேரின் பேரில் வானதி உட்கார்ந்தாள். அடி மரத்தில் சாய்ந்துகொண்டு மேலும் கீழும் நாலாபுறமும் பார்த்துக்கொண்டிருந்தாள். பறவை இனங்களின் இனிய கீதங்கள் அவளுடைய செவிகளில் அமுத வெள்ளமாகப் பாய்ந்து கொண்டிருந்தன. அவள் அந்த நாள் வரை அநுபவித்திராத இன்ப உணர்ச்சி அவள் இதயத்தில் தோன்றியது. அந்த உள்ளக் களிப்பு அடிக்கடி பொங்கித் ததும்பி அவள் மேனியெல்லாம் பரவியது. வாழ்க்கை இவ்வளவு ஆனந்தமயமாக இருக்கக்கூடும் என்று வானதி

அன்றுவரை கனவிலும் கருதிய தில்லை.

அந்த மரத்தடியிலிருந்து பார்த்தால் சற்றுத் தூரத்தில் ஆற்று வெள்ளம் தெரிந்தது. அவ்வப்போது நதி ஓட்டத்தின் இனிய காட்சிகளையும் அவள் மரங்களின் இடைவெளி வழியாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

ஒருமுறை யாரோ ஒரு வாலிபன் ஆற்றில் நீந்திக்கொண்டிருப்பதும் தெரிந்தது. செந்நிற நீர்ப் பிரவாகத்தில் அவனுடைய பொன்னொளிர் மேனி பாதி தண்ணீரிலும் பாதி மேலேயும் மிதந்த வனப்பு மிக்க காட்சி அவள் உள்ளத்தைக் கவர்ந்தது. சிச்சி! யாரோ இளம்பிள்ளை ஒருவனுடைய தோற்றத்தில் தனது கவனம் செல்வது என்ன அசட்டுத்தனம்? – நாணம், மடம் என்னும் இயல்புகளைத் தன் உடன் பிறந்த செல்வங்களாகக் கொண்டிருந்த வானதிக்கு அந்த எண்ணம் மிக்கக் கூச்சத்தை உண்டாக்கியது. அவளுடைய உள்ளக் கட்டுப்பாட்டையும் மீறிக் கண்கள் மீண்டும் இரண்டொரு தடவைகள் நதிப் பக்கம் சென்றன.

. வானதிக்குத் தன் பேரில் கோபமே உண்டாயிற்று. அங்கிருந்து எழுந்து போய் விடலாமா என்று எண்ணினாள். அச்சமயம் வேறொரு நிகழ்ச்சி அவளுடைய உள்ளத்தைக் கவர்ந்தது.

அவள் அமர்ந்திருந்த இடத்துக்கு அருகாமையில், தலைக்கு மேலே பறவைக் குஞ்சுகளின் கூக்குரலைக் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். அங்கே அவள் கண்ட காட்சி அவளுக்கு ஏக காலத்தில் பரிதாபத்தையும் திகிலையும் உண்டாக்கின.

ஒரு மரக் கிளையில் கவணை போலப் பிரிந்த இடத்தில் பட்சிக்கூடு ஒன்று இருந்தது. அதில் சில பறவைக் குஞ்சுகள் தலைகளை நீட்டிக்கொண்டிருந்தன. அவைதான் 'கிறீச்' 'கிறீச்' என்று மெல்லிய குரலில் சத்தமிட்டன. அந்தச் சத்தத்தில் பயமும், அபாய அறிவிப்பும், பரிதாபமான அடைக்கல விண்ணப்ப முறையீடும் கலந்திருந்தன. அவ்விதம் கலந்திருந்ததாக வானதியின் செவிகளில் ஒலித்தன. கூட்டுக்கு அருகில் மரக்கிளையில் ஒரு காட்டுப் பூனை ஏறிக்கொண்டிருந்தது. மெள்ள மெள்ள அது கூட்டை நெருங்கி வந்து கொண்டிருந்தது!

அதைப் பார்த்த வானதி "ஐயோ! ஐயோ!" என்று சத்தமிட்டாள். அடுத்த கணத்தில், "என்ன? என்ன?" என்று ஒரு குரல் கேட்டது. யாரோ விரைந்து ஓடி வரும் காலடிச் சத்தமும் கேட்டது. வானதி அந்தப் பக்கம் பார்த்தாள். சற்று முன் நதி வெள்ளத்தில் நீந்திக் கொண்டிருந்த வாலிபன்தான் கரையேறி ஓடி வந்துகொண்டிருந்தான் என்பதை அவள் அறிந்தாள்.

அதே சமயத்தில் எங்கிருந்தோ இரண்டு பெரிய பறவைகள் வந்து விட்டன. கூட்டைச் சுற்றி அவை கராபுராவென்று கத்திக்கொண்டு வட்டமிட்டன. அவை அக்குஞ்சுகளின் தாயும் தகப்பனுமாகவே இருக்க வேண்டும். குஞ்சுகளைக் காப்பாற்றுவதற்காகவே அவை அவ்விதம் அவசரமாக வந்திருக்க வேண்டும் என்பதை வானதி உணர்ந்தாள். இரண்டும் நீள மூக்குகள் உள்ள பறவைகள். மரங் கொத்திப் பறவைகள் என்பவை இவைதான் போலும். ஒரு பறவை கூட்டைச் சுற்றி அதிகமாக வட்டமிட்டது. இன்னொன்று பூனையை நெருங்கி அதை மூக்கினால் கொத்தித் தாக்கும் பாவனையுடன் சத்தமிட்டது! பூனையை அந்தப் பறவையினால் ஒன்றும் செய்துவிட முடியாது. பூனையின் வாயில் அகப்பட்டால் மறுகணம் அதன் வயிற்றுக்குள்ளேயே போய்விட வேண்டியதுதான். ஆயினும் தன் குஞ்சுகளைக் காப்பதற்காக அந்தப் பறவை அப்படித் தீரத்துடன் போராடியது. தாயையும் தகப்பனையும் இளம் பிராயத்திலேயே இழந்துவிட்ட வானதிக்கு அந்தக்காட்சி மிக்க மனக்கசிவை உண்டாக்கியது.

பூனை சற்றுச் சும்மா இருந்துவிட்டுத் திடீரென்று முன்னங்கால் ஒன்றைக்

கூட்டின் பக்கம் நீட்டியது. பறவைக் குஞ்சுகள் இருந்த கூட்டின் ஒரு முனையையும் தொட்டுவிட்டது.

வானதி மறுபடியும் அலறினாள். இதற்குள் அந்த வாலிபன் நெருங்கி வந்து விட்டான். அவனை அருகில் பார்ப்பதற்கு வானதிக்கு மிக்க கூச்சமாயிருந்தது. மறுமொழி சொல்ல வரவில்லை. பேசுவதற்கு நா எழவில்லை. சமிக்ஞையினால் பட்சியின் கூட்டைச் சுட்டிக் காட்டினாள்.

அதுவரையில் அந்தப் பெண்ணுக்குத்தான் ஏதோ அபாயம் என்று எண்ணிக் கொண்டிருந்தான். வானதி சுட்டிக் காட்டிய இடத்தை அண்ணாந்து பார்த்தான். மறுபடியும் வானதியை நோக்கிப் புன்னகை புரிந்தான். அவனுடைய பார்வையும் புன்னகையும் வானதியின் நெஞ்சத்தை நெகிழச் செய்து, பறவைக் குஞ்சுகளின் நிலையைக் கூட மறந்து விடச் செய்தன.

ஆனால் வாலிபன் உடனே அங்கிருந்து விரைந்து ஓடி, மரக் கிளையில் பறவைக்கூடு இருந்த இடத்துக்கு நேர் கீழே சென்று நின்றான்.

காட்டுப்பூனையை அதட்டினான். அது கீழே குனிந்து பார்த்து உருமியது. ''பொல்லாத பூனையாயிருக்கிறதே!'' என்று சொல்லிக்கொண்டே தரையிலிருந்து ஒரு கல்லைப் பொறுக்கி வேகமாக விட்டெறிந்தான். கல் பூனையின் மீது படாமல் அதன் அருகில் மரக்கிளையைத் தாக்கியது. பூனை உடனே தாவி வேறு கிளையில் பாய்ந்து, அங்கிருந்து இன்னொரு அடர்ந்த மரத்துக்குச் சென்று, பின்னர் மறைந்து விட்டது.

ஆனால் இதற்குள் வேறொரு விபரீதம் நேர்ந்துவிட்டது. பூனையின் ஒருகால் பறவைக்கூட்டின் முனையைப் பற்றி இழுத்ததல்லவா? அதனால் சிறிது ஆடிப்போயிருந்த கூடு, வாலிபனின் கல்லெறி மரக்கிளையில் தாக்கிய வேகத்தினால் அதிகமாக நிலைகுலைந்தது. சிறிது சிறிதாக அந்தக் கூடு கிளையின் கப்பிலிருந்து நழுவி





யது. முழுதும் நழுவி விழுந்திருந்தால் காட்டுப்பூனை வாயிலிருந்து தப்பிய குஞ்சுகள் தரையில் விழுந்து மாண்டிருக்கும்! நல்லவேளையாகக் கூட்டின் ஒருமுனை கிளையைக் கவ்விக்கொண்டிருந்தது. கூடு அதில் இருந்த குஞ்சுகளுடன் கீழே தொங்கி ஊசலாடியது. குஞ்சுகளின் உயிரும் ஊசலாடின. மரங்கொத்திப் பறவைகள் முன்னைவிடப் பீதியுடன் அலறிக்கொண்டு குஞ்சுகள் இருந்த கூட்டைச் சுற்றிச் சுற்றி வந்தன. காற்று கொஞ்சம் வேகமாக அடித்தால் கூடு தரையில் விழுந்துவிடும். அவ்வளவு உயரத்திலிருந்து விழுந்தால் குஞ்சுகள் பிழைப்பது துர்லபந்தான்.

வாலிபன் ஒருகண நேரம் யோசித்தான். முதலில் மரத்தின் மேல் தாவி ஏற அவன் எண்ணியதாகத் தோன்றியது. மறுகணத்தில் மனத்தை மாற்றிக் கொண்டதாகக் காணப்பட்டது.

வானதியைப் பார்த்து, "பெண்ணே! சற்று இங்கே வா! கூடு கீழே விழுந்தால் உன் சேலைத் தலைப்பினால் பிடித்துக் கொள்! இதோ நான் ஒரு நொடியில் திரும்பி வருகிறேன்!" என்று சொல்லி விட்டு ஓடினான்.

அவன் சொன்னபடியே மிகச் சொற்ப நேரத்தில் திரும்பி வந்தான். ஆனால் இப்போது அவன் நடந்து வரவில்லை. யானை மீது ஏறிக் கொண்டு வந்தான். வானதிக்கு அவன் என்ன செய்யப் போகிறான் என்பது ஒருவாறு தெரிந்துவிட்டது. ஆகையால் அங்கிருந்து அப்பால் சென்றாள். அருகிலிருந்த தாமரைக்





குளத்தின் படிக்கட்டை அடைந்தாள். சில படிகள் இறங்கி உட்கார்ந்து கொண்டு யானை மேல் வந்த வாலிபன் என்ன செய்கிறான் என்பதைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

யானை மரத்தடிக்கு வந்ததும் நின்றது. அதன் முதுகில் இருந்தபடி வாலிபன் பறவைக் கூட்டைக் கையினால் தாங்கி முன்னால் அது இருந்த கிளைப் பொந்திலே ஜாக்கிரதையாக வைத்தான். தாய்ப்பறவையும் தகப்பன் பறவையும் இப்போது முன்னைவிட அதிகமாகக் கூச்சலிட்டன. ஆனால் அந்தக் கூச்சலில் இப்போது குதூகல த்வனி மேலிட்டிருப்பதாகத் தோன்றியது.

வாலிபன் பின்னர் திரும்பிச் சுற்றும் முற்றும் பார்த்தான். "பெண்ணே! எங்கே போனாய்?' என்று கூவினான். வானதி பெரிதும் நாணம் அடைந்து மௌனமாயிருந்தாள். வாலிபன் யானையின் மீதிலிருந்து கீழிறங்கினான். பின்னர் மறுபடியும் சுற்று முற்றும் பார்த்தான்.

வானதி மனத்தில் எதையோ நினைத்துக்கொண்டாள். அந்த நினைவு அவளுக்குப் பெரும் வேடிக்கையாயிருந்தது. அவளை அறியாமல் சிரிப்பு வந்தது. உரத்த சத்தத்துடன் கலகலவென்று சிரித்தாள்.

அதைக் கேட்டு விட்டு வாலிபன் குளத்தின் படிக்கட்டுக்கு வந்தான். வானதியைப் பார்த்து, "பெண்ணே! ஏன் சிரிக்கிறாய்? நீ இவ்வளவு பலமாகச் சிரிக்கும்படியாக இப்போது என்ன நேர்ந்துவிட்டது?" என்றான்.

வாலிபனின் குரல் வானதியின் செவிகளில் விழுந்ததும் மறுபடியும் முன்போல் அவளுடைய நெஞ்சம் நெகிழ்ந்து பொங்கிற்று. கூச்சம் முன்னிலும் அதிகமாயிற்று. அவனை ஏறிட்டுப் பார்க்க முடியாதபடியால், அப்புறமும் இப்புறமும் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"பெண்ணே! ஏன் சிரித்தாய்? சொல்ல மாட்டாயா?" என்று மீண்டும் வாலிபன் கேட்டான்.

வானதி மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு, "ஒன்றுமில்லை. நீ பெரிய வீரனாயிருக்கிறாயே என்று எண்ணிச் சிரித்தேன். பூனையோடு சண்டை போடுவதற்கு யானையின் பேரில் வந்தாய் அல்லவா?" என்று கேட்டாள்.

அதைக் கேட்டு வாலிபனும் சிரித்தான்.

"பெண்ணே! அது பூனைதானா? நீ போட்ட கூக்குரலைக் கேட்டுப் புலியோ என்று பயந்துவிட்டேன்!" என்று சொன்னான்.

வானதிக்கு இதற்குள் துணிவு வந்துவிட்டது; அவளிடமிருந்த கூச்சமும் குறைந்துவிட்டது.

"ஆகா! அப்படியா? புலிக்கொடி பறக்கும் சோழ நாட்டில் புலியைக் கண்டுதான் எதற்காகப் பயப்பட வேணும்? நீ பாண்டிய நாட்டானா?" என்றாள்.

அதைக் கேட்ட வாலிபனின் முகம் முன்னைக் காட்டிலும் சற்று அதிகமாக மலர்ச்சி அடைந்தது.

"பெண்ணே! நான் வேற்று நாட்டவன் அல்ல; இந்தச் சோழ நாட்டைச் சேர்ந்தவன்தான்! யானை மீது ஏறி வேறு போர்க்களங்களுக்கும் சென்றிருக்கிறேன். நீ யார்? எந்த ஊர்ப் பெண்? பெரிய வாயாடிப் பெண்ணாக இருக்கிறாய்?" என்றான்.

"யானைப் பாகா! மரியாதையாகப் பேசு! நான் யாராயிருந்தால் உனக்கு என்ன? எதற்காக அதைப் பற்றிக் கேட்கிறாய்?" என்றாள் வானதி.

"சரி, அப்படியானால் நான் கேட்கவில்லை. பெரிய இடத்துப் பெண் போலிருக்கிறது, போகிறேன்!" என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் படியேறி மேலே போகலானான்.

வானதி மறுபடியும் விளையாட்டும் பரிகாசமும் தொனித்த குரலில், "யானைப் பாகா! யானைப் பாகா! என்னையும் உன் யானையின் மேல் ஏற்றிக்

கொண்டு போகிறாயா?'' என்றாள்.

"சரி; ஏற்றிக்கொண்டு போகிறேன், எனக்கு என்ன கூலி தருவாய்?'' என்று கேட்டான் வாலிபன்.

"கூலியா? என் பெரியப்பாவிடம் சொல்லி உனக்குக் கொடும்பாளூர் அரண்மனையில் உத்தியோகம் வாங்கித் தருகிறேன். இல்லாவிட்டால், யானைப் படைக்குச் சேநாதிபதியாக்கச் செய்கிறேன்!'' என்றாள் வானதி.

"ஓகோ! கொடும்பாளூர் இளவரசியா தாங்கள்?'' என்றான் அந்த வாலிபன். இதுவரையில் மலர்ந்திருந்த அவனது முகம் இப்போது சுருங்கியது. புன்னகை மறைந்தது. புருவங்கள் நெறிந்தன.

"ஏன்? கொடும்பாளூர் இளவரசி என்றால் அவ்வளவு மட்டமா? உன் யானை மேல் ஏறக்கூடாதா?'' என்றாள் வானதி.

"இல்லை, இல்லை! கொடும்பாளூர் அரண்மனைக் கொட்டாரத்தில் எவ்வளவோ யானைகள் இருக்கின்றன; எத்தனையோ யானைப் பாகர்களும் இருக்கிறார்கள். நான் என்னத்திற்கு?'' என்று சொல்லிவிட்டு அந்த வாலிபன் விடுவிடு என்று நடந்து போனான். அவன் ஒருவேளை திரும்பிப் பார்ப்பானோ என்று சற்று நேரம் வரையில் வானதி எதிர்பார்த்தாள். ஆனால் அவன் திரும்பியே பாராமல் நடந்து சென்று யானை மேல் ஏறிப் போய்விட்டான்.

இந்தச் சம்பவம் வானதியின் உள்ளத்தில் வெகுவாகப் பதிந்துவிட்டது. அடிக்கடி அது அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது. அந்த யானைப் பாகனுடைய உருவத் தோற்றமும் மலர்ந்த முகமும் இனிய குரலும் நினைவுக்கு வந்தபோதெல்லாம் உள்ளத்தில் இனந்தெரியாத உணர்ச்சி உண்டாயிற்று. அவன் பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்ற யானை மேல் ஏறி வந்ததை நினைத்தபோதெல்லாம் அவளையறியாமல் நகைப்பு வந்தது. தனக்குத் தானே சிரித்துக்கொண்டாள்; பிறகு அதற்காக வெட்கமும் அடைந்தாள். அந்த யானைப்பாகனின் அகம்பாவத்தையும், கொடும்பாளூர் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே அவன் முகத்தைச் சுருக்கிக்கொண்டு போய்விட்டதையும் எண்ணியபோதெல்லாம் அவன் பேரில் கோபம் உண்டாகி வளர்ந்தது. மொத்தத்தில், அந்த யானைப்பாகனைப் பற்றி அடிக்கடி நினைவு வந்துகொண்டிருந்தது. இது தவறோ என்ற சந்தேகமும் கூடத் தோன்றி அவளை மிகவும் வருத்திக் கொண்டிருந்தது.

திருநல்லத்துக்குத் தமது தமக்கையைப் பார்க்கப் பொன்னியின் செல்வர் வரப் போகிறார் என்று அரண்மனையில் பேச்சாக இருந்தது. சோழ நாட்டின் கண்மணியாக விளங்கிய இளவரசரைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் அரண்மனைப் பெண்கள் எல்லாருக்கும் இருந்தது போல் வானதிக்கும் இருந்தது. அதற்குச் சந்தர்ப்பம் எளிதில் கிடைக்கவில்லை. இளவரசர் வந்துவிட்டார் என்று பேச்சாக இருந்ததே தவிர, அவர் அந்தப்புரத்துக்குள் வரவேயில்லை. இயற்கையில் சங்கோசம் நிறைந்த வானதியோ மற்றத் தோழிப் பெண்களைப் போல் சந்தர்ப்பத்தை உண்டு பண்ணிக் கொண்டு போய் அவரைப் பார்க்க விரும்பவில்லை. திருநல்லத்தை விட்டு இளவரசர் புறப்பட்ட அன்றைக்குத் தான் அரண்மனை மேல் மாடத்தில் நின்று வானதி பொன்னியின் செல்வரைப் பார்க்க நேர்ந்தது. அவர் யானையின் மீது ஏறிப் பிரயாணமாகிக் கொண்டிருந்தார். வானதி தன் கண்களை நம்பமுடியவில்லை என்றால், அது சம்பிரதாய வார்த்தையன்று. யானைப்பாகன் என்று தான் எண்ணிக் கேலிப் பேச்சுப் பேசிச் சிரித்து, அதிகாரம் செய்யவும் துணிந்த வாலிபனே இந்த மாநிலம் போற்றும் இளவரசர் அருள்மொழிவர்மர் என்று கண்டால், வானதி அவளுடைய கண்களை எப்படி நம்ப முடியும்? பின்னர், பக்கத்திலிருந்த பெண்களைப் பலமுறை கேட்டுத்தான்

அதை நிச்சயம் செய்துகொண்டாள். இதனால் அவள் அடைந்த அவமானத்தையும் மனவேதனையையும் சொல்லிச் சாத்தியமில்லை.

உலகம் ஆளப் பிறந்தவருக்குக் கொடும்பாளூர் அரண்மனையின் யானைக் கொட்டாரத் தலைவன் உத்தியோகம் செய்து வைப்பதாகத் தான் சொன்னதை அவள் நினைத்தபோது ஒரு பக்கம் சிரிப்பு வந்தது; அதேசமயத்தில் கண்களில் கண்ணீர் வந்தது. தன்னுடைய மூடத்தனத்தை நினைத்து நினைத்து வருந்தினாள். அப்போது அவருடைய முகம் கருங்கியதன் காரணம் அவரை "யானைப் பாகா!" என்று அழைத்ததுதான் என்று நம்பினாள். நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் குணங்களில் ஒன்றும் இல்லாத பெண் என்றுதான் தன்னைப் பற்றி அவர் எண்ணியிருப்பார்! இதை நினைத்தபோது வானதியின் உள்ளம் அடைந்த வேதனைக்கு அளவே இல்லை. ஆற்றிலே, குளத்திலே விழுந்து உயிரையே விட்டு விடலாமா என்று கூடப் பலமுறை எண்ணினாள். இளையபிராட்டி குந்தவையிடம் தான் செய்த குற்றத்தைச் சொல்லி விடப் பலமுறை முயன்றாள். ஆனால் அதற்குத் துணிவு வரவில்லை; நா எழவில்லை. இளவரசரே குந்தவை தேவியிடம் சொல்லியிருந்தால் அவரே தன்னிடம் கேட்டிருப்பார். குந்தவை தேவி கேளாததினால் இளவரசர் சொல்லவில்லை என்று முடிவு செய்தாள். எத்தனையோ மனவேதனைக்கு மத்தியில் இந்த எண்ணம் அவளுக்குச் சிறிது ஆறுதல் அளித்தது. என்றைக்காவது ஒருநாள் பொன்னியின் செல்வரிடம் நேரில் மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பிறகு உயிரை விட்டு விடலாம் என்று கருதினாள். ஆனால் அதற்கும் தைரியம் வரவில்லை.

பழையாறைக்குப் போன பிறகு இளவரசரைச் சந்திக்கும் சந்தர்ப்பம் நேரலாம் என்று தோன்றியபோதெல்லாம் ஓடி ஒளிந்துகொண்டாள். இளவரசரின் முன்னால் போவதைக் காட்டிலும் உயிரையே விட்டு விடலாம் என்று கருதலானாள். திருநல்லத்தில் நடந்ததை அறியாத இளையபிராட்டியும் அவளுடைய தோழிமார்களும், "இந்தப் பெண் இவ்வளவு கூச்சப்படுகிறாளே!" என்று மட்டும் ஆச்சரியப்பட்டார்கள்! அவளுடைய பயந்த சுபாவத்தோடு இதுவும் சேர்ந்தது என்று நினைத்தார்கள்.

பொன்னியின் செல்வர் தன்னிடம் அருவருப்புக் கொள்வதற்கு வேறு ஒரு முக்கிய காரணமும் உண்டு என்பதை வானதி விரைவில் அறிந்துகொண்டாள். இளவரசர் அருள்மொழிவர்மர் ஒரு காலத்தில் உலகமாளும் சக்கரவர்த்தி யாவார் என்று பலரும் நம்பியது போல் அவளுடைய பிறந்த வீட்டிலும் நம்பினார்கள். அதனால் அவளை அருள்மொழிவர்மருக்கு மணம் செய்து வைத்து விட வேண்டும் என்று அவளுடைய பெரிய தகப்பனார் திட்டமிட்டிருந்தார் என்பது வானதிக்கு ஒருவாறு தெரிந்திருந்தது. அந்த நோக்கத்துடனேயே அவளைப் பழையாறைக்குப் பூதி விக்கிரம கேசரி அனுப்பி வைத்திருப்பதாகக் குந்தவை தேவியின் மற்றத் தோழிப் பெண்கள் அடிக்கடி ஜாடைமாடையாகப் பேசிக் கொள்வார்கள். சிலசமயம் வானதியிடமே சொல்லிப் பரிகசிப்பார்கள். "ஆகையினாலேதான் நீ இளவரசர் முன்னாலேயே போக மாட்டேன் என்கிறாய்! எங்களுக்குத் தெரியாதா உன் கள்ளத்தனம்?" என்பார்கள். இந்த வார்த்தைகள் வானதியின் காதில் நாராசமாக விழுந்தன. தான் கொடும்பாளூர்ப் பெண் என்று அறிந்ததும் யானைப் பாகனுடைய முகம் கருங்கியதன் காரணம் இதுவாகவே இருக்கலாம் அல்லவா?

இவ்வாறெல்லாம் வானதியின் இளம் உள்ளம் கொந்தளித்துக் கொண்டிருந்த நிலைமையிலேதான் ஒருநாள் பொன்னியின் செல்வர் ஈழத்துப் போருக்குப் புறப்பட்டார். அன்றைக்கு அரண்மனையிலிருந்து எல்லாத் தோழிப் பெண்



களும் கையில் மங்கள தீபங்களுடன் நின்று அவரை வாழ்த்தி அனுப்ப ஏற்பாடாகியிருந்தது. இந்தச் சமயத்திலும் வர முடியாது என்று மறுக்க வானதியினால் இயலவில்லை. போருக்குப் புறப்படும் இளவரசரை ஒருமுறை பார்த்து விட வேண்டும் என்ற ஆர்வமும் அவள் உள்ளத்தில் பொங்கியது. வாய் திறந்து பேசா விட்டாலும் தன் முகபாவத்தைக் கொண்டும் நயன பாஷையினாலும் அவரிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ளலாம் என்ற சபலமும் இருந்தது. ஆனால், அவள் எண்ணியதற்கெல்லாம் மாறான சம்பவம் நடந்து விட்டது. இளவரசர் அருகில் வந்து அவளை ஏறிட்டுப் பார்த்ததும் வானதி உணர்விழந்து தீபத்தையும் போட்டு விட்டுத் தரையில் விழுந்து மூர்ச்சையானாள். இதன் பிறகு நிகழ்ந்தவையெல்லாம் வாசகர்கள் அறிந்தவைதான் அல்லவா?

ஓட்டுக் கூரை ஓடத்தில் மிதந்து சென்றுகொண்டிருந்த வானதி திருநல்லத்தை அணுகியபோது அவளுடைய உள்ளத்தில் மேற்கூறிய சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து சென்றன. பொன்னியின் செல்வருக்குத் தன்மீது அன்பும் அநுதாபமும் உண்டு என்பதை அவள் உணர்ந்திருந்தாள். அதை அவர் இளைய பிராட்டி மூலமாகவும் நேரிலேயும் தெரிவித்ததும் உண்டு. ஆனால் அவருடைய அன்பு பூரணமடையாத வண்ணம் அவ்வப்போது தடை செய்த முட்டுக்கட்டை ஒன்றும் இருந்தது. அது இன்னதென்பதையும் அவள் அறிந்திருந்தாள். இளவரசர் ஒரு காலத்தில் சக்கரவர்த்தியாகலாம் என்னும் எண்ணத்தின் பேரில் அவளை அவர் கழுத்தில் கட்டி விடப் பார்க்கிறார்கள் என்று இளவரசர் நம்பியதுதான் அந்த முட்டுக்கட்டை. இவ்விதம் அவர் நம்புவதற்குக் காரணம் இல்லாமற் போகவில்லை. வானதியின் பெரிய தந்தை இதைப் பற்றிப் பலமுறை பேசியதுண்டு. ஏன்? இளையபிராட்டி குந்தவை தேவியே அந்தச் சதியாலோசனையில் சம்பந்தப்பட்டவர்தான். அது இன்னும் பலருக்கும் தெரிந்திருந்தது. அந்த ஓடக்காரப் பெண் பூங்குழலி கூட அதைக் குறிப்பிட்டுப் பரிகாசம் செய்யவில்லையா? ஆகையால் இளவரசர் மனத்தில் அந்த எண்ணம் தங்கி நின்று அவருடைய அன்புக்கே ஒரு முட்டுக்கட்டையாக இருந்ததில் வியப்பில்லைதான்!

ஆனால் சற்று முன்பு வானதி செய்த சபதத்தை இளவரசர் அறிய நேரும் போது அந்த முட்டுக்கட்டை நீங்கி விடும் அல்லவா? அதை அவர் அறியுமாறு நேரிடுமா? தானே அவரிடம் சொல்லிவிட்டால் என்ன? அடி அசட்டு வானதி! உனக்குத்தான் அவர் முன்னால் நின்றால் வாய் அடைத்து விடுகிறதே! அவரை யானைப்பாகன் என்று நீ எண்ணியபோது, இந்தத் திருநல்லத்தில் சக்கரவட்டமாகப் பேசி அவரிடம் 'வாயாடிப் பெண்' என்ற பெயரும் பெற்றாய்! அதற்குப் பிறகு அவரை முகம் எடுத்துப் பார்க்கவும் வாய் திறந்து பேசவும் உன்னால் முடியவில்லையே? அநாதை வானதி! மறுமுறை நீ இளவரசரைப் பார்க்க நேரும் போது அப்படி மோசம் போய்விடாதே! துணிச்சலுடன் உன் மனத்தில் உள்ளதைச் சொல்லி விடு! "நீங்கள் சிங்காதனம் ஏறினாலும் நான் ஏற மாட்டேன்! அவ்வாறு சபதம் செய்திருக்கிறேன்! தாங்கள் வெறும் யானைப் பாகனாகவே இருந்து, என்னையும் தங்களுடன் யானை மீது ஏற்றிக்கொண்டு ஒரு தடவை சென்றால், அதைய சொர்க்க வாழ்விலும் மேலாகக் கருதுவேன்!" என்று தைரியமாகச் சொல்லவிடு!

எல்லாம் சரிதான்! ஆனால் அவ்விதம் சொல்லுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்குமா? இந்த வெள்ளம் என்னை எங்கே கொண்டு போய்ச் சேர்க்கப் போகிறது? கரை சேராமலே முழுகிச் செத்துப் போய் விடுவேனோ! ஒரு நாளும் அவ்விதம் நேராது. அதோ கரை தெரிகிறதே! திருநல்லத்து வசந்த மாளி

கையின் மகுல கலசம் தெரிகிறதே! ஆஹா! இளவரசர் யானை மேல் ஏறி வந்து பறவைக் குஞ்சுகளைக் காப்பாற்றியதும் என்னுடன் இதமாகப் பேசியதும் நேற்று நடந்தது போல் அல்லவா தோன்றுகின்றன?

இது என்ன? அதோ ஒரு யானை! அதன்பேரில் ஒரு யானைப் பாகன்! வெள்ளத்தின் வேகத்தை அந்த யானை எவ்வளவு அலட்சியமாக முண்டிக் கொண்டு குன்று நகருவது போல் நகருகிறது! அதோ கரை ஏறி விட்டது! கரையோடு மேற்கு நோக்கிச் செல்லுகிறது!

யானையின் மேல் கம்பீரமாக உட்கார்ந்திருப்பவன் யாராயிருக்கும்? ஒருவேளை.... சீச்சீ! இது என்ன பைத்தியக்கார எண்ணம்? இளவரசர் இங்கே எதற்காக இப்படித் தனியாக யானை மீது வருகிறார்?

ஒருமுறை யானை மீது வந்த இளவரசரை யானைப்பாகன் என்று நான் எண்ணி விட்டதால், அப்புறம் எந்த யானைப்பாகனைக் கண்டாலும் இளவரசராயிருக்கலாம் என்று சந்தேகிக்க வேண்டுமா? என்ன அறிவீனம்!

இருந்தாலும், இவன் வெறும் யானைப் பாகனாகவே இருந்தாலும், எனக்கு ஒருவேளை உதவி செய்யக் கூடும் அல்லவா? என்னை இந்த ஓட்டுக் கூரை ஓடத்திலிருந்து, இந்தப் பெரு வெள்ளத்திலிருந்து, கரையேற்றி விடலாம் அல்லவா? நான் யார் என்று சொன்னால் என்னை யானை மேல் ஏற்றிப் பொன்னியின் செல்வரிடம் அழைத்துக் கொண்டு போகவும் கூடும் அல்லவா?

இத்தகைய எண்ணம் தோன்றியதும், வானதி, "யானைப் பாகா! யானைப் பாகா!" என்று கூவி அழைத்தாள்.

அது அவன் காதில் விழவில்லையோ, அல்லது விழுந்தும் அவன் இலட்சியம் செய்யவில்லையோ, தெரியாது. யானை நிற்கவும் இல்லை; யானைப்பாகன் திரும்பிப் பார்க்கவும் இல்லை! யானையின் நடை வேகமாகிக் கொண்டிருந்தது. வெகுசீக்கிரத்தில் நதிக்கரையின் வளைவு ஒன்றில் திரும்பி யானையும் யானைப் பாகனும் மறைந்து விட்டனர்.

வானதி இந்த ஏமாற்றத்தைப் பற்றி எண்ணமிடுவதற்குள் பெரும் பீதிகரமான மற்றொரு எண்ணம் அவள் மனத்தில் உதித்தது. ஓட்டுக்கூரை திடீரென்று அதிவேகமாக சுழன்று செல்லத் தொடங்கியதாகத் தோன்றியது. ஆம், ஆம்! ஆற்று வெள்ளம் அங்கே அதிகமான வேகத்தை அடைந்திருந்தது. நதிக்கரையும், அதன் ஓரத்தில் வளர்ந்திருந்த பிரம்மாண்டமான விருட்சங்களின் தடிமனான வேர்களும் அவளுடைய சமீபத்தில் விரைந்து வந்து கொண்டிருந்தன. அந்த மூலையை அடைந்ததும், இந்த ஓட்டுக்கூரை ஓடம் மரங்களின் வேர்களில் மோதிக் கொள்ளப் போவது நிச்சயம். மோதிக் கொண்டதும் தூள் தூளாகித் தண்ணீரில் முழுகிவிடும். பிறகு தன்னுடைய கதி என்ன? தப்பிப் பிழைத்துக் கரை ஏற முடியுமா? சுழல்களில் சிக்கி மரங்களின் வேர்களில் அடிபட்டுச் சாக நேரிடுமா?

ஐயோ! இது என்ன? அந்த மரங்களின் வேர்களுக்கு மத்தியில் பயங்கரமான முதலை ஒன்று வாயைப் பிளந்து கொண்டிருக்கிறதே! அது உண்மை முதலையா? அல்லது பொம்மை முதலையா? அல்லது என் உள்ளத்தின் பிரமையா?

இதோ கரை நெருங்கிவிட்டது! மரங்களின் வேர்களின் மேல் ஓட்டுக் கூரை மோதிக் கொள்ளப் போகிறது!

வானதி தன் கண்களை இறுக்கி மூடிக்கொண்டாள்!

"தாயே! துர்க்கா பரமேசுவரி! தாய் தந்தையற்ற இந்த அநாதைப் பெண்ணுக்கு நீதான் கதி! என்னை உன் பாதங்களில் சேர்த்துக்கொள்!" - என்று பிரார்த்தனை செய்தாள்.

(தொடரும்)

அரசு மருத்துவமனையில் இன்னொரு

மூன்றாவதாய் ஒரு குழந்தையை வயிற்றில் சுமந்துகொண்டிருந்த இருபது வயது வள்ளி தனது பிரசவத்திற்கு இத்தனை பெரிய விலை கொடுக்க வேண்டி வரும் என்று கனவிலும் நினைத்திருக்க மாட்டார்.

கோவையை அடுத்த உப்பிலிபாளையத்தைச் சேர்ந்த அவர், கோவை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இரண்டாம் நாள் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தார். குழந்தை பிறந்து ஒருவாரம் சென்ற பிறகு, குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காகத் தனி வார்டில் சேர்க்கப்பட்ட வள்ளிக்குப் பல கட்ட பரிசோதனைகளைச் செய்திருக்கிறார்கள். "உனக்கு வலிப்பு வருவதற்கான சாத்தியக் கூறுகள் இருக்கின்றன. எனவே அறுவை சிகிச்சைக்கு முன்பு அதற்கு ஊசி போட வேண்டும்'' என்று மருத்துவர்கள் கூறியிருக்கிறார்கள். "எனக்கு வலிப்பு எதுவும் இதுவரை வந்ததில்லை. பிறகு எதற்கு வலிப்பு ஊசி?'' என்று வள்ளி கேட்டிருக்கிறார்.

ஆனாலும் மருத்துவர்கள், கடந்த மாதம் 11-ஆம் தேதி அவருக்கு நரம்பில் ஊசி போட்டு விட்டு, 'கொஞ்ச நேரம் வலிக்கும், பொறுத்துக் கொள்' என்று கூறியிருக்கிறார்கள். ஊசி போட்ட நிமிடம் தொடங்கி, கை தொடர்ந்து வலித்துக்கொண்டே இருக்க, அன்றே கு.க அறுவை சிகிச்சையையும் முடித்து விட்டார்களாம். அறுவை சிகிச்சை செய்து கொண்ட வலியை எல்லாம் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஊசி போடப்பட்ட கையில் மரண வலி தொடர்ந்திருக்கிறது.

மறுநாள் வலி தாங்க முடியாமல், அய்யோ... அம்மா என்று அழுது கத்தியிருக்கிறார். வார்டில் இருந்த நர்சிடம் டாக்டரைக் கூப்பிடுங்கள் என்று கெஞ்சியிருக்கிறார். அவரோ வெறும் வலி நிவாரணி மாத்திரையைக் கொடுத்து ஒன்றும் செய்யாது என்று சமாதானம் சொல்ல... எதற்கும் கட்டுப்படாத வலி நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்திருக்கிறது. மற்றொருபுறம் கை வீங்கிக்கொண்டே சென்றிருக்கிறது. கடைசியில் பதினோரு மணிக்கு மருத்துவர்கள் வந்து பரிசோதனை செய்திருக்கிறார்கள். ஆனால் கைக்கு என்ன நேர்ந்தது என்று எதுவும் சொல்லாமல், கூட்டம் கூட்டமாக டாக்டர்கள் வந்து பார்த்துவிட்டுப் போயிருக்கிறார்கள்.



• வள்ளி

மறுநாள், ரத்தக் குழாயில் அடைப்பு ஏற்பட்டு விட்டது என்று கூறி, கையில் இரண்டு இடங்களில் மைனர் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்று கூறியிருக்கிறார்கள்.



• சுப்ரமணியன்

• கணவன் மற்றும் உறவினருடன் வள்ளி



ஆபரேஷனுக்கு ஒப்புதல் வாங்கும் படிவத்தில் கையெழுத்து போடுகிறேன் என்று சொன்ன வள்ளியிடம் கைநாட்டு வாங்கிக் கொண்டு ஆபரேஷன் செய்திருக்கிறார்கள். கையில் செய்யப்பட்ட ஆபரேஷனுக்குப் பிறகும் முன்னேற்றம் இல்லாமல், கை நீல நிறமாய் மாறிப் போய் விட்டிருக்கிறது.

"இனி கையை முட்டியுடன் துண்டித்து எடுத்தால்தான் உயிர் பிழைக்க முடியும்" என்று சொல்லி, கையை அறுவை சிகிச்சை மூலம் அகற்றி விட்டார்களாம்.

"எனது கணவர் உடல்நிலை சரியில்லாமல் படுத்துக் கொண்டபோதெல்லாம் நான் கூலி வேலைக்குச் சென்று நிலைமையைச் சமாளித்தேன். இனி வலது கை இல்லாத நிலையில் நான் என்ன செய்யப் போகிறேன். என் குழந்தைக்குப் பால்கூட கொடுக்க முடியவில்லை" என்று கண்ணீர் மல்கக் கூறிய வள்ளியைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

அலட்சியம்!

"நான் ஊசி போட்ட அன்றே பலமுறை எடுத்துச் சொல்லிக் கதறினேன். யாரும் காதில் போட்டுக் கொள்ளவில்லை. இப்போது எல்லோரும் ஓடி ஓடி எனக்குச் சிகிச்சை செய்கிறார்கள். இதைக் காலத்தோடு செய்திருந்தால் நான் கையை இழந்திருக்க மாட்டேன். எனக்கு காக்காய் வலிப்பு இருந்தது என்று சொல்கிறார்கள். இது அநியாயம். இது போன்று எனக்கு ஒருமுறைகூட வந்ததில்லை" என்கிறார்.

"தனியார் மருத்துவமனைகளை விடவும் அதிக வசதியும், நவீன உபகரணங்களும் உள்ள அரசு பொதுமருத்துவமனைகளில் காட்டப்படும் அலட்சியத்திற்கும், காலதாமத சிகிச்சைக்கும் பலியாகும் ஏழை மக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருக்கிறது. வள்ளி விவகாரத்தில் காட்டப்பட்ட அலட்சியப் போக்கைக் கண்டித்து ஆகஸ்ட் இருபத்து எட்டாம் தேதி கண்டனப் பேரணி நடத்தப் போகிறோம்" என்கிறார்கள் கோவை மாநகர மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர்.

வள்ளிக்கு சிகிச்சை வழங்கியதில், அவரது உயிருக்கு ஆபத்து என்று கண்டு பிடித்து கையை நீக்கிய மருத்துவர்கள், முன்னதாக அவரது கைக்கு வந்த ஆபத்தையும் ஏன் தவிர்த்திருக்கக் கூடாது? என்ற கேள்வியுடன் கோவை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் தலைமை மருத்துவர் சுப்ரமணியனைச் சந்தித்தோம்.

"குடும்பக்கட்டுப்பாடு அறுவை சிகிச்

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி – 2000

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகள்:

1. **மண் வாசம்**
   இராம். மணிவேல்
2. **சுழற்சி**
   மயூரா ரத்தினசாமி
3. **அந்த புசுபுசு ஆட்டுக்குட்டி**
   செந்தில் ராகவன்
4. **தெருக்கூத்தும் ராஜா நேசமும்**
   அகல்யா
5. **மனவெளி**
   பா. ராமச்சந்திரன்
6. **உன்னை அறிந்தால்**
   பானுகுமார்
7. **சைக்கிள்**
   மா. நயினார்
8. **கொடிது கொடிது**
   ஜி.ஆர். சுந்தர்நாத்
9. **இடைவெளி**
   அ. கங்காதரன்
10. **இனி என்ன செய்வது?**
    இரா. கதைப்பித்தன்
11. **டிசம்பர் செடியும் நானும்**
    சாந்திகுமார்
12. **குஞ்சனின் பெண்சாதி**
    தேவகாந்தன்
13. **மரங்களும் மனிதர்களும்**
    எஸ். பாலகுமார்
14. **பச்சை**
    அல்லி உதயன்

சைக்கும், கையைத் துண்டித்து சிகிச்சை அளித்ததற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பொதுவாக குடும்பக்கட்டுப்பாடு செய்து கொள்ளும் முன், சம்பந்தப்பட்டவரின், ரத்தக் கொதிப்பு, இதயத்துடிப்பு, சர்க்கரை அளவு, மயக்க மருந்து கொடுக்க தகுதியானவரா? என்று எல்லா சோதனைகளையும் முடித்த பிறகு, திருப்தியாக இருந்தால் மட்டுமே, அறுவை சிகிச்சைக்கு அனுமதிப்போம். அப்படிச் செய்த சோதனையில்தான் வள்ளிக்குக் காக்கை வலிப்பு இருந்திருப்பதை நரம்பியல் டாக்டர்கள் கண்டு பிடித்து அதற்கான ஊசி போட சிபாரிசு செய்திருக்கிறார்கள். எனவே ஆபரேஷன் அன்று அவருக்கு 'எப்சோலின்' என்ற மருந்து நரம்பில் செலுத்தப்பட்டிருக்கிறது. அதன் பிறகு அவரது கையில், வலி ஏற்பட்டு, பிரச்னை உருவானதும், எங்கே ரத்தம் உறைந்திருக்கிறது என்பதை அறிந்து மைனர் ஆபரேஷன் மூலம் நீக்கினோம். ஆனாலும் பலன் இல்லை. எனவேதான் கையை நீக்கும்படி ஆனது. நீக்கப்பட்டக் கையை பேதாலஜி சோதனைக்கு உட்படுத்தி வருகிறோம். உண்மையான காரணம் விரைவில் தெரிந்துவிடும். வள்ளிக்குக் காலதாமதமாகச் சிகிச்சை அளித்தோம் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது'' என்கிறார்.

தலைமை மருத்துவராக இவர் சொல்வது சரியெனப்பட்டாலும், ஊசி மூலம் செலுத்தப்பட்ட எப்சோலின் மருந்துக்கு எக்ஸ்பைரி இருந்ததா? நியூராலஜி மருத்துவர் வள்ளிக்குக் காக்கை வலிப்பு இருந்தது என்று கண்டு பிடித்தது சரியா? என்பது போன்ற கேள்விகள் எழவே செய்கின்றன. இந்தக் கேள்விகளோடு நீதிமன்ற படிக்கட்டுகள் ஏறி வழக்கு தொடுக்கவோ, வாதாடவோ, வள்ளிக்குப் பணமும் இல்லை. மனத்தில் பலமும் இல்லை.

எதிர்பாராத விபத்து என்று இந்த ஏழைச் சகோதரியை வீட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு முன், நியாயமான இழப்பீட்டை வள்ளிக்கு வழங்குவதுதான் நியாயம்.

— ஜெயன்

படங்கள்: **வெங்கடேஷ்**

என் கடவுளுக்கு நைவேத்தியம்காட்டி சாப்பிட வேண்டும்?



- ஒவ்வொரு பதார்த்தத்திலும் ஜீவனுண்டு. அதையறுத்து சமைப்பதனால் தோஷம் உண்டாகின்றது. அவைகளை கடவுளுக்கு ஆராதனைசெய்து சாப்பிட்டால் அந்த தோஷம் நிவாரணையாகும்.
- யஞ்ஞத்தினால் ஆராதிக்கப்பட்ட தேவதைகள், சந்தோஷ மடைந்து இஷ்ட்டமான போகங்களைக் கொடுப்பார்கள். ஆதலால் நீங்கள் சாப்பிடுவதற்குமுன் அன்னமும் பதார்த்தங்களும் கடவுளுக்கு காட்டி ஆராதனை செய்து அந்த சேஷத்தைச் சாப்பிடவேண்டும்.
- இந்திராதி தேவதைகளும் ஜனங்களுக்கு ஜீவனார்த்தமாகிய பதார்த்தங்களைக் கொடுப்பதற்கு மழையைப் பெய்விக்கப் பகவானால் நியகிக்கப்பட்டிருக்கின்றது. ஆதலால் அவர்களால் விளைவித்துக் கொடுக்கப்பட்ட பதார்த்தங்களை மறுபடியும் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வதனால் அவர்களை சந்தோஷித்து மறுபடியும் பிரதி வருஷங்களிலும் மழையை விருத்து செய்து கொண்டே வருவார்கள். அதனால் ஜனங்கள் க்ஷேமமாய் விருத்தியடைவார்கள்.

ஆதாரம்: ஜீவப்ரஹமைத்ய வேதாந்த ரஹஸ்யம்

ஆகையால் கிராண்ட் ஸ்வீட்ஸ் வாங்கி நல்லோருக்கு விநியோகம் செய்யவும்.

திருமண வைபவங்களுக்கு சீர் முறுக்கு, சீர் அதிரசம், முள்ளு தேன்குழல், பருப்புத் தேங்காய் வகைகள், திரட்டுப்பால் அப்பம் முதலியவை வழங்கப்படும்.

தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்

24, 2வது மெயின் ரோடு, காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20. போன்: 4915662, 4914213



அனிதாவிடம், "எங்கப்பா" என்றான். அவர் நெருங்கிய போது புன்னகைத் தான்.

எதிரில் கடக்கும் போது ஒரு நாளும் அவன் அவரைப் புன்னகைத்த தில்லை. திடீரென ஆறு வயதுப் பையன் ஆனது போலிருந்தான். சுந்த ரம் அனிதாவைப் பார்த்து, "வீட்ல அப்பா அம்மா எல்லாம் நல்லா இருக்காங்களா?" என்றார்.

"நல்லாயிருக்காங்க."

அனிதாவின் பதிலை ஏற்றுக் கொண்டு விட்டு பார்த்திபனிடம், "மத்தியானம் கடலைக் காட்டுக்குத் தண்ணி எடுத்து விட்டுடு. எனக்கு வேலையிருக்கு" என்று பஸ் ஏறப் போய் விட்டார்.

"என்னை உங்கப்பாவுக்குத் தெரியுமா?" என்றான் அனிதா.

"இல்ல. வீட்டுக்கு எந்தப் பசங்க வந்தாலும் அவரு அப்படி விசாரிப்பாரு. அதே மாதிரி உன்னையும் கேட்டிருக்காரு."

க.சீ. சிவகுமார்

"சரி. ஏதோ சொல்றேன்னு சொன்னே. என்ன?"

"உன்னைய எனக்குப் பிடிச்சிருக்கு."

"சரி."

இப்போது அனிதாவை கண்ணுக்குள் நுழைபவன் போலப் பார்த்தான்.

"ம்... சொல்லு" என்றாள் மேலும். கண்களில் குறும்பா கோபமா எனத் தெரியாத பாவம் மின்னிக் கிடந்தது. நேரடியாகச் சொன்னால் இப்பவே பஸ் ஏறிப் போய் விடுவாளோ என்று பயமாகவும் இருந்தது.

"உன்னைக் காதலிக்கிறேன்."

மர்மமாயிருந்த அவளது கண்களில் நீர்த்துளி குபுகுபுத்தது. அதைப் புறங்கையால் துடைத்துக் கொண்டாள்.

"சாரி... தப்பா இருந்தா மன்னிச்சிடு."

"இல்ல.. அப்படி இல்ல. தப்பொண்ணும் இல்ல."

"நீ பக்கத்துலயே இருக்கணும்னு இருக்கு."

"எனக்கும் அப்படித்தான் இருக்கு பார்த்தி... வீட்ல ஒப்புக்க மாட்டாங்க பார்த்தி."

"பயப்படறியா? பயப்படாதே. நானிருக்கேன்."

இதைச் சொல்லும் போது பார்த்திபனுக்கு கிடா மீசை தோளில் புஜ கிரீடங்கள் எல்லாம் முளைத்தன. கோழிக்குஞ்சைப் போல, அவளை ஏந்திக் கொள்பவன் போலத் தோன்றினான். காற்று அணக்கமின்றி இருந்தது. அனிதாவின் பச்சைத் துப்பட்டா ஆடையுடன் படிந்து, பட்டன் போட்டது போலத் துடிதுடிப்பின்றிக் கிடந்தது.

வீடு வரை எதுவும் பேசிக் கொள்ளவில்லை. பிறகு, இயல்பாகப் பேசிக் கொள்வதெல்லாம் நொடியில் கலைந்து போயாகி விட்டது. ஒவ்வொரு வார்த்தையின் மீதும் இரண்டு டன் எடையும் அழுத்தமும் உட்கார்ந்து கொண்டாற்போலிருந்தது. சாப்பிட்டு முடித்ததும்





''அன்றைய தலைவருக்கும் இன்றைய தலைவருக்கும் சின்ன வித்தியாசம்தானா... எப்படி?''

''அப்ப தியாகம் செஞ்சாங்க... இப்ப யாகம் செய்றாங்க!''

– தஞ்சை தாமு

நாலு பேரும் தென்னந் தோப்புப் பக்கமாக நடந்தனர்.

பிரகாஷும் பார்த்திபனும், ஜோதியும் அனிதாவுமாக இரட்டை பிரிந்து நடந்ததில் நால்வருக்கும் பேச ஏது உண்டாகியிருந்தது.

பிரகாஷ், ''சொல்லிட்டியா... சரி... அவளுக்கும் லவ்தானா?'' என்றான்.

''ஆமா.''

அனிதா சொல்லக் கேட்டதும் ஜோதி, ''ஐய்யோ'' என்றாள் முதலில். பின்பு, ''பார்த்திபன் நல்ல பையன்தான்'' என்றாள்.

ஒரு சாம்பிராணிக் கட்டிக்கு தீப்பற்ற வைக்கிற மாதிரி அவர்களது உரையாடல் இருந்தது. பிறகோ எதுவோ கமழ்ந்து பரிமளம் வீசியது.

மத்தியானம் சாப்பிட்டு முடிந்ததும் கொஞ்ச நேரத்தில் தண்ணீர் பாய்ச்சப் போக மண்வெட்டியும் கையுமாய் பார்த்திபன் கைலி டி-சர்ட்டுடன் தயாரானான். அனிதா அவனது தோற்றத்தை 'உழவன் மகன்' என வர்ணித்தாள்.

மற்ற மூவரும் வேப்பமர நிழலில் அமர்ந்திருக்க பார்த்திபன் நீர் மாற்றிக் கொண்டிருந்தான். வாடின கடலைச் செடிகள் உயிர்த்துச் செழித்தன. வெளியே பூத்து உள்ளே காய்த்துக் கொண்டிருந்தது கடலைக் காடு.

திங்கட் கிழமை பள்ளியில் பணி ஒப்புக் கொள்ளுமுன்னரே ஓட்ட வீரன் கலைச்செல்வனுக்கு பி.ஈ.டி. ரவி கோச்சிங் ஆரம்பித்தார். 13.5 வினாடிகளில் வந்தான் அவன்.

''கிளாப் அடித்ததும் இவ்வளவு டைம் எடுக்கக் கூடாது கலை'' என ஊக்கிக் கொண்டிருந்தார். இந்த ஆண்டு அவனால் மண்டலப் பரிசு கொய்வதற்கு சங்கல்பம் எடுத்திருந்தார்.

பிரகாஷும் பார்த்திபனும் வாலிபால் அணியில் இருந்தனர். திங்கள் மாலை கரூருக்கு பிரகாஷையும் பார்த்திபனையும் கூட்டிப் போய்த்தான் விளையாட்டு உபகரணங்களை வாங்கி வந்தது.

அடுத்த நாள் அவர் எம்.எஸ்.-2 உடன் இணைந்து ஆற்றிய காரியம் மாணவர்களிடம் மகத்தான வரவேற்பைப் பெற்றது. எம்.எஸ். 2 என்பது கேட்பதற்கு வேதிக் குறியீடு போலத் தோன்றலாம். உண்மையில் எம்.எஸ்டூ என்பது எம். சங்கரராம சுப்பிரமணியன் என்கிற வணிகவியல் ஆசிரியரைக் குறித்தது.

அவருக்கு முன்பே பள்ளியில் எம். சண்முகம் என்கிற புள்ளியியல் ஆசிரியர் இருந்தார். அவர் எம்.எஸ். ஒன் என்றும் சங்கரராம சுப்பிரமணியன் எம்.எஸ்டூ என்றும் அறியப்பட்டார்கள் – இரண்டாவது எம்.எஸ்.ஸின் வருகைக்குப் பிறகு.

எம்.எஸ்டூவும் பி.ஈ.டி. ரவியும் சேர்ந்து தலைமை ஆசிரியரைச் சென்று சந்தித்தார்கள். அன்றிலிருந்து கோடவுன் முறை ஒழிக்கப்பட்டது. மதிய உணவு இடைவேளையை மட்டும் கோடவுனில் பெண்கள் உண்டுகளிக்கப் பயன்படுத்தலாம் என்கிற அமல் வந்தது.

பார்த்திபன் தமது கடிகாரத்தின் வட்டக் கண்ணாடியை தினமும் திருநீறு கொண்டு தேய்க்க ஆரம்பித்தான். கடிகாரத்துக்கு வீடுபேறு, பக்தி மார்க்கம் போன்ற தேவைகள் இல்லைதான். ஒருவித மங்கலான பிம்பமாக அதற்குப் பிரதிபலிக்கும் திறனிருந்தது. மாணவர்கள் வலது புறமும் மாணவிகள் இடதுபுறமும் வகுப்பில் அமர்ந்திருந்தனர். தனது கடிகாரத்தைக் கழற்றி டெஸ்க்கின் மீது பார்த்திபன் வைத்து விடுவான். அப்படி வைத்து விட்டு இடது கையின் மீது இடது நெற்றிப் பொட்டைச் சாய்த்தால் கடிகாரத்தில் அனிதா தெரிவாள்.

அனிதாவின் முகம் தவிர வேறு தலைகளும் தடைகளும் அதில் தெரியக்கூடுமென்றாலும் மூளைக்குள் இருக்கும்

அன்னப்பட்சி பிரித்தருந்தி விடும்.

இது தவிர வாட்ச் கட்டப்பட்ட நிலையில் வலது கண்ணை இடதுபுறங்கையால் தேய்த்து விடுகிற பாவனையிலும் அவளது பிம்பங் காணலாம். அப்போது கடிகாரத்தில் நகரும் அவளது பிம்பம் ஜன்னலோர ரயில் பெட்டிக்காரியாகக் காட்டும். பிம்பத்தில் அடைபடும் வசமிழந்த பின்னும் வினாடியில் எட்டியொரு பாகம் நிற்க வைக்கிற மூளைப் பழக்கத்தில் அவள் யுகத்துக்குமாய் பதிந்து கொண்டிருந்தாள்.

கடிகாரத்தின் வடிவம் வேறுவிதமான உபயோகத்திற்கும் பொருத்தமாக இருந்தால் அவற்றை அப்படி வடிவமைத்தவர்கள் அறியாத வேறு பல அர்த்தங்கள் அதற்கு உண்டு என்று ஆகிறது. அதை எப்படி அறிய முடியும்? அவை மர்மமான முறையில் முடிவின்றி விரிபவை. பின் தொடரும் பிம்ப அசைவுகளாய் சலனித்துக் கொண்டிருந்தாள் அனிதா.

பார்த்திபனுக்குக் கடிகாரம் இடது கையில் என்றால் அனிதாவுக்குத் தோடுகள் இரண்டு காதிலும். பார்த்திபனுக்காக அவளது வலது காதின் தோடுமரை அடிக்கடி திருகப்பட்டது. ஸ்டட்டின் எதிர் மரை திருகும் சாக்கில் அவள் அவனைப் பார்த்தபோது பார்த்தியின் கண்கள் சந்திக்க நேர்ந்தால் அவன் செலவேயின்றி புண்ணிய நதிகளில் முக்குளித்தான். ஒருக்களித்த தலை சாய்வில் அவளது இரு கண்கள் வெவ்வேறு அளவுகளில் சுருக்கம் கொண்டன.

அவள் தோட்டைச் சரிசெய்யும் போது மாந்திரீகத்தின் துணையால் தோட்டைக் காணாமல் செய்து விட்டால், அவளது இரு கரங்களின் ஆட்காட்டி விரலும் பெருவிரலும் தேய்வது நாட்டியத்தில் கண்களின் முத்திரையைக் காட்டுவதாய் இருக்கலாம்.

கடாட்சம் அருளும் கண்ணி! காதல் வளர் கன்னி! - உன் காதலுறுங் கண்ணில் ஒளியுதிர் காலம்.

அவள் இமைத்துப் படபடக்கையில் - கண்களே குடையென விரிந்த மழைச் சாரலில் குடையின் கூடு தாங்கியில் பார்த்திபன் உயிர்க் கம்பியை நிறுத்தினான்.

மதிய உணவுக்குப் போகையில் கதவு கடந்து போகுங்கால் ஒரு விசை பார்த்துப் போவான் பார்த்திபனை. அப்போது கதவு உட்புறமாய் ஒருக்களித்திருக்கிறது.

மதிய உணவு இடைவேளையில் உணவுக்குப் பிந்தைய நேரம் பிரகாஷும் பார்த்திபனும் பி.ஈ.டி. அறைக்குச் செல்வது வழக்கமாயிருந்தது. தங்கராஜ் எப்போதாவது அங்கே இருப்பான்.

''என்ன பார்த்தி! எப்படிப் போயிக்கிட்டிருக்கு?'' என்றார் ரவி.

''நல்லாத்தான் போயிக்கிட்டிருக்கு. கிளாஸைத்தான கேக்கறீங்க?''

''அத யாருடா கேட்டா? டிராக் எப்படி போய்க்கிட்டிருக்கு?''

பார்த்திபன் நாணமுற்றான். தங்கராஜ் இடைவெட்டி, ''எல்லா ஆட்டமும் லவ்-ஆல்ல துவங்குது. தம்பி! நீ தேவதாஸ் படம் பார்த்துட்டியா?'' என்றார்.

''இல்லியாங்கண்ணா! புதுப்படமா?''

''ரொம்பப் பழைய படம்.''

''தமிழ்ப் படமா?''

''தமிழ்ப் படம்தான். மொழி பெயர்ப்புன்னு வச்சிக்க. தேவதாஸ்னாலே மொழி பெயர்ப்புத்தான். வங்காளக் கதை. சரத் சந்திரர் எழுதினது. தமிழ்ல நாகேஸ்வரராவ், சாவித்ரி. வேதாந்தம் ராகவையா டைரக்ஷன்.''

''தங்கம்! எதுக்குப்பா இத்தனை தகவல்?'' என்றார் அலுப்பாக.

''படம் கொடுமுடி கே.பி.எஸ்ஸுல ஓடுது. தம்பிக பாக்கட்டுமே.''

''நீ உன்ன மாதிரியே



''இதுவரைக்கும் நான் மருந்து மாத்திரைக்காக ஒரு பைசா கூட செலவழிக்கலே.''

''தெரியும்- மருந்துக் கடையிலே நிறைய கடன்னு சொன்னாங்க.''

- தஞ்சை தாமு



அட இங்க பாருங்க!

அமெரிக்காவில் மரண தண்டனை விதிக்கப் படும் கைதிகளின் உறவினர்களுக்கும் நண்பர்களுக் கும் அந்தச் 'சடங்கை' நேரில் காண ஐந்து 'பாஸ்'கள் தருகிறார்கள். தனக்கென்று உறவினரோ நண்பர்களோ இல்லாத ஒரு கைதி, இந்த 'பாஸ்'களை விற்க ஏற்பாடு செய்திருக்கிறார்! ஒரு நண்பர் மூலம் இன்டர்நெட்டில் விளம்பரப்படுத்தி அவற்றுக்கு 300 டாலர் பெற்று, தொகையை ஓர் அனாதை ஆசிரமத்துக்குத் தர திட்டமிட்டிருக்கிறார். விளம்பரத்தைப் பார்த்துவிட்டு ஏராளமானவர்கள் 'பாஸ்'வாங்க விண்ணப்பிக்க, அரசாங்கம் இந்தக் காரியத்துக்குத் தடை விதித்துவிட்டது!

– பாரீஸ் பார்த்தசாரதி

அலையறதுக்கு செட்டு சேக்கறே."

"இல்ல ரவி அபூர்வமான படம். போய்ப் பார்த்துட்டுத்தான் வரட் டுமே."

"என்ன பார்த்தி... ரெண்டு பேரும் போறீங்களாப்பா?" என்றார் ரவி சார்.

"நைட்டு வீட்டுல சொல்லாம வெளில தங்கினதில்ல சார்."

"குழந்தையா நீ? இத பாரு இவ் வளவுதான் லைஃப்" டேபிள் மீதிருந்த பேஸ் பாலைத் தூக்கிக் கீழே போட்டார். "வீட் டுக்கு ஃபோன் பண்ணி ரவி சார் வீட்டுல தங்கிட்டன்னு சொல்லு. மொபெட்லயே போய்ட்டு வந்துடலாம். நைட் பஸ் இல்லாட்டாலும் வந்துடலாம். நேரா நம்ம வீட்டுக்கு வந்திடுங்க."

"டிக்கெட்... பெட்ரோல்க்கெல்லாம் காசு வேணும் சார். வீட்டுக்குப் போய்ட்டு வந்திடறோம்."

ரவி தனது சட்டைப் பையிலிருந்து நூறு ரூபாயை எடுத்தார். பார்த்தி வாங்கத் தயங்கவும் பாக்கெட்டில் திணித்தார்.

"வர்ற ஞாயிறு எங்காச்சும் சைக்கிள்ல போவமா.. பிக்னிக் மாதிரி"

"போலாம் சார்.".

"சரி, படம் பாத்துட்டு நேரா நம்ம வீட்டுக்கு வந்துடுங்க. காலைல இப்படியே ஸ்கூல் வந்திடலாம்.

சாயங்காலம் ஈ.டி. பஸ் நிற்கிற மலச்சியூர் பிரிவில் பிரகாஷ், பார்த்திபன், தங்கராஜ் மூவரும் நின்றிருந்தனர். இன்று சைக்கிளிலும் மொபெட்டிலுமாக ஈட்டி வண்டியைத் தூரத்துகிற ஏற்பாடு. தென்னிலையில் தங்கராஜ் தங்கிக் கொள்ள, மற்ற இருவரும் கொடுமுடிக்கு முதலாட்டம் பார்க்க நடந்து வந்த அனிதா பார்த்திபனிடம், "இங்கே ஏன் நின்னுட்டே?" என்றாள்.

"கொடுமுடிக்குப் படம் பாக்கப் போறோம்... தேவதாஸ்."

சற்றுத் தள்ளி நின்றிருந்த தங்கராஜைக் கண் காட்டி, "இந்த ஆள் உன்னைய அலைய விட்டுடுவான். நீயும் தெருத் தெருவா சைக்கிள்ல சுத்தப் போறே" என்றாள். குரலில் ஏனோ கோபமில்லை.

(தொடரும்)

வட்டமேஜை



முரசொலித்தது!

✉ 'பாட்னா பயங்கரம்', 'மும்பை பிளாக் மெயில்' தலையங்க வரிகள் ஒவ்வொன்றும் பாரம்பரியம்மிக்க 'கல்கி' இதழின் தேசப்பற்றை குன்றின்மீதிட்ட விளக்காக பிரகாசிக்கச் செய்தன!

மதுரை – 10, வி. சிவா.

✉ கல்கியின் இடக்குமடக்கான அத்தனை கேள்விகளுக்கும் நடிகர் விஜயகாந்த் அளித்த சாமர்த்தியமான பதில்கள் 'இதோ ஓர் எதிர்கால அரசியல்வாதி தயார்' என முரசொலித்தது போல் அமைந்தது.

ஆதமங்கலம்புதூர், கே. சண்முகம்.

✉ 'ஒலிம்பிக்ஸ் பற்றி நிறைய செய்திகளை அள்ளித் தந்தீர்கள். நன்றி! 'ஒலிம்பிக்ஸிங்' ஏதும் நடக்காமல் இருந்தால் சரி!

தஞ்சாவூர் –9, தஞ்சை ராகவ்.மகேஷ்.

✉ 'ஊழி' சிறுகதை சமகாலச் சிந்தனையின் வெளிப்பாடாக மனத்தைத் தொட்டது. முடிவு நெகிழச் செய்தது.

போடிநாயக்கனூர், எம். பாலசுப்ரமணியன்

✉ "ஒரு ஸ்பூன் ஜெர்மனி, அரை ஸ்பூன் ஸ்விஸ்" மினி தொடரில் ஸ்விஸ் பாதாளக் குகை ஏரியில் வந்தியத்தேவன் மாதிரி ஒரு துடுப்புக்காரனுடன் பயணம் சென்றதை சிதா ரவி குறிப்பிடும்போது, நாமும் அந்தப் படகில் சென்று பயந்து நடுங்கியது போல ஒரு கற்பனை வந்தது! ஆசிரியரிடம் ஒரு கேள்வி: அடுத்த பயணம் எங்கே, எப்போது?

சென்னை – 5, கே. தெய்வசிகாமணி.

✉ 'கல்கி' 30.7.2000 இதழில் 28ம் பக்கத்தில் அண்மையில் நடைபெற்ற தி.மு.கழக தலைமை இலக்கிய அணி நடத்திய மாவட்டப் பொறுப்பாளர்களின் கலந்துரையாடல் கூட்ட நிகழ்ச்சிகள் குறித்து தவறான செய்திகள் இடம் பெற்றுள்ளன.

இலக்கிய அணியின் மாவட்டப் பொறுப்பாளர்களின் கூட்டத்தின் நோக்கம்–இளைஞர்களிடம் படிக்கும் உணர்வை வளர்க்க வேண்டும் என்பதுதான். இதை அறிவுறுத்தியும் இதனை நடைமுறைப்படுத்த மாவட்டம் தோறும் புத்தகச் சந்தை நடத்த வேண்டும் என்பதை வலியுறுத்தியும் விவாதிக்கப்பட்டது. இது இலக்கிய அணியின் செயல்பாட்டுக் கடமைகளில் ஒன்று. நடைபெற்ற இந்த நிகழ்ச்சியின் குறிக்கோளை திசை திருப்பிக் களங்கம் ஏற்படுத்தும் வகையில் தங்கள் ஏட்டில் செய்தி உருவாக்கித் தரப்பட்டுள்ளது.

நிருத்தி கலைக்காவிரியின் நாட்டிய நிகழ்ச்சிக்கு கலைவாணர் அரங்கத்தின் விழா மேடை வசதியற்றது என்பதால் வள்ளுவர் கோட்டத்திற்கு 'மாற்றப்பட்டது. நீங்கள் குறிப்பிட்டுள்ள காரணத்துக்காக அல்ல.

கயல் தினகரன்,
பொருளாளர்,
தி.மு.க. தலைமை இலக்கிய அணி,
சென்னை.

✉ 30.7.2000 தேதியிட்ட கல்கியில் வெளிவந்துள்ள மும்பை பிளாக் மெயில் என்ற தலையங்கம் மிகவும் ஆட்சேபகரமானது. தாக்கரே அவர்கள் பேசியதும் எழுதியதும் அரசியல் வெறி மற்றும் மத விரோத செயல் என்று கூறுவது கண்டனத்திற்குரியது.

தாக்கரே அவர்களை நாடறிந்த குற்றவாளி என்று கல்கி ஆசிரியர் வலியுறுத்தியிருப்பது எத்தகைய பத்திரிகை தர்மம்? இதுவரை எந்த குற்றத்திற்காகவும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படாத ஒரு தலைவரை குற்றவாளி என்று எழுதியிருப்பது பொறுப்புள்ள பத்திரிகைக்கு அழகல்ல.

சிவசேனா கட்சித் தலைவர் எதையும் ஒளிவு மறைவில்லாமல் பேசக்கூடியவர். அநீதிகளை எதிர்த்துப் போராடுபவர். நீங்கள் எழுதியிருப்பதுபோல் பிளாக் மெயில் பராக்கிரமம் செய்பவர் அல்ல.

சென்னை – 17, ஜி.இராதாகிருஷ்ணன்,
மாநில அமைப்பாளர் மற்றும்
செய்தி தொடர்பாளர்,

KALKI SHOPPING PAGE


நடக்குமென்பார் நடக்கும்

ஆகஸ்ட் 9 முதல் 15 வரை

அக்னிசர்மா பக்கம்

மேஷம் : அறிவாற்றல் மேலோங்கி இருக்கிற வாரம். அதனால ரொம்பக் கஷ்டமான காரியங்களைக்கூட சுலபமா ஊதித் தள்ளிடுவீங்க. நண்பர்களும் உறவினர்களும் தக்க சமயத்துல உதவ முன் வருவாங்க. அரசுப் பணியாளர்களுக்கு மேலிட சகாயம் ஏற்பட்டு, அதுமூலமா வேண்டிய காரியங்களை சாதிச்சிக்கிற யோகம் கூடி வரும். கலைத்துறையினருக்கு வெற்றி வாய்ப்புகள் வந்துக் கதவைத் தட்டும்.

ரிஷபம் : தடைகள் வலுவா இருந்தாலும் எதையும் சுலபமா சமாளிப்பீங்க. இந்த வாரம் பலருக்கு வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமையும். கலைத்துறையினர் கொஞ்சம் போராடித்தான் ஜெயிக்க வேண்டியிருக்கும். விஞ்ஞானம், கணிதத் துறையினருக்கு இந்த வாய்ப்பு பிரகாசமாக இருக்கு. வியாபாரிகளுக்கு லாபம் கூடும்.



துலாம் ராசிக்காரரான அமிதாப்புக்கு கொடுக்கல் வாங்கல் மட்டும் இப்ப வேணாமாம்!

மிதுனம் : பொருளாதார ரீதில வலுவா இருக்கிற உங்களுக்கு இந்த வாரம் எதிர்பாராத செலவுகள் கொஞ்சம் இருக்கும். தவிர்க்க முடியாம சிலருக்குக் கடன் தரவேண்டி வரலாம். அரசுப் பணியாளர்களுக்கு இது ஏற்றமான வாரம். கலை - இலக்கியத் துறையினருக்கும் புகழ் கூடும்.

கடகம் : பல முக்கியமான காரியங்களை சுலபமா சாதிப்பீங்க. எதிர்ப்புகள் அகன்று வெற்றிக் கொடி நாட்டுவீங்க. வீடு, வாகனம் வாங்க இது சிறந்த வாரம். வழக்குகள் சாதகமா தீர்ப்பாகும். விவசாயிகளும் விஞ்ஞானிகளும் வெற்றிப் பாதைல நடப்பாங்க. பெண்களுக்கும் புதிய ஆடை சேர்க்கை இருக்கும். மாணவர்கள் படிப்பில் பிரகாசிப்பாங்க.

சிம்மம் : இந்த வாரம் பலருக்குத் திருமண யோகம் கூடி வரும். மனசுக்கு மகிழ்ச்சியான பல காரியங்கள் நடக்கும். எதிர்பாராத அதிர்ஷ்ட வாய்ப்புகள் எதிர்பார்த்த பதவி உயர்வு எல்லாம் இப்ப நடக்கும். வீடு, மனை வாங்கற யோகம் சிலருக்கு இருக்கும். தொழிலாளர்கள், கல்வியாளர்களுக்கு இது லாபகரமாக இருக்கும்.

கன்னி : சிந்தித்து செயல்பட வேண்டிய வாரம் இது. வாயைக் கொடுத்து, எதிலும் மாட்டிக்காதீங்க. மேலதிகாரிகளோட அதிருப்திக்கு ஆளாகும் வாய்ப்பு பலமா இருக்கு. வீட்லயும் சண்டைச் சச்சரவுகளைத் தவிர்க்க முடியாது. சொத்துப் பிரச்னையால சகோதரர்கள் நடுவுல சண்டை எழலாம். தெருச் சண்டையில் தலையிட்டு கெட்ட பேர் வாங்கிக்காம இருக்கிறதும் அவசியம்.

துலாம் : நல்லவர்கள் தொடர்பான சில முக்கியமான பிரச்னைகளை சுலபமா சமாளிப்பீங்க. இந்த வாரம் பல சங்கடங்கள் ஏற்பட்டாலும் எல்லாமே உடனே காணாமல் போயிடற அதிசயத்தை சந்திப்பீங்க. வீடு, மனை வாங்கவும் இது சரியான நேரம் இல்லை. சிலருக்கு இட மாறுதல்கள் ஏற்படலாம்.

விருச்சிகம் : தன்னம்பிக்கை மேலோங்கியிருக்கும். பல காரியங்களை வெற்றிகரமா சாதிப்பீங்க. அரசு ஊழியர்கள், விஞ்ஞானிகள் ஆகியோருக்கு உத்தியோக உயர்வு இருக்கும். நண்பர்களும் உறவினர்களும் போட்டி போட்டுக் கொண்டு உதவுவாங்க. கலைஞர்கள் பல புதிய வாய்ப்புகள் பெற்றுக் குதூகலமடைவாங்க.

தனுசு : திருமணம், வேலை வாய்ப்பு, பதவி உயர்வு - எதை எதிர்பார்த்திட்டிருக்கீங்களோ, அது இப்ப கிடைக்கும். வீடு வாங்கற யோகமும் இருக்கு. சிலருக்கு வெளியூர் / வெளிநாடு செல்லும் வாய்ப்பு கூடிவரும். எதிர்ப்புகள் அடங்கி, தொழில்ல நல்ல வளர்ச்சி ஏற்படும்.

மகரம் : உங்க புது முயற்சிகளைத் தள்ளிப் போடறது நல்லது. நண்பர்கள், அதிகாரிகள் எந்தத் தரப்பினருக்கும் உங்கமேல அதிருப்திகள் இருக்கும். கடினமான உழைப்பு, குறைவான பலன். பல்லைக் கடிச்சிட்டு இருங்க. இரவு ரொம்ப நேரம் கண் விழிக்கக்கூடாது.

கும்பம் : சுயபலம் மேலோங்கி இருக்கும். எந்தப் பிரச்னையையும் சுலபமா சமாளிப்பீங்க. தொழில் துறையில் இருக்கிறவங்களுக்கு வெற்றி வாய்ப்புகள் பிரகாசமா இருக்கும். விஞ்ஞானிகள், கல்வியாளர்கள் எல்லோரும் புகழும் பாராட்டும் பெறுவீங்க. வயசானவர்களுக்கு மக்களால் அனுகூலம் உண்டு.

மீனம் : மதிப்பும் அந்தஸ்தும் உயரும். நண்பர்கள் மூலம் சில எதிர்பாராத உதவிகளை பெறுவீங்க. பெரியவங்க ஆதரவும் ஆசியும் உங்களுக்கு இருக்கிறதால, புது முயற்சிகளைத் தயக்கமில்லாம தொடங்கலாம். அறிவியல் கலைஞர்களுக்கும் புகழ் கூடும் வாரம் இது.

ஹனுமான் சின்னஞ்சிறு பாலகனாய் இருந்த சமயம் அது. விளையாட்டுக் குழந்தையிடம், தந்தையான வாயு பகவான் சொன்னார்:

"மைந்தா! உன் ஜன்ம சாபல்யம் அடைய நீ திருமாலுக்கு அடிமை செய்ய வேண்டும்."

வெகுளித்தனமாய் அப்பாவைப் பார்த்துக் கேட்டது குழந்தை; "தந்தையே, அந்தத் திருமாலை நான் எப்படி அறிவது...?"

அதற்கு வாயு பகவான் சொன்னார்:

"யாரைப் பார்த்த மாத்திரத்தில் காரணமில்லாமல் உனக்கு அளவற்ற அன்பும் பக்தியும் ஏற்படுகிறதோ அவரைத் திருமால் என்று அறிக."

முதன் முதலில் பம்பா தீரத்தில் ஹனுமான் ராமனைச் சந்தித்தபோது அந்த அன்பும் பக்தியும் ஏற்படுவதை உணர்ந்தான்.



2. ஸ்ரீராம பக்த ஹனுமான்

ராமலக்ஷ்மணர்கள் சீதையைத் தொலைத்துவிட்டு, பம்பையைக் கடந்து ருச்யமூக பர்வதத்தை நோக்கி வருகிறார்கள். இருவரும் முனிவேடத்தில் வருவதைக் கண்ட சுக்ரீவன், தன் அண்ணனான வாலி தான் இரண்டு தூதர்களை மானிடவேடத்தில் அனுப்பியுள்ளான் என சந்தேகிக்கிறான். கவலை அடைகிறான், பயம் பற்றிக் கொள்கிறது அவனை!

அப்போது அங்கு சுக்ரீவனுக்கு உறுதுணையாக இருப்பவர் ஹனுமார். வால்மீகி, கம்பன் முதலான அனைத்துக் கவிகளும் ராமாயணத்தில் ஹனுமாரை இங்குதான் முதன் முதலில் அறிமுகம் செய்கிறார்கள். அதன் பிறகு ஹனுமார் இல்லாமல் ராமாயணம் இல்லை.

அந்த அளவுக்கு ராமாயண கதா பாத்திரங்களில் முக்கிய பாத்திரமாகத் திகழ்கிறார்.

பயத்துடன் இருக்கும் சுக்ரீவனிடம் ஹனுமார் எவ்வளவு தெளிவுடன் பேசுகிறார் பாருங்கள்:

"சுக்ரீவா! பயத்தை விடு. வாலிக்கு இந்த பர்வதத்தை அடைய முடியாத சாபம் உண்டு. தவிர, வருகிற வீரர்களின் அங்க லக்ஷணங்களைப் பார்.

ஆஜானுபாஹுவாகவும், செந்தாமரை போன்ற கண்களுடனும் வருகிறார்கள். அவர்கள் தேவகுமாரர்கள் போல் காட்சியளிக்கிறார்கள். இதுபோன்ற நேரத்தில் பயத்தைவிடுத்து புத்தியின் சாமர்த்தியத்தால் அன்றோ காரியத்தை சாதிக்க வேண்டும்."

– இதுதான் ஹனுமார் சுக்ரீவனிடம் சொன்ன வார்த்தை.

உடனே சுக்ரீவன், ராமலக்ஷ்மணர்கள் முன்பு மாறு வேஷத்தில் செல்லும்படி ஹனுமாரைப் பணிக்கிறான். அவர்களைப் பற்றி அறிந்து வருமாறு உத்தரவிடுகிறான்.

இந்த இடத்தில் வால்மீகி கூறுகையில் ஹனுமார் தனது குரங்கு உருவத்தை மறைத்

துக் கொண்டு பிக்ஷு உருவத்தில் போனார், என்கிறார்.

'பிக்ஷு' என்ற வடமொழிச் சொல்லுக்கு ஸந்யாஸி என்றும் ப்ரும்மசாரி என்றும் இருவகையாகப் பொருள் கொள்ளலாம். சிலர் ஹனுமார் ஸந்யாஸி உருவில் சென்றதாகப் பொருள் கூறுகின்றனர். ஆனால் அதற்கு மேலேயுள்ள செய்திகளை கவனித்தால் ஸந்யாஸி உருவில் சென்றிருக்க வாய்ப்பில்லை என்பது நன்கு புரியும்.


அதாவது ராம-லக்ஷ்மணர்களைக் கண்ட ஹனுமார் அவர்களை வணங்குவதாகக் காணப்படுகிறது. ஸந்யாஸி உருவில் சென்றிருந்தால் வணங்கினார் என்பது

கல்யாணபுரம் ஆராவமுதன்

பொருத்தமாக இல்லையே! ஆதலால் ஹனுமார் குரங்கு உருவை மாற்றிக் கொண்டு (மனித)ப்ரும்மசாரி உருவில் சென்றிருக்க வேண்டும் என்பதே பொருத்தமாகத் தோன்றுகிறது.

கம்பர் வேறு விதமான கதை சொல்கிறார்: ராமலக்ஷ்மணர்கள் முன்பு ஹனுமார் மாணவ உருவில் சென்றார் என்கிறார். இதோ அந்தப் பாடல்:

அஞ்சனைக்கு ஒரு சிறுவன்
அஞ்சனக்கிரி அனைய
மஞ்சனைக்குறுகி ஒரு
மாணவப் படிவமொடு
வெஞ்சனத் தொழிலர்
தவ மெய்யர்
கைச்சிலையரென



அருள்வாக்கு

ஒரு நல்ல காரியம் நடக்க வேண்டுமானால் அதை மூன்று தினுசுகளில் நடக்குமாறு பண்ணலாம். ராஜாங்கம் உத்தரவு போடுகிறது போலக் கட்டளை செய்வது ஒன்று. இதற்குப் ''பிரபுஸம்மிதை'' என்று பெயர். பிரபுவான யஜமானன் வேலைக்காரனுக்கு ஆர்டர் பண்ணுவது பிரபு ஸம்மிதை. பண்ணாவிட்டால் தண்டனை உண்டேயென்று, பிடித்தாலும், பிடிக்காவிட்டாலும் பயத்தோடு கட்டளைப் பிரகாரம் காரியத்தைப் பண்ணியாக வேண்டும். இப்படி அதிகார ஸ்தானத்திலிருந்து கொண்டு உத்தரவாகப் போடாமல் ஒரு சிநேகிதன் நம்மிடம் ஒரு காரியத்தைச் செய்யச் சொன்னாலும் செய்கிறோம். இங்கே பயம் இல்லை. அன்பாலேயே செய்கிறோம். நமக்கு நல்லதையே நினைக்கும் சிநேகிதன் அவன் என்ற நம்பிக்கை இருப்பதால் செய்கிறோம். இப்படி நம்மிடம் நல்ல மனஸ் உள்ள சிநேகிதனுக்கு 'ஸுஹ்ருத்' என்று பெயர். அதனால் நம் ஸகா மாதிரியான ஸ்தானத்திலிருந்து கொண்டு நம்மை நல்ல காரியத்தில் ஏவுவது ''ஸுஹ்ருத் ஸம்மிதை''. இதைவிடவும் சுலபமாகக் காரியத்தைச் சாதித்துத்தர வல்லது எது என்றால் பத்தினியின் பிரிய வசனம்தான். எஜமானின் உத்தரவு பாரமாக இருக்கிறது என்றால், அதையே சிநேகிதன் சொல்லும்போது லகுவாகிறது. இதைவிடவும் லேசாகிவிடும், இதையே பத்தினி சொல்கிறபோது. இது 'காந்தா ஸம்மிதை' எனப்படும். காந்தா என்றால் பத்தினி.



வேதம் பிரபுஸம்மிதம், புராணங்கள் ஸுஹ்ருத் ஸம்மிதம், காவியங்கள் காந்தா ஸம்மிதம் என்று சொல்வதுண்டு. காவியம் என்ன செய்கிறது? கவி என்ன செய்கிறான்? யதார்த்தத்துக்கு கண், காது, மூக்கு வைத்து ஜோடனை பண்ணி அனைவரும் ரசிக்கும்படியாகச் செய்வதே கவியின் காரியம். ஸுஹ்ருத் (நண்பன்) போல் உள்ளதை உள்ளபடி மட்டும் சொல்லாமல், புருஷன் நல்ல வழியில் போக வேண்டுமென்பதற்காகக் காந்தாவானவள் (பத்தினி) கூட்டியும், குறைத்தும், மாற்றியும் கூடப் பேசி அவனுக்கு இதமாக இருக்கும்படியாக 'நைஸ்' பண்ணி விஷயங்களைச் சொல்லி அவனை சரி பண்ணுவாள் என்பது ஐதிஹ்யம். இந்த காந்தாவின் ஸ்தானத்தில் காவியமும், பிரபுவின் ஸ்தானத்தில் வேதமும், இரண்டிற்கும் நடுவான ஸுஹ்ருத்தின் ஸ்தானத்தில் புராணங்களும் இருந்து கொண்டு நமக்கு தர்மங்களைச் சொல்கின்றன.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்.

நெஞ்சயிர்த்து அயல் மறைய
நின்று கற்பனைனினையும்

துளஸிதாஸரோ ஹனுமார் அந்தணர் உருவில் சென்றதாகக் கூறுகிறார்.

எப்படிப் பார்த்தாலும் தனது உண்மை உருவை மறைத்துக் கொண்டு மாறு வேடத்தில்தான் ராமலக்ஷ்மணர்கள் முன்பு ஹனுமார் போனார் என்பது தெளிவாகிறது.

ராமலக்ஷ்மணர்களை ஹனுமார் காண்கிறார். ராமபிரானின் அருள்பார்வை அந்தத் தொண்டனுக்கு முதன் முதல் கிடைத்த தருணம் அது. எப்பேர்ப்பட்ட சிலிர்ப்பு ஏற்பட்டிருக்கும் அவருக்கு!

ஆனாலும் வாயடைத்துப் போகாமல் பேசுகிறார் சொல்லின் செல்வர்:

"ராஜரிஷிகளைப் போன்றும் தேவதைகளைப் போன்றும் தோற்றமளிக்கும் நீங்கள் யார்? இந்த பயங்கரமான காட்டுக்குள் எப்படி வந்தீர்கள்? ஒரே நேரத்தில் சூரியன், சந்திரன் இருவரும் மண்ணுலகில் வந்தாற் போல் இங்கு வந்துள்ள நீங்கள் ராஜாவுக்குரிய லக்ஷணங்களுடன் காணப்பட்டாலும் ஏன் முனிவேடம் தரித்துள்ளீர்கள்? சுக்ரீவன் என்ற வானர வீரன் தனது அண்ணனான வாலிக்குப் பயந்து, துக்கத்தால் பீடிக்கப்பட்டு தலைமறைவாக இங்கே வாழ்ந்து வருகிறான். நான் அவனால் அனுப்பப்பட்டவன். நான் வாயுகுமாரன். என் பெயர் ஹனுமான். நான்

சுக்ரீவனின் மந்திரி. சுக்ரீவன் உங்களுடன் நட்புகொள்ள விரும்புகிறான். நான் மாறு வேடத்தில் வந்துள்ளேன். நினைத்தபோது நினைத்த உருவை எடுக்கக் கூடியவன்."

ஹனுமாரின் சொற்களில்தான் என்ன விவேகம் பாருங்கள்!

முனிவேடம் தரித்திருந்த போதிலும் ராமலக்ஷ்மணர்கள் ராஜகுமாரர்கள் என்று அறியக் கூடிய ஆற்றல் அவருக்கு இருக்கிறது. அது மட்டுமா! அவர்களால் சுக்ரீவனுக்கு நன்மை விளையும் என்ற நம்பிக்கையும் அல்லவா இருக்கிறது! ஹனுமானின் பேச்சிலேயே அது நன்கு புலப்படுகிறது.

வால்மீகி சொல்லும் இந்தக் காட்சியை கம்பன் விவரிப்பதைப் பாருங்கள்:

"நான் காற்றின் வேந்தற்கு
அஞ்சனை வயிற்றில் வந்தேன்
நாமமும் அனுமன் என்பேன்"

எனத் தன்னை ராமலக்ஷ்மணர்களிடம் அறிமுகப்படுத்திக் கொண்டாராம் ஹனுமார்!

ராமபிரானை முதன் முதலில் பார்த்த மாத்திரத்திலேயே ஹனுமாருக்குத் திருமாலைக் கண்ட மகிழ்ச்சி ஏற்படுகிறது என்றும் சொல்கிறார் கம்பர். ராமபிரானைக் கண்டவுடன் காட்டு மிருகங்களும் தங்கள் விரோதத்தை மறக்கின்றனவாம்.

எந்தவிடத்தில் அஹிம்சையின் கொள்கை உள்ளதோ அங்கு பகைமை உணர்வே இராது என்கிறது பதஞ்சலி யோக சூத்திரம்.

காட்டில் வழிப்பறி செய்து வந்த வேடனை வால்மீகி முனிவனாக மாற்றியது அந்த ராமபிரானின் திருநாமம் தானே!

வெள்ளையனை வெளியேற வைத்து இந்தியாவுக்குச் சுதந்தரம் வாங்கித் தந்த அண்ணல் காந்தியின் அஹிம்சை தத்துவத்துக்கு வித்திட்டதே அந்த ராமனின் தாரக நாமம் தானே!

ஆகையால் அஹிம்சையின் உருவான ராமபிரானை முதன்முதலில் கண்டவுடனேயே ஹனுமாரின் உள்ளத்தில் 'பக்தி' என்ற பிரவாகம் பெருக்கெடுத்து ஓடத் தொடங்கியது. அந்தக் கணம் தொடங்கி ஹனுமார் ராமபக்த ஹனுமானாக மாறுகிறார்.

அதன்பிறகு ராமபிரானின் திருவடியைப் பற்றியவராய் ராமநாமத்தை எந்நேரமும் உச்சரிப்பவராய்த் திகழ்கிறார்.

(வளரும்)

'பையனுக்கு உயரத்திலே கண்டம்' - யாரோ ஒரு ஒன்றரையணா ஜோசியன் சின்ன வயதில் என் ஜாதகத்தைக் கணித்த போது, இலவச இணைப்பாய் இந்த வாக்கியத்தையும் சொல்லிவிட்டுப் போய்விட, என் அப்பா அம்மா ரொம்பவும் பயந்து போய் விட்டார்கள்.

உயரம்

பலன்? வேறென்ன? என்னை கண்டத்திலிருந்து காப்பாற்றவேண்டுமென்று அப்பாவும் அம்மாவும் போட்ட கட்டுப்பாடுகளில் நான் கிட்டத்தட்ட தனிமைப் படுத்தப்பட்டுதான் வளர்ந்தேன்.

தொட்டில், தூளி இவையும் உயரமாய்த் தோன்றியதால்; தரையில் பாய் போட்டே தான் என்னை வளர்த்தார்களாம்.

குழந்தைகளோடு விளையாடப் போனால் மரம் ஏறக் கற்றுக் கொடுத்து விடுவார்கள் என்று பாட்டியோடு கொஞ்ச நாள் பரமபதம் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்பா ஒரு நாள் அதைப் பார்த்துவிட்டு 'ஏணி படமெல்லாம் போட்டிருக்கு, என்ன விளையாட்டு இது?' என்று அவசரமாய் அந்த அட்டையைக்கிழித்து எறிந்துவிட்டார்.

எஞ்சினியரிங் சேர்ந்தபோது, அந்த கல்லூரியில் ஹாஸ்டல்கள் எல்லாமே நாலைந்து மாடிகள் இருக்கிறதென்று அப்பா குடும்பத்தையே கோயம்புத்தூர் கொண்டு வந்து விட்டார். ஒரு முறை நண்பர்கள் கூப்பிட்டார்கள் என்று வீட்டில் சொல்லிக் கொள்ளாமல் ஊட்டிக்கு சின்ன பிக்னிக் போய் விட்டு வந்ததற்காக அப்பாவும் அம்மாவும் என்னுடன் மூன்று நாட்கள் பேசவில்லை. 'எவ்ளோ உயரமான மலையாமே அது. சொல்லிக்காம போய்ட்டியே கண்ணா. உனக்கு எதுனா ஆயிருந்தா நாங்க என்ன பண்ணுவோம்ன்னு யோசிச்சுப் பார்த்தியா' என்று அம்மா அழுதது இன்னும் நினைவில் இருக்கிறது. நல்ல வேளை இவர்கள் எனக்கு கர்நாடக சங்கீதம் கற்றுக் கொடுக்கவில்லை. அப்படி ஏதும் நடந்து, இவர்களைக் கேட்காமல் உச்சஸ்தாயியில் கச்சேரியில் பாடியிருந்தால் இன்னொரு பாட்டம் அழுதே தீர்த்திருப்பார்கள்.

இவர்களின் உயரப் பைத்தியம் (அல்லது உயரமல்லாத பைத்தியம்) அதன் பிறகும் நிற்கவில்லை. எஞ்சினியரிங் முடித்து, பிறகு சொந்த ஆர்வத்தில் ஐஏஎஸ் எழுதி, அர



சங்க-அதிகாரியாகச் சேர்ந்த அன்றைக்கு அப்பா, என் அலுவலகத்தில் செய்த ஆர்ப்பாட்டம் இருக்கிறதே, இன்றைக்கும் என் ப்யூன் சொல்லிச் சிரிப்பான். எனக்கு மாடியில் ரூம் ஒதுக்கியிருந்தார்கள். அந்த அறையை தரைக்கு மாற்றுமாறு நடு ஆஃபீஸ் ஹாலில் வைத்து என் மேலதிகாரியிடம் கிட்டத்தட்ட காலைப் பிடித்துக்கெஞ்சினார்.

போன வருடம் ஒரு மாநாட்டிற்காக இந்தோனேஷியா போகிற வாய்ப்பு வந்தது. மாடியேறவே விடாத இவர்கள் என்னை விமானம் ஏறவா விடப் போகிறார்கள்? கூடவே கூடாது என்று தடுத்து விட்டார்கள். 'வேணும்ன்னா ரெயில்ல இந்தோனேஷியா போக முடியுமான்னு விசாரியேன்' என்று பாட்டி கிண்டலடித்தது தனிக்கதை.

இப்படியாக எல்லா கண்டங்களிலிருந்தும் என்னை காப்பாற்றியே ஆக வேண்டும் என்று என் அப்பாவும் அம்மாவும் கங்கணம் கட்டிக் கொண்டு செய்த காரியங்களால் தான் நான் இன்றைக்கு நல்ல படியாக இருக்கிறேன் என்பது அவர்களின் நம்பிக்கை. சில சமயம் அதுதான் உண்மையோ என்று எனக்கும் தோன்றுவதுண்டு.

எல்லா நம்பிக்கைகளுக்கும் அர்த்தம் புரிந்தது இன்றைக்குக் காலை. என் வழக்கில் இன்றைக்குத்தான் தீர்ப்பு வந்தது. ஒரு ஐந்து நட்சத்திர ஹோட்டலுக்கு, சட்டம் அனுமதித்த உயரத்திற்கு மேல் இரண்டு மாடிகள் கட்ட அனுமதி வழங்கியது தவறு என்று தீர்ப்பு சொல்லி, எனக்கும், என்னைத் தூண்டிய முன்னாள் அமைச்சருக்கும் இரண்டு வருட சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார்கள். எனக்குப் பணி நீக்க உத்தரவு தரப்பட்டிருப்பதாய் ஒரு கூடுதல் அறிவிப்பும் இருக்கிறதாம். யாரோ சொன்னார்கள். கோர்ட்டின் உயரக் கட்டிடத்தில் இருந்து படிகளில் இறங்கினவாறு கேமிராக்களுக்கு முகத்தை மறைத்துக் கொண்டபோது, இதைப் பார்க்கிற அப்பாவும் அம்மாவும் என்ன நினைப்பார்களோ என்று எண்ணிக் கொண்டேன்.

லாவண்யா



நடக்காத

கடத்தல் :



வரவர மும்பையில், பொல்யூஷனுடன் போட்டி போட்டுக் கொண்டு வேகமாகப் பரவுவது வதந்திகள்தான். அதுவும் அரசியலில் நாளொரு நாடகமும், பொழுதொரு 'கத்து'மாக மண்டிக் கிடக்கையில், எந்த நிமிடம் எந்த செய்தி வரும் என்று யாராலும் ஊகிக்கவே முடியாது.

பாருங்களேன்.. வீரப்பன் ராஜ்குமாரைக் கடத்தினானா.. அதை யாரோ ராஜ் தாக்கரேவைக் கடத்தியதாகக் கதை கட்டிவிட்டு விட்டார்கள். தொடர்ந்த சம்பவங்களை கவனமாகப் படியுங்கள். இதைவிட்டால் வேறு எங்கேயும் இந்த ரிப்போர்ட்டை உங்களால் பார்க்க முடியாதே..!

சிவசேனைத் தொண்டர்களின் காதுகளுக்கு முழுமையாக இந்த செய்தி எட்டு முன்னேயே, பழக்க தோஷம் காரணமாக, இன்னும் திறக்கவே படாத கடைகள் முன் கதவடைக்கச் சொல்லி கல்லெறி. டெர்மினலில் நின்று கொண்டிருந்த பஸ்கள் முன் அவற்றை ஓட விடாமல் மறியல் எல்லாமே ஆரம்பித்துவிட்டார்கள்.

செய்தி பரவியதும், முதலில் பட்டாசு வெடித்தது புஜ்பல்தான். நாலு 'டென் தவுஸண்ட்' சரங்களை சரமாரியாக வெடிக்க விட்டு, அக்கம் பக்கத்தையே உலுக்கிவிட்டார் அவர். சத்தம்கேட்டு, விலாஸ்ராவ் தேஷ்முக் விழுந்தடித்து ஓடி வந்து, "புஜ்பல்... புஜ்பல்... என்ன இருந்தாலும் இப்படி உரக்கச் சந்தோஷிக்கக் கூடாதய்யா! சிவசேனையில் கலக்கம் என்றால் முதல் கல் உம்ம வீட்டை நோக்கித் தான் வரும் என்பதை மறந்துவிடாதீர்" என்று எச்சரித்தார்.

"அதுதான் அப்பவே முன் யோசனையோடு அபு ஆஸ்மியின் மருமகனையும் கிட்நாப் பண்ணி நம்ம கெஸ்ட் ஹவுசில் அடைச்சு வைக்கச் சொல்லியிருக்கேன்.." என்று தோளை குலுக்கினார் புஜ்பல். "அபுவுக்கு மருமகன் இருக்கிறானா என்ன?" என்று அப்பாவியாய் தேஷ்முக் கேட்க, "அட சொந்தமோ அல்லது ஒண்ணு விட்டதோ ரெண்டு விட்டதோ... ஏதோ ஒரு மருமகன் இருக்க மாட்டானா என்ன?" என்று புஜ்பல் அட்டகாசமாகச் சிரித்தார். "ஒழிந்தான் பகைவன். நம்மால் செய்ய முடியாததை வீரப்பன் செய்து காட்டி விட்டான். வாழ்க வீரப்பன். வளர்க அவன் குலம். தாதரில் இருக்கும் தாக்கரேவின் அப்பா சிலையைத் தகர்த்தெறிந்து விட்டு, வீரப்பனின் சிலையை அங்கே வைத்தால் என்ன?" என்று உரக்க சிந்தித்தார்.

அங்கே... மாதோஸ்ரீயில்... பால்தாக்கரேவின் காதில் பெரிய மருமகன் 'ராஜ்'ஜின் கடத்தலைப் பற்றிய செய்தி விழுந்ததும், கொதிப்படைந்தார். "இது புஜ்பலின் வேலைதான். என் மருமகனைக் கடத்தியவனைக் கூட என்னால் மன்னிக்க முடியும். ஆனால் கடத்த வைத்தவனை நாடு கடத்தியே தீருவேன்" என்று ஆவேசப்பட்டார்.

அந்தச் சமயம் பார்த்து வழக்கம்போல், ராஜ் தாக்கரேவிடமிருந்து 'அன்றைய் பொழுதில் என்ன காரணத்துக்காக கலவரம் செய்யலாம்? மும்பையை தாக்கிக் கொண்டிருக்கும் லெப்டோஸ்ராஸிஸ் நோயை எலிகள் வாயிலாக பரவ விட்டுக் கொண்டிருப்பது புஜபல் என்ற பழம் பெருச்சாளிதான்' என்ற காரணம் பொருத்தமாயிருக்குமா என்று ஆலோசனை கேட்க, ஃபோன் செய்தார்.

ராஜ்... ஃபோன் என்றவுடன், தாக்கரே எமோஷனலாகி, "மருமகனே.." என்று ஆரம்பிக்கவும், அந்தப் பக்கம் "கொர்..." என்றது. வதந்திகளால் பிரச்னை பரவி, பலர் 'டெட்'

நாடகம்!



ஆவதைத் தடுக்க, MTNL சுறுசுறுப்பாக எல்லா ஃபோன்களையும் 'டெட்' ஆக்கியிருந்தது.

"ஓ" என்ற அலறலுடன் தாக்கரே சாயவும், ஓடி வந்த டாக்டர்களை ஒதுக்கிவிட்டு, 'ரிலாக்ஸ்... ரிலாக்ஸ் ப்ளீஸ்..." என்று அவரைக் கைத்தாங்கலாக ஏந்திக் கொண்டார், விஷயமறிந்து ஓடி வந்த ராம்ஜெத்மலானி.

இந்த சமயத்தில் அமைதி காக்கும்படி உங்கள் சிஷ்ய கோடிகளை ஆணையிட்டால், உங்கள் 'இமேஜ்' உயரும். வீரப்பன் ஒன்று கிடக்க ஒன்று ஏதாவது கேட்டு வைத்தால், மக்களுக்கு உங்கள் மீது ஒரு அனுதாப அலை உருவாக்கும். அடுத்த எலக்ஷனில் ஜெயிக்க அனுகூலமாக இருக்கும்!"

"ஹாங். ஆனால் என் மருமகனுக்கு ஒன்றும் நேர்ந்துவிடக் கூடாதே?"

"நான் எதற்கு இருக்கிறேன்? 'ராஜ்'ஜைக் கடத்த, மராத்திய அரசுதான் உறுதுணையாக இருந்தது என்ற வீரப்பனை சொல்ல வைத்து, அவன் தரப்பில் வாதாடி, அவனுக்கு சரணாகதியும், 'ராஜ்'ஜிக்கு விடுதலையும் வாங்கித் தருவது என் பொறுப்பு..."

தாக்கரே முகத்தில் புன்னகை மலர்ந்தது. உடனே சிஷ்ய கோடிகளைப் பார்த்து, "நாமெல்லாம் சிவாஜி வழியாக வந்த காந்தி மகானின் வழித் தோன்றல்கள். இந்திரா காந்தி படுகொலைக்குப்பின் நிகழ்ந்த அராஜகங்களுக்கு இந்திரா காந்தியா பொறுப்பு? இந்தக் கடத்தல் உங்கள் மனத்தில் ஒரு கொதிப்பை ஏற்படுத்தினால் அதற்கு நானா பொறுப்பு? ஜெய் ஹிந்த்! ஜெய் மஹா ராஷ்ட்ரா! அமைதியாக இருங்கள்..." என்று கும்பினார்.

இதற்குள் பி.ஜே.பி.க்கும் சிவசேனைக்கு மிடையே வேறு பயங்கரத் தகராறு வெடித்தது.

"ராஜ் தாக்கரே கடத்தப்பட்டதற்கு கண்டனம் தெரிவிக்க வாருங்கள்" என்று வாயில் நின்று கத்திய ராணேவிடம், 'என்னால் இந்த விஷயத்தில் ஒத்துழைக்க முடியாது. ஏனென்றால்...' என்று உண்மையை விளம்ப ஆரம்பிக்குமுன், "ஹாங்... தெரியும்... கடத்தப்பட்டவர் சிவசேனைக்காரராயிற்றே... பி.ஜே.பி.க்காரர்களுக்கென்ன கவலை... உங்கள் சின்ன புத்தி தெரியாதா?' என்று ராணே வீராவேசமாக முழுங்கிவிட்டு, பத்திரிகைக்காரர்களுக்கு பி.ஜே.பி.யின் ஒத்துழையாமை பற்றி அறிக்கை விடப் புயலெனப் பாய்ந்தார்.

முண்டே தன் சகாக்களுடன் தாக்கரேவை சந்தித்து உண்மையை விளக்க, அவர் கடத்தப்பட்டது ராஜ்குமாரா ராஜ்தாக்கரேவா என்ற குழப்பத்தில் படு டென்ஷனாகிவிட்டார்.

தயாராகக் காத்திருந்த ஒரு ப்ரைவேட் டெலிவிஷன் சானல் ரிப்போர்ட்டரிடம், "பாவம் ராஜ்குமார், எங்களுடைய தாதா சாஹேப் பால்கே அவார்டை வேறு பெற்றிருக்கிறார். நிறைய மொழிப் பற்று மிக்கவர். வேண்டுமானால் அவரை விடுவித்துவிட்டு, அவருக்கு பதிலாக எங்கள் இளஞ்சிங்கம் தானைத் தலைவன் ராஜ் தாக்கரேவை பணயக் கைதியாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று பேட்டி கொடுக்க... தொண்டையைக் கனைத்துக் கொண்டபோது... 'விர்'ரென்று நான்கைந்து 'ஜீப்' நிறைய பூனைப்படைகள் வந்து இறங்கின.

"ராஜ் தாக்கரேவுக்கு எந்த ஆபத்துமில்லாமல் பாதுகாப்பளிக்க ஹோம் மினிஸ்ட்ரியிலிருந்து நாங்கள் அனுப்பப்பட்டிருக்கிறோம்."

"மனோகர் ஜோஷி அத்வானிஜியிடம் பேசி... அவர் வாஜ்பேயிஜியிடம் சொல்லி, "அவர் முண்டேவை நெருக்கி... முண்டே புஜ்பாலை அனுகி.. புஜ்பல் எங்களை அனுப்பி வைத்தார்" என்று முடித்தார் சல்யூட் அடித்த அதிகாரி.

"படுபாவி... காரியத்தை கெடுத்தாயே" என்று தாக்கரே மனதுள் நறநறக்க, "ஹீம் உன்னை வெல்ல எனக்குத் தெரியாதா?" என்று கொக்கரித்தார், (டி.வி.யைப் பார்த்துத் தொலைத்த) புஜ்பலும்.

"ஹீம்... வீரப்பனை விட்டு உன்னைக் கடத்தச் சொல்கிறேன் பார்" என மனதுள் கறுவிக் கொண்டார் பால் தாக்கரேவும். "சிவசேனையின் அடுத்த தலைவனாக அவனை உருவாக்குகிறேன்..."

ஆக... நாடகம் அரங்கேறுமுன்னே... சுபம்.

- ஜெயஸ்ரீ ராஜ்

விதை நெல்லை விற்று நாடகம்

அதிகாலை இரண்டுமணி. இருளைப் போல் சூழ்ந்துகிடக்கும் ஊரின் மயான அமைதியைக் குத்திக் கிழிக்கிறது சந்திரமதியின் அழுகுரல்! மகன் லோகிதாசனது பிணத்தை எரியூட்ட முயலும் நேரத்தில், பாய்ந்து தடுக்கிறது ஒரு அதிகாரக் குரல். "கால்பணம், முழம்துண்டு கொடுக்க வசதியில்லை என்று பொய் சொல்கிறாயா கள்ளி? உன் கழுத்திலே தொங்குகிற தாலியை விற்றுக்கொடு" என்கிறான் அங்கே மயானம் காக்கும் அரிச்சந்திரன்.

"எனது கணவனின் கண்களுக்கு மட்டுமே தெரியும் தாலி, உனது கண்களுக்கு எப்படித் தெரிந்தது. நீ யார்?" சந்திரமதி திகைப்புடன் கேட்க...



• மாலி



• சீனிவாசன்

"நான் அயோத்திக்கு அரசனாக இருந்த அரிச்சந்திரன்"

"அய்யோ நாதா! உங்கள் சந்திரமதியைத் தெரியவில்லையா?" - அலறி விழுகிறாள். அழுகிறாள். புரள்கிறாள்.

தலைவிரி கோலமாய்ப் பாடுகிறாள். அது 'கண்டா' ராகம்.

மௌனம் உறைந்து கிடக்கும் அந்த அதிகாலை, சோகத்தை மேலும் உயர்த்திக் காட்ட, அந்தக் காட்சியைப் பார்த்து, அந்த ராகத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் பல ஆயிரம் மக்கள், அழுகிறார்கள்.

காட்சி 2

பின்னணியில் கட்டியக் காரனின் அறிவிப்பு!

ருக்மணி கல்யாணம் நடக்கப் போகிறது.

அளவான தாளம், நீண்டு, குறைந்து, குதித்துத் திரும்பும் சுரங்களை, பின்னணியில் வாய்ப்பாட்டு கலைஞர் இசைக்க, தில்லானா ஆட்டத்தை வெளிப்படுத்துகிறாள்(ன்) ருக்மணி. ருக்மணி வேடத்தில் இருந்த ஆண் கலைஞர் தில்லானாவில் சுழன்று சுழன்று வெளுத்துக் கட்ட, பார்வையாளர்கள் விழி விரியப் பார்க்கிறார்கள்.

தியாகராஜர் உற்சவம் என்றால் திருவையாறு எப்படியோ அப்படித்தான் 'பாகவதமேளா' என்றதும் மெலட்டூர் கிராமம் நினைவுகளில் மோதும். நானூறு வருடப் பாரம்பரியமாக, இங்கே ஆண்டுதோறும் நடத்தப்படும் பாகவதமேளா நாட்டிய நாடகங்களுக்கு, உள்நாட்டில் மட்டுமல்ல, உலகம் தழுவிய ரசிகர்கள் உண்டு. நாட்டியத்திலும் இசையிலும், தனக்கென்று தனிப் பாணியை தொடர்ந்து பின்பற்றி



• ருக்மணி கல்யாணத்தின் இறுதிக் காட்சி

வரும் பாகவத மேளாவை, தலைமுறை, தலைமுறையாய்ப் பதியம் போட்டுவரும் மெலட்டூரின் இன்றைய முகம் எப்படி இருக்கிறது?

தஞ்சையிலிருந்து இருபத்தைந்து கிலோ மீட்டர் தூரத்திலிருக்கும் இந்த ஊருக்கு, அரசு டவுன்பஸ் நம்மை அழைத்துப் போகிறது. பசுமை போர்த்திக் கொண்டிருந்த இந்த கிராமத்தில் விவசாயமே எல்லாம். விவசாயத் தொழிலாளர்கள், பிற்படுத்தப் பட்ட மக்கள், பிராமணர்கள் என்று தனித்தனியே கிராமத்து வாசனையோடு குடியிருப்புகள். மிகப் பழமையான வைணவ ஆலயத்தில் உன்னதபுரீஸ்வரராக பெருமாள் கோவில் கொண்டிருக்க, ஆலயத்தைச் சுற்றி அக்கிரஹாரங்கள்.

மெலட்டூர் கிராம மக்களும், நடனக் கலைஞர்களும் 'மாலி' என்று செல்லமாக அழைக்கும் பரதம்மகாலிங்கத்தைச் சந்தித்தோம். பாகவத மேளாவைச் சொந்தச் செலவில் பாதுகாத்துவரும் இவர் நடப்பு தலைமுறையில் முக்கியமானவர்.

பதினேழாம் நூற்றாண்டில்தான் 'பாகவத மேளா' என்ற சொல் வழக்கிற்கு வந்திருக்கிறது. பரதம் நடேச அய்யர்தான் இந்த கலையைக் காப்பாற்றி மறுமலர்ச்சி அடையச் செய்தவர். இவர் மெலட்டூரில் வாழ்ந்த மிராசுதாரர். இசை, நடனம் இரண்டிலும் இவர் வல்லவரும்கூட. நூறு வருடங்களுக்கு முன்பு, சாலியமங்கலம், ஊத்துக்காடு, சூலமங்கலம், மன்னார்குடி போன்ற ஊர்களிலும் பாகவத மேளா நடந்துள்ளது. காலப் போக்கில் அங்கெல்லாம் வழக்கொழிந்து மெலட்டூரில் மட்டும் வாழ்ந்து கொண்டிருக்கிறது." என்ற மகாலிங்கம், இன்று பாகவத மேளாவில் நிகழ்ந்திருக்கும் நிகழ்ந்து வரும் மாற்றங்கள் குறித்துச் சொல்கிறார்.

"ஒரே குழுவாக இருந்த பாகவதமேளா இன்று இரண்டு குழுக்களாகப் பிரிந்துவிட்டது. பாலு பாகவதரின் சீடர்களான நானும், நடராஜன் என்பவரும், இரு குழுக்களாக இருந்து நடத்தி வருகிறோம். மெலட்டூர் வெங்கட்ராம சாஸ்த்ரிகள் தெலுங்கு மொழியில் எழுதிய பதிமூன்று நாடகங்களின் இருநூற்று ஐம்பது வருட சுவடிதான் எங்களது ஸ்கிரிப்ட். ஆரம்பத்தில் பதிமூன்று நாடகங்களும் நடத்தப்பட்டன. ஆனால் இப்போது ஒரு நாடகத்தை நடத்த குறைந்தது முப்பதாயிரம் ரூபாய் செலவாகிறது. எனவே நாடகங்களைப் பாதியாக குறைத்துவிட்டோம். பிரகலாதன் சரித்திரம், ஹரிச்சந்திரா, ருக்மணி கல்யாணம், பார்வதி கல்யாணம், மார்கண்டேயன், சீதா கல்யாணம்



• ஆண் கலைஞர்கள் பெண்களாக



• மெலட்டூர் அக்ரஹாரம்

பழமையான ராகங்களை, அலங்காரம் இல்லாமல் மெலட்டூர் ஸ்டைல் மெருகுடன் கேட்க வேண்டுமானால் அதற்கும் மெலட்டூர்தான் ஒரே சாய்ஸ் என்கிறார்கள். பரதத்தில் தில்லானா என்ற விஷயத்தை உருவாக்கிய பாகவத மேளா வின் தாத்பர்யம் ஸ்ரீ நரசிம்ம ஜெயந்திதான் என்கிறார் தெலுங்கு புலவராக இருக்கும் பாகவதமேளாவின் பின் பாட்டு இசைக் கலைஞர் என்.விவிஸ்வநாதன்.

நரசிம்ம ஜெயந்திக்கு நடித்தல், பாடுதல் என்பது வழிபாடாகத் தொடங்கியது. பிரகலாதன் கதையை அன்று கீர்த்தனை களாகப் பாடி வழிபட்டதே பின்னாளில் பாகவத மேளாவாக உருவாகிவிட்டது'' என்றவர் "பிராமணர்கள் மட்டுமே இதில் நடிகர்களாக இருக்கிறார்கள். அதிலும் பெண்கள் நடிப்பதற்கு ஆரம்பத்திலிருந்து அனுமதியில்லை." என்கிறார். ஆனால் மாலி ஐயர், "இந்தக் கலையை அழியாமல் பாது காக்க வேண்டுமானால் மற்ற சமுகத்தைச்

ஆகிய நாடகங்கள்தான் இப்போது நடத்த முடிகிறது" என்கிறார்.

ரேவதி ராமச்சந்திரன் போன்ற ஒருசில முன்னணி நடனக் கலைஞர்கள் பின் பற்றி ஆடும் மெலட்டூர் பாணி பரதத்தைப் பார்க்க மெலட்டூரைவிட்டால் வேறு இடம் இல்லை என்கிறார்கள். அதேபோல கண்டா, தேவகாந்தாரி, மாஞ்சி போன்ற

ஜெயித்தது கொடுவேரி கட்சி!

கொடுவேரியின் கோபக் கடிதம் குறித்து வாசகர்கள் என்ன நினைக் கிறார்கள் என்று கேட்டிருந்தோம். (கல்கி 16.7.2000) ஏகப்பட்ட வாசகர்கள் தங்கள் கருத்தைத் தெரிவித்து எங் களைத் திக்குமுக் காட வைத்துவிட் டனர். பெரும் பான்மை ஆதரவு கொடுவேரிக்கே!



அபிப்ராயச் சீட்டு அனுப்பிய வாசகர்களுள் பத்து பேருக்கு அமரர் கல்கியின் 'மூன்று மாதம் கடுங்காவல்' என்ற நூல் பரி சாக அனுப்பப்படுகிறது. குலுக்கல் முறை யில் தேர்வான அந்த பத்து பேர் :

1. எஸ். ராஜாமணி, சென்னை - 88.
2. டி.பி. நடராஜன், லால்குடி.
3. இர. சுந்தரராஜன், நெய்வேலி.
4. என்.ஏ. தாஸ், சென்னை - 1.
5. டி. ராமச்சந்திரன், சுசீந்தரம்.
6. சுஜாதா மன்னாயி, சிதம்பரம்.
7. சு. முருகையன், திருப்பத்தூர்.
8. ப்ரீதா ரங்கஸ்வாமி, மதுரை.
9. எஸ்.பி. காசி விஸ்வநாதன், கோவை.
10. இராமச்சந்திரன், கரூர்.

சேர்ந்தவர்களையும் நடிகர்களாக்க வேண்டும். ஏனென்றால் இன்றைய பொருளாதார சூழ்நிலையில் எல்லோரும் புலம் பெயர்ந்து போய்விட்டார்கள். பாரம்பரியத்தைக் காரணம் காட்டி, கண்முன் ஒரு கலை அழிந்து போவதைப் பார்த்துக் கொண்டிருக்கக் கூடாது'' என்கிறார். கடந்த மே மாதம் பாகவத மேளா தொடங்கிய போது நாடக மேடை தீப்பிடித்து எரிந்து, ரூபாய் மூன்று லட்சம் மதிப்புள்ள அரங்கப் பொருட்களும், உடைகளும் சாம்பலாகி போய்விட, பத்துநாள் இடைவெளியில் பிச்சை எடுக்காத குறையாக, இங்கே அங்கே கையேந்தி, விதை நெல்லை விற்று மீண்டும் நடத்தியிருக்கிறார்கள்.

கோவிலுக்கு எதிரில் நடந்து கொண்டிருந்த பாகவதமேளா - இப்போது தனியிடத்தில் நடக்கிறது. காலமாற்றத்திற்கு ஏற்ப, பான்கேக் மேக்கப், புதிய உடைகள், விதவிதமான வண்ண விளக்குகள் என்று தொழில் நுட்ப மாற்றங்கள் வந்து விட்டன.

''ஆனாலும் என்ன செய்ய? 'பாகவத மேளாவை விளம்பரப்படுத்த அரசுக்கு நேரம் இல்லை. ஸ்பான்ஸர்கள் கிடைப்பதில்லை. தமிழ், மராத்தி, சமஸ்கிருதம், தெலுங்கு என்று நான்கு மொழிகளில் நடந்துவந்த பாகவதமேளா இன்று ஒரே மொழியோடு சுருங்கிவிட்டது. இதுவும் காப்பாற்றப்பட வேண்டும் என்றால் அரசுதான் உதவ வேண்டும். ஓலைச் சுவடியாகவே இருக்கும் நாடகங்களைப் புத்தகமாக வெளியிட வேண்டும்'' என்கிறார் பாகவதமேளா நாடகங்களில் இரண்டை, தமிழ் உரையுடன் வெளியிட்டிருக்கும் சீனிவாசன்.

''எத்தனைத் தடவை பார்த்தாலும் எங்களுக்குச் சலிப்பே வர்றதில்லே. பாகவத மேளா தொடங்கிட்டுன்னா, வெளியூர் காரங்க, வெளிநாட்டுக் காரங்கன்னு குவிஞ்சுடுவாங்க, ஊரே பெரிய திருவிழாவுக்குத் தயாராயிடும். மெலட்டூர்க்காரன்னு சொல்லிக்கிறதையே பெருமையாக நினைக்கிறோம்'' என்கிறார். இங்கே டீ கடை வைத்திருக்கும் சிவராமகிருஷ்ணன்.

இனம், மதம், மொழி கடந்ததுதான் கலை. அது இந்த டீக்கடைக்காரருக்குப் புரிந்திருப்பது போல எல்லோருக்கும் புரிந்தால் ஒரு கலை அழிவதைத் தடுத்து நிறுத்திவிட முடியும்.

- ஆர். சி. ஜெயந்தன்

படங்கள் : வெங்கடேஷ்

உங்களது கம்பெனியின் Notice boardல் 'The meeting has been put off'ன்னு எழுதியிருக்காங்க. இதன் அர்த்தம் என்ன?

'Meeting'ன்னா கூட்டம்.

'Put off'ன்னா...?

தவிர்க்க முடியாத காரணங்களால கூட்டம் அல்லது போட்டிகள் ஒத்தி வைக்கப்படுவதுண்டு. இது போன்று ஒரு நிகழ்ச்சி ஒத்தி வைக்கப்படுவதை 'postpone' என்று சொல்வதுண்டு.

இந்த postpone ஐத்தான் 'put off' என்று குறிப்பிடுவது வழக்கம்.

'The meeting has been put off' என்றால் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று அர்த்தம்.

இன்னொரு விஷயத்தையும் note பண்ணிக்குங்க. Put offங்கற வார்த்தைக்கு பதிலா 'put back'ங்கறதையும் use பண்ணலாம்.



ஆங்கிலமே அருகில் வா!



The meeting has been put back to next Saturday.

கூட்டம் அடுத்த சனிக்கிழமைக்கு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

தள்ளிப் போடு அதாவது ஒத்தி வைங்கறதை இங்கிலீஷ்ல சொல்லணும்னா, postpone, put off, put back இவைகள்ள எதை வேணும்னாலும் use பண்ணலாம்.

Bring'ன்னா கொண்டு வான்னு அர்த்தம்.

Bring that bag here –அந்தப் பையை இங்கே கொண்டு வா.

Bring some water – கொஞ்சம் தண்ணீர் கொண்டு வா.

வி. ராஜகோபாலன்



நம்ம லக் எப்படி?

வாடிக்கையாளர்களை ஈர்க்க ஒவ்வொரு நிறுவனமும் ஏதாவது ஒரு உத்தியைக் கையாண்டு வருகிறது. சென்னையில் கிளையைத் திறந்திருக்கும் 'ஷாப்பர்ஸ் ஸ்டாப்' நிறுவனம், மும்பை வாடிக்கையாளர்கள் மூன்று ஜோடிகளுக்குக் கடந்த வருடம் செய்தது என்ன தெரியுமா?

- ஒரு தம்பதி மும்பையிலிருந்து ஹெலிகாப்டரில் கோவா சென்று வர ஏற்பாடு.
- இன்னொரு ஜோடி காலை முதல் இரவு வரை மும்பையின் எந்த சந்து பொந்தெல்லாம் போக வேண்டுமோ, அங்கெல்லாம் செல்லலாம். இதற்காக டிரைவர் சகிதம் வெளிநாட்டு சொகுசு கார் ஒன்று.
- ஒரு தியேட்டர் முழுக்க ரிசர்வ் செய்து, ஒரு ஜோடி தாம் விரும்பிய படத்தை அவர்கள் இருவர் மட்டும் பார்த்து ரசிக்க ஏற்பாடு செய்யப்பட்டது!
- இந்த ஆண்டு சென்னை வாடிக்கையாளர்களுக்கு! இவர்கள் லக் எப்படியோ?

— கௌதம்

ஆனா .... இந்த bringங்கற வார்த்தைக்கு இன்னொரு அர்த்தமும் உண்டு.

வர வர உன்னோட நடவடிக்கை எதுவும் சரியில்லை. நாளைக்கு உங்க அப்பாவை அழைச்சுக்கிட்டு வா.

அவர்கிட்ட பேசிக்கிறேன்.

'அழைச்சுக்கிட்டு வா'ங்கறதை இங்கிலீஷ்ல எப்படிச் சொல்றது?

ரொம்பவும் simple.

Bringங்கற வார்த்தையை use பண்ணினாப் போதும்.

Bring your father tomorrow.

நாளைக்கு உங்க அப்பாவை அழைச்சுக்கிட்டு வா.

என்ன ஸார் இது அநியாயமா இருக்கு.

Bringனா கொண்டு வா'ன்னு சொல்றீங்க. இதே வார்த்தையை அழைச்சுக்கிட்டு வா'ன்னு சொல்றதுக்கும் use பண்ணலாம்னு சொல்றீங்களே. குழப்பமா இருக்கேன்னு நீங்க நினைக்கலாம்.

'Bring' இந்த வார்த்தைக்குப் பக்கத்துல என்ன பொருள் இருக்கோ அதைக் கொண்டு வாங்க.

'Bring' பக்கத்துல ஆட்கள் (நபர்கள்) இருந்தால் அவங்களை அழைச்சுக்கிட்டு வாங்க. என்ன புரியலையா?

Bring the notebook னா அந்த நோட்டுப் புத்தகத்தைக் கொண்டு வா'ன்னு அர்த்தம்.

Bring your brotherனா உன்னோட சகோதரனை அழைச்சுக்கிட்டு வா'ன்னு அர்த்தம்.

இலேசா புரிய ஆரம்பிச்சுடுச்சு இல்ல? சரி, இப்போ சில வாக்கியங்களைச் சொல்றேன். எல்லாத்தையும் டக்டக்னு இங்கிலீஷ்ல சொல்லுங்க பார்க்கலாம்.

புதுசா கல்யாணம் ஆன உங்க நண்பர்கிட்ட 'ஒருநாள் உன்னோட wifeஐ எங்க வீட்டுக்கு அழைச்சுக்கிட்டு வா'ன்னு எப்படிச் சொல்வீங்க?

ஸார்... நாளைக்கு நான் என்னோட அப்பாவை அழைச்சுக்கிட்டு வரேன்'னு எப்படிச் சொல்வீங்க?

'உன்னோட wifeஐ ஒரு நாள் அழைச்சுக்கிட்டு வா' என்பதை

Bring your wife along with you onedayன்னு சொல்லுங்க.

'ஸார், நாளைக்கு என்னோட அப்பாவை அழைச்சுக்கிட்டு வரேன்' என்பதை

'Sir, I will bring my father tomorrow'ன்னு சொல்லுங்க.

இப்போ 'bring'ங்கற வார்த்தையை எப்படி use பண்ணணும்னு உங்களுக்குத் தெளிவா புரிஞ்சிருக்கும்'னு நெனைக்கிறேன்.

மத்த விஷயங்களை அடுத்த வாரம் பார்க்கலாம்.

(தொடரும்)

அலை உறங்கும் கடல் 2

வீட்டு வாசலில் குதிரை வண்டி நிற்பதைப் பார்த்ததும், இந்த நேரத்தில் பாட்டி எங்கே கிளம்பிக் கொண்டிருக்கிறாள் என்று உமாவுக்குக் குழப்பமாக இருந்தது. தெற்கு ரத வீதியில் அவளைத் தவிர யாரும் குதிரை வண்டியில் பயணஞ் செய்ய விரும்புவதில்லை. ரயில்வே ஸ்டேஷனில் அணிவகுத்துக் கொண்டிருந்த குதிரை வண்டிகளின் இடத்தை டீசல் ஆட்டோக்கள் பிடித்துக் கொண்ட பிறகு, புரவிகள் சவுக்குத் தோப்பில் அவிழ்த்து விடப்பட்டு, வண்டிக்காரர்கள் வழிகாட்டிகள் சங்கத்தில் இணைந்து கொண்டு வருஷம் பலவாயிற்று. தொழில் மாற்றம் விரும்பாத ஓரிரு வண்டிக்காரர்கள் மட்டும் பள்ளிப் பிள்ளைகளுக்கென்றும் நீலுப்பாட்டியையொத்த பிற ஆட்டோ எதிர்ப்பாளர்களுக்கென்றும் அகன்ற நான்கு ரதவீதிகளை வலம் வந்து கொண்டிருந்தனர், காற்றைச் சுமந்து கொண்டு.

பாட்டியின் குதிரை வண்டி மோகம், அதன் வாடகைக் குறைச்சலுக்காக மட்டுமல்ல. தன் வேர்களின் உறுதிப்பாட்டை, பாட்டி குதிரை வண்டியில் பயணம் செய்வதன் மூலமே நிச்சயப்படுத்திக் கொள்வது போலத் தோன்றும் உமாவுக்கு.

''எங்கடீ போய்த் தொலைஞ்சே?'' என்றாள் பாட்டி, வாசலில் அவளைக் கண்டதும்.

''தங்கச்சி மடத்துக்கு, பொற்கொடி வீட்டு வரைக்கும் போயிட்டு வரேன்னு சொல்லிட்டுத்தானே போனேன்?'' என்றாள் உமா.

இருளிலும் ஊடுருவும் ஆந்தையின் தணல் சுமந்த விழிகள் பாட்டியுடையவை. தன் முகத்தில் படர்ந்திருந்த கவலையை அவள் படித்து விடக் கூடாதென்று கவனமாக வேறொரு முகத்தை எடுத்து மேலாக அணிந்து கொண்டு பதில் சொன்னாள். இனி அருள்தாஸை முழுசாகப் பார்க்கிற வரை உடலெங்கும் பரவி தடதடக்கும் பய அதிர்வை நிறுத்தி வைக்க முடியாது



பா. ராகவன்

போலிருந்தது அவளுக்கு.

"உங்கப்பன் கிளம்பி திருப்புல்லாணி வரைக்கும் போயிருக்கான். விடிஞ்சுதான் வருவேன்னான். தனியா எத்தனை நாழி நான் கொட்டு கொட்டுனு உட்கார்ந்திருப்பேன்?"

பாட்டியின் திட்டம் இன்னதென்று அவளுக்குப் புரியவில்லை. இருட்டி மணி ஏழானால் படுத்து விடுபவள் அவள். ஓரிரு மணி நேரங்களுக்குள் தன் முதல் கனவில் உரையாடவோ, அலறிக் கொண்டு ஓடவோ, புன்னகைக்கவோ தொடங்கும் போது அவளும் அப்பாவும் இராச்சாப்பாட்டின் இறுதிக் கட்டத்தில் இருப்பார்கள்.

"பாரேன், கிழம் தனக்குத்தானே தினம் பயாஸ்கோப் காட்டிண்டிருக்கு" என்பார் அவள் அப்பா.

உண்மையில் நீலுப்பாட்டி கனவு களில் மட்டுமே விழித்திருந்தும் வெளிச்சம்மிக்க பகல் போதுகளில் நடமாடிக் கொண்டே உறங்குவதா கவும் உமாவுக்குத் தோன்றும்.

தொன்மமும் அமானுஷ்ய மும் இனி வரப்போவது பற்றி யதான முன்னறிவிப்புகளும் கலந்து புலனாகும் தன் கனவுகளின் சில பகுதி களை எப்போதாவது





சரிதான்!

சின்னிஜெயந்தின் 'உனக்காக மட்டும்' படத்தில் அறிமுகமாகியிருக்கும் ஆதித்யா இந்தப் படத்திற்குப் ஃபைனான்ஸ் செய்திருப்பதாக பேச்சு அடிபட்டது. அது உண்மை இல்லையாம். படத்தின் கோவை ஏரியாவை இவரே வாங்கி ரிலீஸ் செய் திருக்கிறாராம். என்ன இப்படி? என்றால் 'முதன்முதலா படத்துல நடிக்க வாய்ப்புக் கொடுத்திருக்கிறாரு. அதுக்கு இது கூட பண்ணலன்னா எப்படி?'' என்கிறார். சரிதான்!

– ராம்

பாட்டி அவனிடம் வெளிப்படுத்துவது வழக்கம். அந்தருணங்களில் அவள் குரலில் ஒரு ரகசியத் தன்மை ஏறி விடும். விழிகள் மேலும் இடுங்கிப் பளபளத்து மின்னும். அடிக்கடி, வேறு யாரும் கேட்கிறார்களா என்கிற பாவனையில் சுற்று முற்றும் பார்த்தபடி அவனது கைகளைப் பற்றிக் கொண்டு ஒரு காதுக்கு மட்டுமே கேட்கிற தொனியில் விவரிப்பாள்.

உமாவுக்குப் பாட்டியின் கனவுகளின்பால் அச்சமுடன் கூடிய நம்பிக்கை இருந்தது. ஆவேசம் வந்தவன் போல் இரவுகளில் அவன் காற்றுடன் துவந்த யுத்தம் செய்கிற காட்சியை அவள் பலமுறை கண்டிருக்கிறாள். மறுநாள் அல்லது தொடர்வதான நாட்களொன்றில் அந்த துவந்த யுத்தத்தைத்தான் யாருடன் நிகழ்த்தினேன் என்பது பற்றி நீலுப்பாட்டி சொல்லுவாள். அநேகமாக அது அழிந்த அரக்கர் குலத்தின் கடைசிச் சந்ததியினரில் ஒருவராயிருக்கும்.

பாட்டியின் கனவுகளில் அடிக்கடி வருபவள் சூர்ப்பணகை. அவள் வந்த மறுதினம் ஏதாவதொரு அசம்பாவிதம் நிச்சயம் நடக்குமென்பாள் அவள்.

''உன் மேல நான் ஆசைப்படறேன்னு ஒரு பொண்ணு வெட்கத்தைவிட்டு வெளிப்படையா சொல்றது உயிரை வெளில எடுத்துச் கண்டு விரல் முனைல நிக்கவெச்சுண்டு பேசறதுக்குச் சமானம். போமா சரிதான்னு அதுக்கு ஆம்பளை பதில் சொல்லி விட்டான்னா, அந்த க்ஷணம் பிராணன் போயிடும். மனுஷப் பிறவியாயிருந்தா என்ன? ராட்சஸப் பிறவியானாத்தான் என்ன? பொண்ணு இல்லியோ அவ? அவளுக்கு அறுபட்டது மூக்கில்லே; மூச்சு! ஆறுமா அவ ஆத்மா? அதான், என் பிராணனை வாங்கறா. ஜென்மாந்தரத்துல நான் சபரியா இருந்தேனாம்! மானசிகமா ராமனைப் பிள்ளையா சுவீகரிச்சுண்டேனாம். அதான், வந்து வந்து, விட்டேனா பார் உன் பிள்ளையோட வம்சத்தைங்கறா...''

சற்றும் தடங்கலோ, சங்கடமோ, நம்பகத்தன்மை பற்றிய சந்தேகமோ துளியுமற்றுத் தன் கனவை விவரித்துக் கொண்டே போவாள் நீலுப் பாட்டி.

ஒற்றைப் பனைமரத்தின் உச்சியில் அமர்ந்திருக்கும் ஃப்ளாமிங்கோ பறவை, பிரும்மஹத்திதோஷ நிவிர்த்தி தீர்த்தத்தின் நடுவே முளைத்து நிற்கும் சப்பாத்திக் கள்ளி புதர், கந்தமாதன பருவதத்தைச் சுற்றிய அக்னி வேலி எனச் சில நிமித்தக் குறியீடுகளைப் பாட்டி தன் கனவுகளில் கண்டதாகச் சொல்லுவாள். விரைவில் நடக்கவிருக்கிற அசம்பாவிதம் பற்றிய சமிக்ஞை அதுவென அச்சமுடன் விவரிப்பாள்.

அம்மா இறப்பதற்குப் பத்து நாட்கள் முன்பு நீலுப் பாட்டி அதைத் தன் கனவில் கண்டு சொன்ன கணம் அவளுக்கு நினைவுக்கு வந்தது.

''மனசைத் தேத்திக்கோ குட்டி. இனிமே நீதான் இந்த வீட்டுத் தூணா இருக்கப் போறே. நேத்திக்கு ஒரு கனா. உங்கம்மா ஒரு பெரிய்ய சங்குக்குள்ள வீடு கட்டி கிரகப் பிரவேசம் பண்ணிண்டு போகற மாதிரி. சமுத்திரத்து நடுல உட்கார்ந்து சத்ருக்னன் அவளுக்குப் பண்ணி வெக்கறான்...''

அதிர்ந்து விட்டாள் உமாதேவி. ஒரு வாரம் பேச்சு வரவில்லை அவளுக்கு. அம்மாவைப் பார்க்கும்போதெல்லாம் தொண்டை அடைக்கும். இருக்காது, இருக்காது

என்று தனக்குத்தானே சொல்லிக் கொண்டாள். பாட்டியை ஆத்திரம் தீராமல் மானசீகமாகத் திட்டித் தீர்த்தாள். 'போயேன் நீதான் அம்மாவுக்குப் பதிலா – கிரகப்பிரவேசம் பண்ணிண்டு' என்று கூடப் பொறுக்க மாட்டாமல் தனக்குள் கதறினாள்.

ஆனால், நீலுப்பாட்டியின் கனவு என்று பொய்த்திருக்கிறது? உறங்குவது போலும் சாக்காடென்பதை அம்மா தன் உறக்கத்திலிருந்து ஒருநாள் எழாததன் மூலமே நிரூபித்து விட்டாள். ஒரு நோய் இல்லை, உடம்பில்லை, வலியில்லை.

அப்போதும் பாட்டி அச்சமுடன் அவளைத் தனியே அழைத்துச் சொன்னாள் : "எனக்குத் தெரியும், இது ஆகும்னு. நேத்திக்கு மறுபடியும் கனா. அந்த ராட்சஸி வந்து சிரிச்சுட்டுப் போனா."

"மனசு வேற சரியில்லேடி உமா. முராரி பாபா வந்திருக்காராம், அகமதாபாதுலேருந்து. கைலாஷ் ஆசிரமம் ஜேஜேன்னு ஒரே கூட்டமா இருக்காம். ராமாயணம் ஆரம்பிக்கறார் இன்னிக்கு. அதான் போயிட்டு வரலாம்னு கிளம்பினேன். உன்னைக் காணலியேன்னுதான் காத்துண்டிருந்தேன்" என்றாள் பாட்டி.

உமா ஒருகணம் யோசித்தாள். பாட்டி கதை கேட்கப் போனால், திரும்பி வர இரவு பத்தாகி விடும். அப்பாவுமில்லாமல் அதுவரை தனியாக வீட்டிலிருந்தால், குருட்டு யோசனைகளிலேயே தான் பொழுதைக் கழிக்க நேரிடுமென நினைத்தாள்.

"நானும் வரேன் பாட்டி" என்று வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பிவிட்டாள்.

வருடமொருமுறை குஜராத்திலிருந்து வருபவர் முராரி பாபா. விழியில் கனிவும் விரலிடுக்கில் ஜெபமாலையும் உதடுகளில் ராமநாமமுமாக ஒரு வாரம் சங்குமால் கிராமத்து கைலாஷ் ஆசிரமத்தில் தங்கியிருப்பார். அவரைப் பாட்டிக்குத் தனிப்பட்ட முறையிலேயே தெரியும். கண்ணில் பட்டதும் சௌக்கியம் விசாரிக்கிற அளவுக்குப் பரிச்சயம் ஏற்படுத்திக் கொண்டிருந்தாள். ராமநாமம் ஜெபிப்பவருக்கு, ஆதியுகத்துச் சபரியுடன் பழக்கமிருப்பதில் வியப்பதற்கொன்றுமில்லை என்று தமாஷாக எண்ணிச் சிரிப்பாள் உமாதேவி.

குதிரை வண்டி, அக்னி தீர்த்தத் திருப்பத்தில் சங்கர மடம் தாண்டி தமிழ்நாடு ஓட்டலின் பின்புறச் சாலையில் ஓடிக் கொண்டிருந்தது. இரவின் அமைதியைக் கடலின் அமைதி மேலும் அதிகப்படுத்தியிருந்தது. சற்று நேரம் இருவரும் பேசிக் கொள்ளவில்லை. அருள்தாஸுக்கு ஏதும் நேர்ந்திருக்கக் கூடாதே என்கிற நினைவைத் தவிர அவளுக்கு வேறில்லை. விடிந்ததும் வேர்க்கோடு போய் வர வேண்டுமென்று எண்ணிக் கொண்டாள். அவனைப் பார்த்து விட்டால் அந்தோணியாருக்கொரு மெழுகுவர்த்தியென்றும் நேர்ந்து கொண்டாள்.

கைலாஷ் ஆசிரமம் ஒளிவெள்ளத்திலிருந்தது, முப்பதடி தூரத்திலிருந்தே தெரிந்தது.

''வந்தாச்சு பாட்டி'' என்று அவள் திரும்பவும், அதற்குள் பாட்டி உறங்கி விட்டாற்போலக் கண்டவள், அவளைத் தொட்டு, ''பாட்டி?'' என்றாள் மறுபடியும்.

''ம்?'' என்றவள், ''அதுக்குள்ள அசந்துட்டேனா! என்ன உடம்போ, என்ன வயசோ!'' என்று தனக்குத் தானே அலுத்துக் கொண்டாள்.

ஆசிரம வாசலில் வண்டி நின்றது. உட்புறமிருந்து பஜனை சப்தம் கேட்டது. ராமபஜன். ஜல் ஜல் என்கிற ஒலியும், ஒரு குரலாக மாறிய நூறு




''ஆபீஸ் கோஷ்டி பூசல்லயெல்லாம் சேராதீங்கன்னு என் கணவர் கிட்ட படிச்சுப்படிச்சு சொன்னேன், கேட்டாத்தானே...''

''ஏன் என்னாச்சு?''

''சாயந்திரம் அவரை யாரும் எழுப்பிவிடாம வாசலையும் பூட்டிக்கிட்டுப் போயிட்டாங்க!''

– வே. செந்தில் குமார்



''அவன் ஏன் இப்படி உடம்பெல்லாம் தார் பூசிக்கிட்டுத் திரியறான்?....''
''கேட்டா, 'கறுப்புத்தான் எனக்குப் பிடிச்ச கலரு...'ன்னு பாட்டுப் பாடறான்!''

— தஞ்சை தாமு

குரல்களில் இசை வடிவமும் காற்றில் ஏறித் தவழ்ந்து வந்து வெளியில் வியாபித்தது.

''கதை இன்னும் ஆரம்பிக்கலை போலிருக்கு'' என்றாள் உமா.

"எட்டு மணி ஆயிடுமே எப்பவும்?" என்றவாறு பாட்டி மெல்ல இறங்கினாள். உமா அவள் தோளைப் பிடித்துக் கொண்டாள்.

ஒரு பூந்தொட்டி போலச் சிறிதாகவும் கவர்ச்சியாகவுமிருந்தது ஆசிரமம். வருடமொருமுறை வருகிற முராரி பாபா. ஆனால் தினமும் நடக்கிறது, அன்னதானம், பாராயணம் இத்யாதி.

"தெரிஞ்சுக்கோடி உமா. ராமேஸ்வரம் இன்னும் மூழ்காம கடலுக்கு மேல மிதந் துண்டிருக்குன்னா, அதுக்குக் காரணம் இங்க யாராவது பண்ணிண்டிருக்கற ராமநாம ஜபம்தான். அது நின்னுடுத்தோ, அவ்ளோதான். சமுத்திர தேவதை ரொம்ப நாளா பசியெடுத்துக் காத் துண்டிருக்கா'' என்றாள் நீலுப் பாட்டி.

"சும்மாரு பாட்டி. நல்ல வார்த்தை ஒண்ணாவது நீ சொல்லிருக்கியா எப்பவாச்சும்? எப்பப்பாரு அழிஞ்சுடும், போயிடும், மூழ்கிடும், வத்திடும், உருப்படாது, பாவம், சாபம்...''

உமாவை உற்றுப் பார்த்தாள் பாட்டி.

''நான் என்னடி பண்ணட்டும். பகவான் என்னை ஊழிக்கு உடுக்கை அடிக்கற பிறவியா படைச்சுட்டானே?'' என்றாள் பரிதாபமாக.

இந்தக் கணம் அவளைத் தொடர்ந்து பேச விட்டால், அவள் நாவில் உதித்து உதிரும் எந்தச் சொல்லும் தன்னைக் கலவரம் கொள்ளச் செய்வதாக அமைந்து விடக்கூடுமென எண்ணி, மேற்கொண்டு பேசாமல் உள்ளே போனாள் உமா.

எதையும் எண்ணியபடி தவிர்த்துவிட முடியவில்லை எப்போதும். கருவிகளை மாற்றிக் கொண்டேனும் காரியம் தன்னை நிகழ்த்திக் கொண்டு விடுகிறது.


ராமாயணம் தொடங்கிய பதினைந்து நிமிடங்களில் அந்தப் பக்கமாகப் பரபரவென ஓடிய ஓலைக் குடா, சங்குமால் கிராமத்து மீனவர்கள், அவளைச் சில மணி நேரங்களாகச் சஞ்சலப்படுத்திக் கொண்டிருந்த சந்தேகத்தை உறுதிப்படுத்தி விட்டுச் சென்றனர்.

நம்புமாரீஸ்வரனையும் அருண்தாஸையும் இலங்கைக் கடற்படை அதிகாரிகள் கைது செய்து கொண்டு போய்விட்டார்கள்.

சமுத்திர தேவதையின் பசி இப்போது மிகாதா என்றிருந்தது அவளுக்கு.

(தொடரும்)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்



தத்துவ ஞானி வேதாத்திரி மகரிஷி அவர்களின் 90-ஆவது பிறந்த நாள் விழா – உலக அமைதி தின விழா

இடம் : அறிவுத் திருக்கோயில், அருட்பெருஞ்சோதி நகர், ஆழியாறு – பொள்ளாச்சி.

நாள் : 12.08.2000 – 14.08.2000

உலக சமய ஆண்டு – 15

மனித மேம்பாட்டுக்கான சாதனை மார்க்கம்

தனிமனிதனின் உடல்நலம், மன வளம், குடும்ப வாழ்வில் இனிய உறவு, கடமை உணர்வு எந்த சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்படாமல் பொறுமை காத்து சமுதாய மேம்பாட்டுக்கு உதவுதல் ஆகிய நற்குணங்களை அடைய எத்தனையோ அறிஞர்கள், ஞானிகள் பயனுள்ள போதனைகளை வழங்கியுள்ளார்கள். இவற்றை ஒவ்வொருவரும் புரிந்து கொண்டு, முழுமையாகப் பயன்பெறுவதற்குத தற்கால வாழ்க்கை முறைக்கேற்ப தடைமுறைப் பயிற்சிகளாக சாதனை மார்க்கத்தை வகுத்து உலக சமுதாயத்திற்கு வழங்கியுள்ளமை, மகரிஷி அவர்களது சிறப்பாகும். பதினான்கு வயதுக்கு மேற்பட்ட ஆண்/பெண் அனைவருமே எளிதில் செய்து பயன்பெறும் வகையில் மனவளக்கலை எனவும் எளிய முறை குண்டலினியோகம் எனவும் (SKY Simplifed Kundalini Yoga) அழைக்கப்படுகிற மனித வாழ்விற்கு இன்றியமையாத வாழ்க்கைக் கல்வியாக (Education for living) அளிக்கிறார்கள்.

பெண்களுக்கு எவ்வாறு பயன்படுகிறது?

குடும்பக் கடமைகளையும் செய்து கொண்டு பொருள் ஈட்டுவதிலும் ஈடுபடும் பெண்களுக்கு மனவளக்கலை ஒரு வரப்பிரசாதம். சென்னை மாநகரத்தில் மட்டுமின்றி, தமிழ்நாடு மற்றும் அண்டை மாநிலங்களில் பெண்கள்தான் அதிக எண்ணிக்கையில் இந்த யோகப் பயிற்சிகளைக் கற்று பயன்பட்டு வருகின்றனர். குறிப்பாக, சிறிது நேரமே செய்யக்கூடிய காயகல்பப் பயிற்சியின் மூலம் உடல் சோர்வில்லாமல் உயிர் சக்தியைத் தக்கவைத்துக் கொள்ள முடிகிறது. எளிய உடற்பயிற்சியைச் செய்து அனைத்து உறுப்புகளுக்கும் இரத்தம், வெப்பம், காற்று – இவற்றைச் சீராகப் பரப்பிக் கொண்டு, சுறுசுறுப்பாக இயங்க முடிகிறது. தியானம் செய்வதன் மூலம் பேராசை, சினம், கவலை – இவற்றையெல்லாம் சமன் செய்து மன அழுத்தம் (Strees) மன இறுக்கம் (Tension) இவைகளிலிருந்து விடுபட முடிகிறது.

ஒவ்வொரு நாளும் தனது செயல்பாடுகள், தன்னோடு தொடர்புடைய மக்களின் குணநலன்கள் இவற்றைப் பற்றிச் சிந்தித்து (அகத்தாய்வு செய்து) தனது தகுதிக்கேற்ப ஆசைகளை நிறைவேற்றுதல். தன்னால் சரிசெய்ய முடியாததைப் பொறுமையுடன் சகித்துக் கொள்ளுதல், தேவையான அளவுக்குத் தியாக மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளல் போன்ற குணங்களை வளர்த்துக் கொண்டு தனது கடமையைச் சரிவர செய்து மகிழ்ச்சியோடும் நிறைவோடும் வாழ முடிகிறது. இத்தகைய குணநலன் கொண்ட ஒரு பெண்ணுக்குப் பிறக்கும் குழந்தை தெய்வீகக் குழந்தையாக (கருவிலே திருவுடையானாக) இருக்கும்.

1958-ஆம் ஆண்டு மகரிஷி அவர்களால் துவக்கப்பட்ட உலக சமுதாய சேவா சங்கம். கீழே குறிபபிட்டுள்ள முகவரியில் தலைமை இடமாகக் கொண்டு, பொருள் ஈட்டும் நோக்கமின்றி ஜாதி, மத, இன, நாடு, பேதமின்றி அனைத்து மக்களும் பயன்பெறும் வகையில் இப்பயிற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

தலைமை மன்றம்

உலக சமுதாய சேவா சங்கம்,

26, இரண்டாவது கடற்கரைச் சாலை, வால்மீகி நகர், திருவான்மியூர், சென்னை – 600 041. தொலைபேசி எண் : 4411692. பேக்ஸ் : 4456269

e-mail:wcsc@md4.vsnl.net.in

மற்றும் மனவளக்கலை மன்ற அறக்கட்டளைகள்

● அ. ஜஹ்பர் காதர், விளாத்திக்குளம்.

? கண்ணதாசன் ஒரு நல்ல பாடலாசிரியரே தவிர நல்ல கவிஞரே அல்ல என்கிறாரே நா. காமராசன்?

! பாடலுக்கும் கவிதைக்கும் ஓரே மாதிரியான கற்பனை வளமும் ஓசையுணர்வும் தான் அவசியம். கண்ணதாசனின் எத்தனையோ திரைப்பாடல்கள், கவிதை என்று பிரகடனப்படுத்தி எழுதப்பட்டுள்ள கவிதைகளைக் காட்டிலும் கவி நயமும் ஓசை நயமும் உடையவைதான்.

● அவ்வை. கே. சஞ்சீவிபாரதி, அவ்வையார்பாளையம்.

? தொண்டர்கள் விரும்பினால் அரசியலில் ஈடுபடுவேன் என்கிறாரே டாக்டர் இரா. அன்புமணி?

! டாக்டர் இராம்தாஸின் தொண்டர்களில் தலையாய தொண்டர் அன்புமணி என்பதை அகிலம் அறியும்.

● அழகேஷ். ஆ, பூதப்பாண்டி.

? தனியார் தொலைக்காட்சிகள் நடத்தும் போட்டிகள் அறிவுக்கு வேலை கொடுக்குமா, பரிசுக்கு வேலை கொடுக்குமா?

! பரிசுத் தொகை அபரிமிதமாக அமையும் போது அது ஆசையையும் சூதாட்ட மனப்பான்மையையும் வளர்த்து மக்களைக் கெடுக்கும்.

● வளர்மதி ஆசைத்தம்பி, தஞ்சாவூர்.

? 'அ.தி.மு.க. தனித்தே ஆட்சி அமைக்கும்' என்று கூறிய காளிமுத்து, த.மா.கா., பா.ம.கவினர் வயிற்றில் புளியைக் கரைத்திருக்கிறாரே?

! தி.மு.கவும் இதையேதான் கூறும். ஆக, இவர்கள் யோசிக்க வேண்டியது யாரை ஆதரிப்பது தங்களுக்கு நல்லது என்பதையல்ல... யாரை ஆதரிப்பது தமிழகத்துக்கு நல்லது என்பதைத்தான். அப்போது வயிற்றில் பால் வார்த்த மாதிரி இருக்கும்.

● ஜி. ஜி. கிருஷ்ணன், விசலூர்.

? இந்தியாவின் முதல் பெண் செஸ் கிராண்ட்மாஸ்டராக விஜயலட்சுமி இடம்பெற்றிருப்பது குறித்து...?

! தேசிய சாம்பியன் ஆனவுடனேயே அட்டையில் இடம்பெறச் செய்து மகிழ்ந்து கட்டியம் கூறியது கல்கிதான் என்பதை எண்ணிப் பார்த்து மகிழ்கிறோம்; வாழ்த்துகிறோம்.

● என். பாலகிருஷ்ணன், மதுரை - 1.

? பாரிஸ் விமான விபத்து பற்றி...?

! விபத்து கோரம்தான். ஆனால், தொடர்ந்த சுறுசுறுப்பான நடவடிக்கைகள் முன்னுதாரணம்.



• தலையாய தொண்டு!

● க. சரண்யா, சென்னை - 13.

? கதர் வாரியத்தில் ஊழல் நடந்துள்ளதாக அ.தி.மு.க. வழக்கறிஞர் வழக்கு தொடர்ந்துள்ளாரே - இது பற்றி...?

! 'தேர்தல் நெருங்க நெருங்க வழக்குகளுக்குப் பதில்



• கவிதையும்...

கண்ணதாசன் கவிஞரில்லையாமே?



• ...பாடலும்

நீங்கள் கேட்டவை — தராசு

வழக்குகள்' என்று அ.தி.மு.க. சஸ்பென்ஸ் தொடர்கதை எழுதத் தொடங்கியுள்ளது.

● பி. ஜெயப்பிரகாஷ், சர்க்கார்பதி. ✱

? தொண்டர்கள் செய்யும் தவறுகளைத் தண்டிக்காமல், 'ஆர்வத்தால் செய்கிறார்கள். நான் என்ன செய்ய முடியும்?' என்று தலைவர்கள் சொல்வது குறித்து...?

! தொண்டர்கள் மீது செல்வாக்கு செலுத்தி அவர்களைக் கட்டுப்பாட்டில் வைக்கத் தெரியாத தலைவன் தலைவனாக இருக்கவே தகுதியற்றவன்.

● என். மாணிக்கம், மின்னல்.

? இலவச மின்சாரம், சத்துணவு – இவை இரண்டையும் ரத்து செய்தால் எத்தனையோ கோடி நலத் திட்டம் உருவாகும். இதை ஏன் எந்த அரசும் துணிந்து செயல்படுத்தவில்லை?



• விரிந்த ஒளி



• கட்டியம் கூறி...



• சுயவிமர்சனம்!

! இவையே நலத்திட்டங்கள்தானே! எந்த நலத் திட்டத்தையும் இலேசில் வாபஸ் பெற்றுவிட முடியாது. அதே நேரம் இலவசங்கள் காலவரையறையின்றித் தொடர்வது நல்லதல்ல. எனவே காலக்கெடு நிர்ணயித்து பிறகு பொருளாதார ரீதியாக மிகவும் பின்தங்கியவர்களுக்கு மட்டுமே சலுகை விலையில் தரலாம். யாரானாலும் சரி, கொடுத்துத்தான் பெற வேண்டும். பிச்சை பெற விடக்கூடாது.

● எம்.டி. ரவிகாந்த், காஞ்சிபுரம்.

? ஹிஸ்புல் முஜாஹிதீன் என்ற தீவிரவாத அமைப்பு தன் தீவிரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு விட்டு இந்திய அரசுடன் பேச்சு நடத்துவது, காஷ்மீரில் தீவிரவாதம் குறைய எவ்வளவு தூரம் உதவும்?

! வரவேற்க வேண்டிய முடிவு என்றாலும் காஷ்மீர் அரசும் மத்திய அரசும் எச்சரிக்கையுடன்தான் பேச்சு வார்த்தையில் ஈடுபட வேண்டும். பதுங்கிப் பாய்வதும் திட்டமிட்டு ஏமாற்றுவதும் தீவிரவாத அமைப்புகளுக்கு வாடிக்கையான விஷயம்தான்.

● டி. பகபதி, ஊஞ்வேலாம்பட்டி.

? சமீபத்தில் படித்து ரசித்த கவிதைத் தொகுப்பு?

! வத்ஸலாவின் 'சுயம்'. பல நல்ல கவிதைகள் இருந்தன. சுயவிமர்சனம், நேர்மை, எளிமை, முன்னுரையில் ஞானக்கூத்தனின் பாராட்டுடன் விமர்சனக் கருத்தை ஏற்று வெளியிட்டது... எல்லாம் பாராட்டுக்குரியவை.

● வைதேகி மாதவன், ஸ்ரீரங்கம்.

? நோயாளிகளையும் மரணமடைந்தவர்களையும் பார்த்து சன்னியாசி ஆன புத்தர் கோழையா? – திருச்சி வானொலி நிகழ்ச்சி ஒன்றில் இவ்வாறு கூறி, காந்திஜியை ஒப்பிட்டுப் பேசியதைக் கேட்டேன். உங்கள் கருத்து என்ன?

! இந்த ஒப்புநோக்குதலை காந்திஜியே ஏற்க மாட்டார். கஷ்டத்தையே பார்த்திராத சித்தார்த்தனுக்கு முதலில் ஏற்பட்டது அதிர்ச்சி; பின்னர் விசாரம்; அதன் பின்னர் ஞானம். எந்த கட்டத்திலும் கோழைத்தனம் அல்ல.

❏ ரூ. 50 பரிசு பெறுபவர் :
வளர்மதி ஆசைத்தம்பி,
190, ஆறாவது கிராஸ்,
அருளானந்த நகர், தஞ்சாவூர் - 613 007.

✱ ரூ. 25 பரிசு பெறுபவர் :
பி. ஜெயப்பிரகாஷ்,
TNEB குடியிருப்பு,
சர்க்கார்பதி - 642 133
சேத்துமடை (வழி) கோவை மாவட்டம்.

கொதிக்கும் தேயிலைப்

சுற்றுப்புறம் என்னவோ குளிர்ச்சியாய் இருக்கிறது. ஆனால் விவசாயிகள் கொதித்துப் போயிருக்கிறார்கள். தேயிலை விவசாயம்தான் ஒரே தொழில். அதுவே நீலகிரி மாவட்டத்தின் பொருளாதாரமாகவும் விளங்கி வரும் நிலையில், பச்சை தேயிலையின் விலை கடந்த மார்ச் மாதம் முதல் படு வீழ்ச்சி அடைந்ததைத் தொடர்ந்து மாவட்டமே கொதித்துச் சிவந்தது. கடந்த மே மாதம் அரசுப் பேருந்துகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன. தொடர் பஸ் மறியல், கடையடைப்பு, மலர் கண்காட்சி ரத்து, எனத் தொடங்கி, அல்லோலகல்லோலப்பட்டது நீலகிரி. "விவசாயிகள் அரசியல் செய்கிறார்கள், அரசு பார்த்துக் கொண்டு சும்மா இருக்காது"- என்று எச்சரிக்கை விடுத்தது தமிழக அரசு. கையோடு ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு ஒரு ரூபாய் இருபத்தைந்து பைசா மானியம் அளித்தது. யானைக்குச் சோளப் பொறி எதற்கு? என்று விவசாயிகள் கொதித்து, அடுத்த கட்டப் போராட்டத்திற்குத் திட்டமிட்டனர். இதை அறிந்து கொண்ட மத்திய அரசு, மாநில அரசின் அறிவுரையோடு மேலும் மூன்று ரூபாய் மானியம் அறிவிக்க, கிலோவுக்கு எட்டு ரூபாயும் கூட கட்டுப்படியாகாது என்று பஸ் மறியல், ஆர்பாட்டம், காலவரையற்ற உண்ணாவிரதம் என மீண்டும் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். ஸ்பாட்டுக்குச் சென்றோம்.



கலவர முகங்களோடு கோத்தகிரியில் நின்றிருந்த விவசாயிகள் குமுறல்களைக் கொட்டித் தீர்த்தனர். நீலகிரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் செயலாளர் பெல்லி, பாரம்பரிய தேயிலை விவசாயம் பற்றிச் சொன்னார். "நீலகிரி மாவட்டத்தின் மண்ணின் மைந்தர்களான பழங்குடி மக்கள், முப்பது வருடங்களுக்கு முன்புவரை உருளைக்கிழங்கு, கேரட் உள்ளிட்ட ஆங்கிலக் காய்கறிகளை அதிகம் பயிரிட்டு வந்தனர். லேட் பிளேக் என்னும் கொடிய பூசான நோய் தாக்குதலும், விலங்குகளால் ஏற்படும் சேதமும் அவர்களை மனம் தளர வைத்தது. இந்த நேரத்தில்தான், தேயிலை ஏற்றுமதி மூலம் அதிக அன்னிய செலாவணி கிடைக்கிறது என்று சொல்லி, இங்கிருந்த ஒட்டுமொத்த விவசாயிகளையும் தேயிலை பயிரிடும்படி அரசே கட்டாயப்படுத்தியது. அதற்காகத் தேயிலை வாரியத்தை நிறுவி 'உபாசி' என்ற அமைப்பின் மூலம் தேயிலைக் கன்றுகளும், இடுபொருட்களும், பயிர் கடனும் வழங்கினார்கள். பணப்பயிர் என்ற நம்பிக்கையில், விவசாயிகள் தேயிலை பயிருக்கு மாறினார்கள்.

"கோத்தகிரியைச் சுற்றியுள்ள குந்தா அரவேணு உள்ளிட்ட பல பகுதிகளில் சுமார் ஆயிரம் ஹெக்டர் அளவுக்குத் தேயிலை விவசாயம் கொழித்தது. ஆண்டிற்கு ஐம்பது மில்லியன் கிலோ தேயிலையைச் சிறு விவசாயிகள் உற்பத்தி செய்து சாதனை படைத்தனர். இதை நீலகிரியைச் சுற்றியுள்ள தனியார் மற்றும் கூட்டுறவு தொழிற்சாலையில் விற்றுவிடுவார்கள். ஆலை



நடத்துபவர்கள் பதப்படுத்திய தூள் தேயிலை முழுவதையும் குன்னூரில் ஏலம் விடுவார்கள்.

இங்கிருந்துதான் தரவாரியாக வியாபாரிகள் ஏலத்தில் எடுத்துப் போய் அவரவர் பிராண்ட் பெயரில் பேக் செய்து சந்தைக்கு அனுப்புகிறார்கள்.

நீலகிரி தேயிலை விவசாயத்தை நம்பி கிட்டதட்ட ஐந்து லட்சம் தொழிலாளர்களும் அறுபதாயிரம் சிறு விவசாயிகளும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். டாலர் ஏரியா என்று பெயரெடுத்த கோத்தகிரி இன்று சோத்துக்கு லாட்டரி அடிக்கும் ஏரியாவாக மாறி இருக்கிறது. இதே நிலை நீடித்தால் விவசாயிகள், நிலங்களையும், வீடுகளையும் விட்டுவிட்டு, பிழைப்புத் தேடி வெளியூர் போவதைத் தவிர வேறு வழி இல்லை'' என்றவரிடம் பிரச்னை எங்கே தொடங்கியது? என்றோம்.

''இங்கு உற்பத்தி செய்யப்படும் டீ அனைத்தும் சோவியத் ரஷ்யாவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால் அங்கே அரசியல் மாற்றம் வந்தபிறகு டீ ஏற்றுமதியில் பெரும் தேக்கம் ஏற்பட்டது. அடுத்துப் பேரிடியாக எங்களைத் தாக்கியது தேயிலை இறக்குமதிதான். சார்க் நாடுகளில் இருந்து கடந்த ஆண்டு முதல், தரம் குறைவான தேயிலை இறக்குமதி செய்யப்படுகிறது. இறக்குமதி செய்யப்படும் மட்டத் தேயிலையுடன், தரத்துக்காக நீலகிரித் தேயிலையைக் கலந்து, கிலோவுக்கு நூற்று ஐம்பது ரூபாய் லாபத்தில் வியாபாரிகள் 'ரீ எக்ஸ்போர்ட்' செய்யத் தொடங்கி விட்டார்கள். குன்னூர் ஏலத்தில் டீ கொள்முதல் செய்யும், ஹிந்துஸ்தான் லீவர், கிர்நார், பன்சாலி, சாரப், ஜிவி கோகுல், விம்டெக்ஸ், மதுஜெயந்தி, கேஎஸ்ப்கே, டோஸ், ஜெயலட்சுமி உள்ளிட்ட பல முன்னணி தேயிலை வியாபாரிகள், நீலகிரித் தேயிலையைப் பெயருக்கு மட்டுமே கொள்முதல் செய்யத் தொடங்கினர். இதனால் தேயிலையின் ஏலம் பெரும் வீழ்ச்சியைச் சந்தித்தது. எத்தனை ஏற்றம் இறக்கம் இருந்தாலும் ரூபாய் பதினெட்டில் நிலைபெற்று விடும் ஒரு கிலோ பச்சைத் தேயிலையின் விலை கடந்த மார்ச் மாதம், ரூபாய் நான்கு என்ற படுபாதாள நிலையை அடைந்தது.



• மேகலா



• பெல்லி

பிரச்னை!




• அரவேணு விவசாயிகள்

ஒருகிலோ தேயிலை கொய்து எடுக்க, ரூபாய் மூன்று கூலியாகக் கொடுத்து வரும் நிலையில், இடுபொருட்கள், போக்குவரத்து உள்ளிட்ட செலவினங்களும் சேர்த்து, கிலோ ஒன்றுக்கு ரூபாய் இரண்டு வரை கையிலிருந்து கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் தேயிலைக் கொழுந்து முற்றி அழிந்தாலும்

பரவாயில்லை என்று விட்டு விட்டதால், தொழிலாளர்கள் வேலையிழந்தனர். ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு குறைந்தது ரூபாய் பதினைந்து விலை கிடைத்தால் தவிர சமாளிப்பது கடினம்'' என்கிறார் பெல்லி.

அங்கிருந்து புறப்பட்டு, பெரிதும் பாதிக்கப்பட்ட குந்தா, அரவேனு பகுதிகளில் பல விவசாயிகளைச் சந்தித்தோம்.

''தேயிலைக்கு விற்பனை வரி, கொள்முதல் வரி என்று ரூபாய் அறுநூறு கோடி அரசுக்கு வருமானம் கிடைக்கிறது. அதில் இருநூறு கோடியை சிறுவிவசாயிகளுக்கு மானியமாகக் கொடுத்தால் எந்த இழப்பும் இல்லை என்று கூறுகிறார் அரவேனுவில் அரை ஏக்கர் தேயிலை பயிரிடும் அர்ஜுன். ''இலங்கையிலிருந்து முன்னூற்றி ஐம்பது கோடி ரூபாய்க்குத் தேயிலை இறக்குமதி செய்திருக்கிறார்கள். இந்திய அரசு நானூற்றி ஐம்பது கோடி ரூபாய் நிதி உதவி செய்தபோது, அதை ஆயுதம் வாங்க பயன்படுத்துவார்கள் என்று எதிர்த்தவர்கள் இதற்கு ஒன்றும் எதிர்ப்பு கூறவில்லையே!'' என்கிறார் போராட்டக்குழுவின் ஆலோசகர் இரியன்.



''என்னை வர்ணிக்கவே மாட்டேன்றீங்களே... விமலாவோட காதலர் அவளை எப்படி வர்ணிக்கிறார் தெரியுமா...?''

''அதுக்கு என்ன பண்றது... உன்னைக் கண்டாலே எனக்குப் பொய் மறந்து போகுது!''

— அம்பை தேவா

இலங்கையிலிருந்து இறக்குமதி செய்யப்படும் தேயிலையின் அளவு சென்ற ஆண்டைக் காட்டிலும் இவ்வாண்டு குறைவு என்பது அரசின் விளக்கம். நீலகிரித் தேயிலையின் தரம் குறைந்து விட்டதும் விலை வீழ்ச்சிக்கு ஒரு காரணம் என்று அரசு தரப்பிலும், வியாபாரிகள் தரப்பிலும் குற்றச்சாட்டு எழுந்திருக்கிறது. இதை அடியோடு மறுக்கிறார் காமன், பல கறுப்புச் சந்தை வியாபாரிகள், நீலகிரித் தேயிலையை வாங்கி கலப்படம் செய்கிறார்கள். இதைத் தமிழக காவல்துறையே கண்டு பிடித்துள்ளது. தரமில்லை என்று சொல்வது பிரச்னையை திசை திருப்புவதற்கான வழி'' என்று சொல்லும் இவர், தமது மகனுக்கு ஸ்கூல் ஃபீஸ் கட்டுவதற்காகத் தேயிலை தோட்டத்தில் நிற்கும் ஓக் மரங்களை வெட்டி விற்றுவருகிறாராம்.

விவசாயிகளைக் காட்டிலும் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது தொழிலாளர்கள்தான். ''இலை பறிக்கப் போயி பதினைஞ்சு நாளாகுது. சேமிப்புன்னு எதுவுமில்லே... ஏதோ தைரியத்துல பத்து வட்டிக்குக் கடன் வாங்கிட்டோம். உள்ளே அழுதுகிட்டு வெளியே சிரிக்க வேண்டி இருக்கு'' என்று துயரம் கலந்த புன்னகையை ஓடவிடுகிறார் தேயிலை பறிக்கும் கூலித் தொழிலாளி மேகலா.

கொந்தளித்து கிடக்கும் நீலகிரியின் சட்டம் ஒழுங்கிற்கு முழுப்பொறுப்பு வகிக்கும் மாவட்ட ஆட்சியர் என்ன சொல்கிறார்?

''தேயிலை மீதான வணிக வரியை எட்டிலிருந்து நான்கு சதவீதமாகக் குறைத்தது அரசு. மத்திய வணிக வரியையும் இரண்டு சதவீதம் குறைத்துள்ளது. இதைத் தொடர்ந்து மத்திய அரசும் சமீபத்தில் மானியத்தை மேலும் உயர்த்தியுள்ளது. விரைவில் விவசாயிகள் கோரும் மானியம் கிடைக்கும் என்பது உறுதி. அதுவரை விவசாயிகள் கொஞ்சம் அமைதி காக்க வேண்டும்'' என்கிறார்.

தேயிலை இறக்குமதியை முழுவதுமாகத் தடைசெய்து, பச்சைத் தேயிலையின் விலையைப் பதினைந்து ரூபாய்க்கு உயர்த்தினால் ஒழிய பிரச்னை தீரப் போவதில்லை.

'இதே நிலை நீடித்தால் நீலகிரி தேயிலை விவசாயிகள் ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய துர்பாக்கிய நிலை வரும்' என்று அச்சுறுத்துகிறார்கள் சில இளம் விவசாயிகள்.

— ஆர்.சி.ஜெயந்தன்

படங்கள்: **வெங்கடேஷ்**

வெற்றியின் ரகசியம் ஊறுகாய்!

பி.டி.உஷா! லாஸ் ஏஞ்சலஸ் நகரில் நடந்த ஒலிம்பிக்ஸில் மயிரிழையில் பதக்கத்தை நழுவவிட்டாலும், தமது சுயசரிதைக்கு தங்க மங்கை (Golden Girl) என்று பெயரிட்டுள்ளார்! நெஞ்சில் நிற்கும் சில நினைவுகள்.

★ நான் முதலில் பங்கேற்ற தடகளம் என் வீடுதான். போட்டியிட்டவர்கள் என் சகோதரிகள். எங்கள் வீட்டிலே பெரிய மாமரம் ஒன்று உண்டு. மாம்பழ சீசனில், நானும் என் சகோதரிகளும் வீட்டு வாசலில் உட்கார்ந்து கொண்டிருப்போம். 'பொத்' தென்று மரத்திலிருந்து மாம்பழம் விழும் சப்தம் கேட்டவுடன், அனைவரும் எழுந்து ஓடுவோம். யார் முதலில் ஓடிப்போய் எடுக்கிறார்களோ, அவர்களுக்குத்தான் மாம்பழம். இரண்டாம், மூன்றாம் பரிசெல்லாம் கிடையாது. வெறுமனே மாம்பழம் சாப்பிடுவதை விட, இப்படி ஓட்டத்தில் ஜெயித்துக் கிடைக்கிற மாம்பழத்தைச் சாப்பிடுகிற



போது, அதன் ருசியே தனிதான்.

எனக்குப் பதினோரு வயது இருக்கும். படகரா மாவட்டத்தில், பள்ளிக்கூட மாணவ, மாணவிகளுக்கான ஓட்டப் பந்தயத்தில் நான் பரிசு பெற்றேன். எந்த அடிப்படையில், மாவட்ட போட்டியில் கலந்து கொள்ள என்னைத் தேர்ந்தெடுத்தார்கள் என்று எனக்குத் தெரியாது.

★ என் குழந்தைப் பருவம், மிகவும் ஆரோக்கியமானது இல்லை. அடிக்கடி, எனக்கு உடம்புக்கு வந்துவிடுமாம். சனி பிடிப்பது ரொம்ப வாடிக்கையான விஷயம். ஐந்தாவது படிக்கிறபோது, கடுமையான டைபாய்டு காய்ச்சல் வந்து, ரொம்பவே படுத்தியதாக அம்மா சொல்லுவார். அப்போது எங்கள் குடும்பம், பொருளாதார ரீதியிலும், வசதியாக இல்லை. வீட்டில் ஒரு டேபிள் ஃபேன் வாங்கியபோது, எல்லோருக்கும் சொகுசான வாழ்க்கை ஆரம்பித்து விட்டதுபோல சந்தோஷம். ஆனாலும் சாப்பாட்டுக்குப் பஞ்சம் இல்லை.

★ தடகள போட்டிக்காக வெளிநாடுகளுக்குப் போகிறபோது, எங்களுக்கு உணவு ஒரு பிரச்னைதான். எனவே, கையோடு அரிசி, பருப்பு, பப்படம் வரை அனைத்து ஐட்டங்களையும் கொண்டு போய் விடுவோம்.

லாஸ் ஏஞ்சலஸ் நகரில் ஒலிம்பிக் போட்டிக்குப் போயிருந்தபோது, டைனிங் ஹாலில் சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். ஒரு இத்தாலிய கோச், என் ஊறுகாய் பாட்டிலைச் சுட்டிக் காட்டி, 'இதுதான் உன் வேகத்தின் ரகசியமா?' என்று கேட்டார். நான் அவர் தமாஷுக்குக் கேட்பதாக நினைத்து 'ஆமாம்' என்று கேஷுவலாக பதில் சொல்லிவிட்டேன். அவரோ, 'எங்கே ஒரு துண்டு கொடு பார்க்கலாம்' என்று கேட்க, நானும் ஒரு துண்டு மாங்காய் ஊறுகாய் கொடுத்தேன். அதை வாயில் போட்டதுதான் தாமதம். காரம் தாங்காமல் குதிக்க ஆரம்பித்துவிட்டார். தண்ணீர், ஜூஸ் என்று மாறி, மாறிக் குடித்து காரம் தணித்துக் கொண்டது மறக்க முடியாத ஒரு சம்பவம்.

எஸ். சந்திரமௌலி

படம் : **எம்.ஆர். வெங்கடரமணன்**



கதை என்றால் ஒரு முடிச்சு விழ வேண்டும். பின்பு அது அவிழ வேண்டும். இதுதான் ஒரு கதையின் அடிப்படை இலக்கணம். நூறு படங்கள் இயக்கிய இராம. நாராயணனுக்கு இது கூட தெரியவில்லையே என்று யாரும் சொல்லிவிடக் கூடாது இல்லையா? அதனால் படம் முடிவதற்குப் பத்து நிமிடம் முன்பு 'டபக்'என்று ஒரு முடிச்சை போட்டு 'படக்' என்று அதை அதே வேகத்தில் அவிழ்த்து விடுகிறார்.

அதாவது, பொறுப்பில்லாத தகப்பன் மணிவண்ணன், அவரது மனைவிகள், எக்கச்சக்க குழந்தைகள்- இந்தக் குடும்பத்தின் தலைப் பிள்ளை அலையஸ் சுமைதாங்கி அலையஸ் தியாக சிகரம் கார்த்திக். இதை நமக்கு விளக்கக்......கிச் சொல்வதற்கு டைரக்டர் எடுத்துக் கொண்டிருக்கும் டைம் இரண்டு மணிநேரம். பாக்கி பத்து நிமிடங்களில் தங்கைக்காக தன் குழந்தையையே தியாகம் செய்த கார்த்திக், மாப்பிள்ளை தியாகு அந்தக் குழந்தையை விற்கத் துணியும்போது விழித்துக் கொண்டு, எதிர்த்து, விஷம் கலந்த முட்டைப் பிரியாணியை சாப்பிட்டு, வாந்தி எடுத்துக் கொண்டே எதிரிகளை வீழ்த்தி, ஹாஸ்பிடலில் அனுமதிக்கப்பட்டு குழந்தையுடைய அழுகுரலின் மகிமையால்(?) பிழைத்து, கதையின் முடிச்சை அவிழ்த்து நம் வயிற்றில் பாலை வார்த்து–அடா! அடா! அடா! மெய்சிலிர்க்க வைக்கிறார்கள் போங்கள்!

கார்த்திக்கை ஒரு தலையாக காதலிக்கும் மந்த்ரா, கார்த்திக்கும் அவரின் காதலி கௌசல்யாவும் ஆடிப்பாடுவதாகக் கனவு காண்கிறாராம். அதே பாடலில் இவரும் சந்தோஷமாக சேர்ந்து ஆடுகிறாராம்– என்ன ஒரு புதுமை!

பழைய டியூன்களை புது பாடல்களுக்குத்தான் டப்பி அடிக்க வேண்டுமா?– ஏன் பாக்கிரவுண்டு மியூஸிக்கிற்கே டப்பி அடிப்போம் என்று உரிமைக்குரல் கொடுத்து புது 'டிரெண்டு'க்குத் தேங்காய் உடைத்திருக்கும் எஸ்.ஏ. ராஜ்குமார் வாழ்க!

கௌசல்யா அம்மா– புருவங்களை சுருக்கிக்கொண்டு முறைக்கும் உங்கள் எக்ஸ்ப்ரெஷன் அலுத்து சலித்து புளித்துப் போய்விட்டது. அதற்குக் காசியில் போய் ஒரு முழுக்கு போட்டுவிட்டு அடுத்த கால்ஷீட் வேலையைப் பாருங்கள்!

கார்த்திக்கு- அப்பனே–இந்தப் படமெல்லாம் தேவையா?

— கிருஷ்ணா சிதம்பரம்

Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager, Subscription and Advertisement : 2345623; Chief Administrative Officer : 2345622; Fax: 2345621.
Annual Subscription : India : Rs. 275/-; Overseas : Rs. 2000/- (Air Mail)
Half Yearly Subscription : India : Rs. 140/-; Overseas : Rs. 1000/- (Air Mail)

தமிழ்நாடு அரசு
பரிசுச் சீட்டுத்துறை

பற்பல குலுக்கல்கள் பற்பல லட்சாதிபதிகள்

முதல் பரிசு:

ரூ. 5 லட்சம்

திங்கள்
கர்ணன்

செவ்வாய்
பணத்-
தோட்டம்

புதன்
காவேரி


வியாழன்
தமிழ்மகள்

வெள்ளி
வைகை

வரிசைகள்: 5

குலுக்கல் நேரம்: மாலை 3.00 மணி

பரிசுச் சீட்டின் விலை ரூ.2/-(M.R.P)



ஆணையர், தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டுத்துறை
சயர் மேன்சன், 2வது தளம், 621, அண்ணா சாலை,
சென்னை 600 006 தொலைபேசி 8292512

DIPR/1168/DIS/2000

விழுந்தால் வீட்டிற்கு! விழாவிட்டால் நாட்டிற்கு! தமிழ்நாடு அரசு பரிசுச் சீட்டையே வாங்கிடுவீர்!!

Also available on the internet : www.tn.gov.in / chennaionline.com /
aaraamthinai.com / southindia.com

Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered No. TN / Chief PMG-141 / 2000 *
Licensed to post without prepayment under PMG's Licence No. WPP 37 * Registered as a Newspaper in Srilanka

